# ஞானச்சுடர்

## சந்நிதியான் ஆச்சிரமம்

மார்கழி

2013




வெளியீடு:

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# குறள்வழி

**விளிந்தாரின் வேறெல்லர் மன்ற தெளிந்தாரில்**
**தீமை புரிந்தொழுகு வார்.**

**பொருள் :** தன்னைச் சந்தேகப்படாதவனுடைய மனைவியிடத்திலே பாவஞ் செய்தலை விரும்பி ஒழுகுவார் உயிரோடு இருப்பவ ராயினும் இறந்தவராவர்; இது உறுதி.

(143)

**எனைத்துணைய ராயினும் என்னாம் தினைத்துணையுந்**
**தேரான் பிறனில் புகல்.**

**பொருள் :** தமது குற்றத்தைச் சிறிதளவும் அறியாதவராய் அடுத்தவன் வீட்டில் நுழைகின்றவனது பெருமை எவ்வளவு பெரிதா யினும் இழிவைத் தரும்.

(144)

---

# நற்சிந்தனை



## மறப்பேனோ குருநாதன் தன்னை

### முத்தி நல்குமே

### குறள் வெண்செந்துறை

சாவதும் பிறப்பதுந் தவிர்த்தெனை யாண்டான்
போவதும் வருவது மிலாப்புங் கவனே 31

சித்தத்தி னுள்ளே தித்திக்குந் தேனைப்
பித்தர் அறிவரோ பேசுமின் பேசுமின் 32

நாளுக்கு நாளாக நாட்கள் கழிந்தன
பாழுக் குழைத்துப் பயனற் றேனே 33

ஐந்தெழுத் துள்ளே யனைத்தையுங் கண்டேன்
சஞ்சலந் தீர்ந்தேன் தனிமைபெற் றேனே 34

நஞ்சணி கண்டனை நான்முகன் மாலிவர்
அஞ்சலி செய்து மறிந்தில ராமே 35

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர்



வெளியீடு:
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





| | | |
|---|---|---|
| ஆற்றங்கரை வேலவனின்... | இ. ஸ்ரீதரன் | 01 -03 |
| திருவண்டப்பகுதி | சு. அருளம்பலவனார் | 04 -08 |
| தைப்பூச நன்னாள் | ஆ. இராசரெத்தினம் | 09 - 14 |
| கந்தரநுபூதி | வாரியார் சுவாமிகள் | 15 -17 |
| கணவர்க்குத் தோன்றாத... | நா. நல்லதம்பி | 18 -19 |
| வட இந்திய தல யாத்திரை | செ. மோகனதாஸ் சுவாமிகள் | 20 -23 |
| வரதா முருகா மயில்... | திருமதி சி. சறோஜினிதேவி | 24 -26 |
| ஸ்ரீ ரமண நினைவலைகள் | - | 27 -29 |
| மனித வாழ்க்கையில்... | கு. கோபிராஜ் | 30 -32 |
| நித்திய அன்னப்பணி | - | 33 -34 |
| சக்தியின் சொரூபம்... | பா. சுதாகரன் | 35 -37 |
| காளமேகம் பாடல்கள் | - | 38 -41 |
| சிறுவர் கதைகள் | - | 42 -44 |
| சைவத் திருக்கோயிற்... | கா. கைலாசநாதக்குருக்கள் | 45 -48 |
| ஆன்மீகம் மிளிரும்... | மாதாஜி | 49 -51 |
| கண்டோம் கதிர்காமம் | கவிமணி அன்னைதாசன் | 52 -54 |
| அன்பே சிவம்... | செ. பாலச்சந்திரன் | 55 -58 |
| சைவ சமய வினாவிடை | ஆறுமுகநாவலர் | 59 -60 |
| திருவாசக விழா | - | 61 -65 |
| தமிழகத் திருக்கோயில்... | வல்லையூர் அப்பாண்ணா | 66 -68 |



**அன்பளிப்பு: மலர் ஒன்று 30/= ரூபா**

**சந்நிதியான் ஆச்சிரம**

**சைவ கலை பண்பாட்டுப் பேரவை**

**தொலைபேசி இலக்கம்: 021 321 9599, 021 226 3406**

**அச்சகம்: சந்நிதியான் ஆச்சிரமம்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர்
# கார்த்திகைமாத வெளியீடு

## வெளியீட்டுரை:-

கார்த்திகைமாத ஞானச்சுடர் மலருக்கான வெளியீட்டுரையை திரு ச. நவரத்தினராச வேல் (இளை. அதிபர்) அவர்கள் நிகழ்த்தினார்கள்.

அவர் தனது ஆரம்ப உரையில், சந்நிதியான் ஆச்சிரமமானது பல்வேறு சேவைகள், பணிகளைச் செய்து வருகின்றது. அந்த வகையில் ஞானச்சுடர் மலர் வெளியீடும் ஒன்றாகும். இம்மலரானது பல்வேறு அம்சங்களைத் தன்னகத்தே கொண்டு மாதாமாதம் கிரமம் தவறாது வெளிவருகின்றது என்று சபையில் இருந்த அடியார்களுக்கு எடுத்துக் கூறினார்.

அடுத்து தனது உரையில் "பசித்தோர் முகம்பார்" என்ற வாக்கிற்கிணங்க ஆச்சிரமமானது பசித்துவரும் அடியார்களுக்கு இல்லை என்று கூறாது உணவை வழங்கி அவர்களது பசிப்பிணியைப் போக்கி வருவதோடு, ஆச்சிரமத்தில் இடம்பெறும் சேவைகள், பணிகள் யாவும் சிறப்புற அமையவேண்டும் என்று கூறித் தனது வெளியீட்டுரையை இனிதே நிறைவு செய்தார்.

## மதிப்பீட்டுரை:-

191ஆவது ஞானச்சுடர் மலருக்கான மதிப்பீட்டுரையை திரு செ. பரமேஸ்வரன் (அதிபர்) அவர்கள் நிகழ்த்தினார்கள்.

அவர் தனது ஆரம்ப உரையில் ஞானச்சுடர் மலரை மதிப்பீடு செய்வதில் நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். மேலும் இச்சுடரானது அழகிய அட்டைப் படத்துடனும், கட்டுரைகள், கவிதைகள், பாடல்கள், பொன்மொழிகள் எனப் பல்வேறு அம்சங்களைத் தன்னகத்தே கொண்டு வெளிவருகின்றது. அத்துடன் ஞானச்சுடர் உலகம் தழுவிய நிலையில் இருக்கின்றதோடு பிற மதத்தவர் மத்தியிலும் திகழ்கின்றது என்று கூறினார்.

அடுத்து அவர் தனதுரையில், ஞானச்சுடர் மலரின் அட்டைப் பகுதியில் உள்ள வாராந்த நிகழ்வு என்ற விடயத்தின்மூலம் ஒவ்வொருவரும் தமது திறமைகளை கூச்சமின்றி வெளிப்படுத்தி வருகின்றமையைக் காணலாம் என்று சபையில் இருந்த அடியார்களுக்குக் கூறினார்.

மேலும் ஞானச்சுடர் மலர் பற்றிய கருத்துரைகளை சபையில் இருந்த அடியார்கள் முன்வந்து கூறினார்கள். அந்தவகையில் "ஞானச்சுடர் மலரானது சைவர்களின் அரிய பொக்கிஷம்" என்ற தலைப்பினை மையமாகக் கொண்டு பார்வையாளராக வருகைபுரிந்த ஞானச்சுடர் வாசகர்களின் மூவர் வ. தம்பையா, சு. தில்லையம்பலவனார், சி. நாகலிங்கம் போன்றோர் மலர் பற்றிய தமது கருத்தை சபையில் உள்ளோருக்கு கூறினார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடர் தரும் தகவல்

யுத்தம் உட்பட பல்வேறு வழிகளிலும் பாதிக்கப்பட்டுள்ள சிறுவர்களை, அந்தப் பாதிப்புகளிலிருந்து மீட்டெடுக்கும் கடமை நம் அனைவருக்கும் உண்டெனினும், நம்மில் அநேகர் இந்த விடயங்களில் ஆர்வம் இல்லாதிருப்பதையே காண்கிறோம்.

இந்த விடயத்தில், கிளிநொச்சி மகாதேவா ஆச்சிரம சிறுவர் இல்லம் ஆற்றிவரும் சேவை அனைவரையும் திரும்பிப் பார்க்க வைத்துள்ளது. சிறுவர் - சிறுமியர் என 326பேரை ஆச்சிரமம் பராமரிப்பதென்பது ஒரு சாதாரண விடயமல்ல. அந்தப் பிள்ளைகளின் கல்வி - விளையாட்டு - கலை கலாச்சார நிகழ்வு - உணவு - உடை - உறையுள் என நாளாந்தம் 65,000 ரூபாவரை செலவு செய்து, பிள்ளைகளின் தேவைகளை நிறைவாகச் செய்து வருவது இமாலய சாதனையாகும். இந்த வெற்றிக்காக ஓய்வின்றி உழைத்துவரும் மகாதேவா ஆச்சிரமச் சிறுவர் இல்லத் தலைவர் திரு தி. இராசநாயகம் அவர்களும், அவருக்குத் துணை நிற்கும் செயற்குழு உறுப்பினர்களும் வெகுவாகப் பாராட்டப்பட வேண்டியவர்களாகும்.

மகாதேவா ஆச்சிரமத்தில் அதிகரித்துவரும் தேவைகளைக் கருத்திற்கொண்டு, யாழ் வணிகர் கழகம், தமது வர்த்தகங்களின் சொந்த நிதியிலிருந்து ரூபா 23 மில்லியன் செலவு செய்து ஒரு புதிய கட்டிடத்தினை அமைத்துக்கொடுத்து, “தமது உதவிகள் தொடரும்” என்ற உறுதியினையும் வழங்கியுள்ளார்கள். இந்த உயரிய பணிக்காக உழைத்த யாழ். வணிகர் கழகத் தலைவர் திரு இ. ஜெயசேகரம் அவர்களையும், நன்கொடையளித்த யாழ். வர்த்தகர்களுக்கும் எமது உளமார்ந்த பாராட்டுக்கள்.

யாழ். வணிகர் கழகத்தின் முன்மாதிரியினை வட பகுதியில் அந்தந்த ஊரிலுள்ள வர்த்தகர் சங்கங்களும் பின்பற்றினால், எவரின் தயவினையும் எதிர்பாராமல், நாமே நமது சமுதாயத்தை கைதூக்கிவிட முடியும். செய்வார்களா?

மகாதேவா ஆச்சிரமப் பணிகள் தொடரட்டும்.

யாழ் வணிகர் கழக அறப்பணிகள் வளரட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானச்சுடர் 2013 மார்கழிமலர்

# கருணையே வடிவான சந்நிதிக் கந்தனிடம் நல்ல தருணமாமிப்போது தூது விட்டோம்

## இனிய தென்றலே!

மெல்லெனவே வீசினிய மென்மை தென்றற் காற்றே
மேவித் தொண்டை மானாற்றில் விளங்குகு மரனுக்கே
கல்லெனவே எம்மவர்கள் கையிற்பொரு ளின்றி
காப்பதற்கும் வழியின்றி கற்றோர் முதல் மற்றோர்
சொல்லரிய வறுமையினால் சொல்ல ஆளும் இன்றி
சுழலுகின்ற தன்மை யெல்லாம் சுற்றியவர்க் குரைத்து
வல்ல அவர் சொல்லு முரை வாய்ப்பாகக் கொண்டு
வந்திடுவீர் எங்கள் சிந்தை வாடாமல் தானே

**நம்மவர் துன்பமெல்லாம் கேட்டான் அவனே காப்பான்**

ஆறிரண்டு தோளுடையான் மூவிரண்டு முகத்தான்
அன்பினடி யவர் குறைகள் அனைத்துமொன்று விடாமல்
சுவறுகிளி, மேகம் வண்டு, குலவும் தென்றல் குரலால்
குறித்த மக்கள் படுந்துயரம் கொள்ள நன்று கேட்டே
வேறுபட விடமாட்டேன் விசனமெல்லாம் ஒழியின்
மேன்மக்காள் துன்படையீர் என்பது போல் கரத்தால்
ஆறுதல் சொல் பவர்போல் அபயம் காட்டி நின்றான்
அன்னவன் சொல் தூதுரையால் அறிந்தோம் காப்பான் அவனே.

## பிரார்த்தியுங்கள்

சத்தியத்தை நாமெல்லாம் தனியாய்க் கடைப்பிடித்தே
சார்ந்துவரும் நாள்செல்வச் சந்நிதியான் பொறுப்பில்
புத்தியாக விட்டிடுவீர் பொறுமையாக இருப்பீர்
போற்றியவன் பாதமலர் பொழுதெல்லா மெண்ணி
உத்தமமாம் பிரார்த்தனையில் உள்ளிநிற்ப் ரதனால்
உறுதியான நன்மையெல்லாம் உறுதியாகக் கிடைக்கும்
சித்தமெல்லாம் அமைதியுடன் சென்றடங்கி கிடப்பீர்
செல்வச்சந் நிதியானது திருவாக்கைக் கொள்ளீர்

## பஞ்ச மாயினும், அஞ்சலெனப் பணிசெய்யும் சந்நிதியான் ஆச்சிரமம்

சண்முகன் விரும்புஞ் செல்வச் சந்நிதி முன்னே வைகும்
புண்ணிய ஆச்சிரமப் புகழ்சைவப் பேரவை யோர்
கண்ணிய மாய்நடத்தும் கருதன்னப் பணியு மற்றும்
மண்ணிலே ஓங்கி வாழ்க, வளர்ப்பாரை வாழ்த்துவோமே.

-முதுபெரும் புலவர் வை.க. சிற்றம்பலம்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மார்கழி மாத சிறப்புப்பிரதி பெறுவோர் விபரம்

**அ. தபேசன்**
(இரசாயனவியற்துறை, யாழ். பல்கலைக்கழகம்)

**மு. சுஸ்ருதன்**
(சிறாம்பியடி வீதி, யாழ்ப்பாணம்)

**வே. சம்பந்தநாதன்**
(கிராமசேவகர், புன்னாலைக்கட்டுவன்)

**த. வயித்திலிங்கம்**
(திருநெல்வேலி)

**சங்கரப்பிள்ளை இரத்தினம்**
(கிருஸ்ணா மில், சாரையடி)

**திருமதி திருச்செல்வம் விஜிதா**
(கூவில், புலோலி தெற்கு)

**செ. சின்னத்துரை**
(ஆசிரியர், மகாத்மாலேன், நெல்லியடி)

**சி. வீரசிங்கம்**
(நீதிமன்ற பதிவாளர், கரவெட்டி)

**செ. சுரேந்திரா**
(சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர், அல்வாய்)

**சி. சந்திரசேகரம்**
(திருநெல்வேலி, யாழ்ப்பாணம்)

**K. ஸ்கந்தபாபு**
(**H.N.B.** கிளை, நெல்லியடி)

**க. நடராசா**
(ஓட்டுமடம், யாழ்ப்பாணம்)

**மா. மகாலிங்கம்**
(பழைய பொலிஸ் ரேசன் வீதி, ஆனைக்கோட்டை)

**சி. வேலாயுதம்**
(கந்த உடையார் ஒழுங்கை, பருத்தித்துறை)

**திருமதி புனிதவதி சிவசுப்பிரமணியம்**
(சுழிபுரம் மேற்கு)

**S. சிவலிங்கராசா**
(முதுநிலை விரிவுரையாளர், பல்கலைக்கழகம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கிருபைநாதன் அஜந்தன்**
(இணுவில் மேற்கு)
**பரமநாதன் மயூரன்**
(மயிலணி வீதி, சுண்ணாகம்)
**கணேசராஜா நிர்மலராஜன்**
(சண்டிலிப்பாய் மேற்கு, சண்டிலிப்பாய்)
**திருமதி த. தவேந்திரன்**
(ஆஸ்பத்திரி வீதி, சுண்டுக்குளி)
**க. செல்லத்துரை**
(விஷ்ணு ஹாட்வெயர்ஸ் ஸ்ரோர்ஸ், ஆவரங்கால்)
**சுவாமிநாத இராஜேந்திரக்குருக்கள்**
(நீர்வேலி)
**அ. பஞ்சாபகேசசர்மா**
(ஆவரங்கால்)
**A.T. சிவனேசபிள்ளை**
(ஞானத்தில்லை, இடைக்காடு)
**சிதம்பரி சிவபாதம்**
(மூத்தநயினார் கோயிலடி, ஆனைக்கோட்டை)
**இ. வசந்தகுமார்**
(மானிப்பாய் வடக்கு)
**ச. சசிகரன்**
(முருகமூர்த்தி வீதி, நெல்லியடி)
**S. சுப்பிரமணியம்**
(A.G.A. லேன், நெடியகாடு)
**சி. சிவனேசன்**
(கவிஞர் செல்லையா வீதி, அல்வாய்)
**திருமதி சிவநாயகி கந்தசாமி**
(வசந்தகம், இமையாணன்)
**நா. விக்னேஸ்வரன்**
(கோகுலம், சுதுமலை)
**தி. சிவபாதசுந்தரம்**
(உயரப்புலம், ஆனைக்கோட்டை)
**ந. சிவராஜா**
(குமரக்கோட்டம், கோண்டாவில்)
**சு. ஸ்ரீஸ்கந்தராசா**
(பலாலி வீதி, திருநெல்வேலி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சி. இரத்தினசபாபதி**
(கன்னாதிட்டி ஒழுங்கை, யாழ்ப்பாணம்)
**ஸ்ரீரஜனி அமரசிங்கம்**
(பொதுநூலகம், அச்சுவேலி)
**S.R. சரவணபவன்**
(பிள்ளையார் கோயிலடி, தாவடி)
**க. வாமதேவன்**
(பஜனைச்சபை, வழக்கம்பரை)
**திருமதி ச. செல்வறஞ்சனா**
(சுண்ணாகம் கிழக்கு)
**S. மனோகரன்**
(மாதா கோயிலடி, கோப்பாய்)
**சு. இலங்கநாயகம்**
(கைதடி தென்கிழக்கு, கைதடி)
**நடராஜா சறோஜா**
(குடும்பநலசேவை உத்தியோகத்தர், தெல்லிப்பழை)
**த. சுகந்தன்**
(நீர்வேலி வடக்கு, நீர்வேலி)
**கந்தையா காங்கேசன்**
(பண்ணாலை, தெல்லிப்பழை)
**சி. சரவணப்பெருமாள்**
(மாணிக்கவளவு, கரணவாய்)
**வே. கிருஷ்ணபிள்ளை**
(C.T.B., நெசவுசாலையடி, கரணவாய்)
**S. நவரெட்ணம்**
(கெருடாவில் வடக்கு, தொண்டைமானாறு)
**S. சத்தியமூர்த்தி**
(காட்டுவளவு, வல்வெட்டித்துறை)
**சு. சிவலிங்கம்**
(குகன்குடிசை, பொலிகண்டி)
**பா. பாலச்சந்திரன்**
(சண்முகபவனம், மயிலணி)
**செ. அரியானந்தம்**
(வன்னியசிங்கம் வீதி, தாவடி வடக்கு)
**N. குணரெட்ணம்**
(புன்னாலைக்கட்டுவன் தெற்கு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**V. சிவனேசன்**
(கமலை, மானிப்பாய் வீதி)
**க. முருகானந்தன்**
(கட்டுடைச்சந்தி, மானிப்பாய்)
**செ. உலகநாதபிள்ளை**
(வியாபாரிமூலை, பருத்தித்துறை)
**தம்பன் இரத்தினசிங்கம்**
(நாவற்காடு)
**நமசிவாயம்பிள்ளை சிவனருட்காந்தி**
(மானாங்கானை, வல்வெட்டித்துறை)
**திருமதி இ. தம்பிராசா**
(குணயாவளவு, ஈவினை)
**இ. நடராசா**
(தாவடிச்சந்தி, கொக்குவில்)
**R. நந்தகோபால்**
(K.K.S வீதி, யாழ்ப்பாணம்)
**சி. சிவசுப்பிரமணியம்**
(ஆனந்தநிலையம், கரவெட்டி)
**இ. ஈஸ்வரகுமாரன்**
(ஐயனார் கோயிலடி, யாழ்ப்பாணம்)
**திருமதி கமலா குணரெத்தினம்**
(வட்டுக்கோட்டை)
**திருமதி சத்தியவாணி நந்தகுமார்**
(நவாலி, மானிப்பாய்)
**கந்தையா செல்வக்குமார்**
(புத்தூர் கிழக்கு, புத்தூர்)
**மு. மகேந்திரன்**
(யாழ்ப்பாணம்)
**சோ. இராசலிங்கம்**
(ஆவரங்கால், புத்தூர்)
**சோமசுந்தரம் செல்வசுந்தரம்**
(மீசாலை கிழக்கு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியின் 89ஆவது பிறந்தநாள் அறக்கொடை விழா



அன்னை சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக் குட்டி அவர்களின் 89ஆவது பிறந்தநாள் விழா, துர்க்காதேவி தேவஸ்தானத்தில் 07.01.2014 இல் "அறக்கொடை விழாவாக" நடை பெற ஏற்பாடகியுள்ளது.

அன்னை அவர்கள் துர்க்காதேவி தேவஸ்தான தலைமைப் பொறுப்பினை ஏற்றுக்கொண்டது முதல் கோவிலின் பூசைகள், விழாக்கள், பணிகள் மேன்மை பெற்றதுடன், அவர்களினால் ஆரம்பிக் கப்பட்ட ஆதரவற்ற சைவப் பெண் கள் சிறுமியர் இல்லம், சைவ மூதாட்டி களின் ஆதரவு மையம் ஆகியவை, இன்று வளர்ந்து விருட்சமாகி ஆண்டு தோறும் பல லட்சம் ரூபாவினை வாரி வழங்கும் அற நிலையமாக தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானம் இன்று திகழ் கின்றது.

ஆண்டுதோறும் அன்னையின் பிறந்தநாள் பரிசாக, பல்வேறு அறக்கொடைப் பணிகளிலும், சான்றோர் கௌரவிப்பிலும் ஈடுபட்டு வரும் அற நிலையச் சபையினரும், அதன் தலைவர் கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்களும் வெகுவாகப் பாராட்டப்பட வேண்டியவர்களாகும்.

யாழ் போதனா வைத்தியசாலை இரத்த சுத்திகரிப்பு பிரிவு, தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை சிறுவர் விடுதிப் பராமரிப்பு, யாழ் கல்வி வலய பாடசாலைகளில் க.பொ.த. சாதாரண வகுப்பு மாணவர்களுக்கு (அவர்கள் கல்வித் தரத்தினையும் வறுமை நிலையையும் கருத்தில் கொண்டு) நிதி உதவி என அன்றைய அறக்கொடை விழா, பல லெட்சம் ரூபா நிதி உதவி புரியும் பணக்கொடை விழாவாக நடைபெற விரிவான ஏற்பாடுகள் நடைபெற்றுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதைவிட, மூத்த இசைக்கலைஞர், மூத்த ஊடகவியலாளர், தமிழ் இலக்கிய எழுத்தாளர்கள் எனப் பல்வேறு பிரிவினரும் கௌரவிக்கப்பட்டு, “சிவத்தமிழ்ச் சான்றோர்” விருது வழங்கும் நிகழ்வும், அன்றைய விழாவின் முக்கிய அம்சமாகும். “சிவத்தமிழ்ச் சான்றோர் விருது பெறும் தகைமையாளர்கள்.

| | |
|---|---|
| வைத்திய கலாநிதி கந்தையா மாணிக்கம் | - உசன் |
| உயர்திரு நாகலிங்கம் தவமணிநாயகம் | - மல்லாகம் |
| கலாபூஷணம் சுப்பையா கணபதிப்பிள்ளை | - சுழிபுரம் |
| திருமதி அன்னலட்சுமி இராஜதுரை | - திருநெல்வேலி |
| உயர்திரு நாகமுத்து நல்லதம்பி | - மட்டுவில் |

ஆகிய ஐந்து தகைமையாளர்களையும் சந்நிதியான் ஆச்சிரமம் நிறைவோடு வாழ்த்தி நிற்கிறது.

அன்னை புகழ் வாழ்க!

அறநிலையச் சபையினரின் பணிகள் மென்மேலும் வளர்க!!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆற்றங்கரை வேலவனின் அருள்மகிமை

– திரு இராசையா ஸ்ரீதரன் அவர்கள் –



உலகெலாம் நிறைந்து விளங்குகின்ற எல்லாம்வல்ல பரம்பொருளான சிவபெருமானின் திருக்குமாரன் முருகப்பெருமான் தம்மை வழிபடும் அடியார் பெருமக்களின் குறை தீர்த்து அருள்பொழிய எழுந்தருளி வீற்றிருக்கும் புண்ணியதலம்தான் ஸ்ரீ செல்வச்சந்நிதி. இத்திருத்தலம் யாழ் குடாநாட்டிலே தொண்டைமானாற்றிலே அருள்கொழிக்கும் ஓர் ஆலய மாக அழகாக அமைந்திருக்கின்றது; அது ஓர் அருமையான ஆலயம்.

இந்த ஆலயத்தில் எழுந்தருளி வீற்றிருந்து அடியார்களுக்கெல்லாம் அருள்மழை பொழியும் ஆற்றங்கரை வேலவனின் அருள்மகிமை சொல்லில் அடங்காது. அருளே வடி வாக, அழகே உருவாக, அன்பே திருவாகவுள்ள வேலவன் அழுது தொழுது நின்று தம் வாழ்வின் துன்பங்களையெல்லாம் நீக்கி இன்பவாழ்வு தரவேண்டுமென்று கேட்கும் அன்புள்ளங்களை அவன் ஒருக்காலும் கைவிடமாட்டான்; நம்பியவர்களைக் காப்பாற்றியே தீருவான்.

ஆற்றங்கரை தன்னில் வீற்றிருக்கும் வேல் அருள்புரியும் சக்திவேல்; வினையறுக்கும் வெற்றிவேல்; பகை விலக்கும் வீரவேல். இந்த ஆலயத்தில் உள்ள வேல், பல்கோடி சூரியப் பிரகாசமுள்ள ஒளிமயமான அருள் வடிவான சித்திதரும் வேலாகும். "வேண்டுவார் வேண்டுவதை ஈந்தருளும் ஞானவேலை" உண்மையான பக்தியுடன் கரங்கூப்பிச் சிரந் தாழ்த்திச் சிந்தித்து வந்தித்துச் சேவித்து நின்றால் நம் வாழ்வில் மங்களம் பொங்கும்; கேட்பது கிடைக்கும்; நினைத்தது நடக்கும்; வாழ்வது சிறக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மூவிரு முகங்கள் போற்றி! முகம்பொழி கருணை போற்றி! ஏவருந் துதிக்க நின்றவீராறு தோள்கள் போற்றி! காஞ்சிமாவடி வைகுஞ் செவ்வேள் மலரடி போற்றி! அன்னான் சேவலும் மயிலும் போற்றி! திருக்கைவேல் போற்றி போற்றி" என்று உள்ளமுருகி வேண்டி நிற்கும் கள்ளமற்ற நல்லுள்ளங்களை இந்த ஆற்றங்கரையான் இன்ப சாகரத்தில் ஆழ்த்துவான்.

அருள்கொழிக்கும் இந்தச் செல்வச்சந்நிதியில் கால் அடியெடுத்து வைப்பதற்கு நாம் கொடுத்து வைத்திருக்க வேண்டும். இந்த வேலவன் குடியிருக்கும் கோயிலுக்கு வர பூர்வ ஜென்ம புண்ணியம் தேவை. நாம் நினைத்த வண்ணம் உடனே வந்துவிட முடியாது. "அவனருளாலே அவன் தாள் வணங்கி" என்று மாணிக்கவாசகர் சிவபுராணத்திலே திருவாசகங் கூறியமை போன்று ஆற்றங்கரையில் வீற்றிருக்கும் வேலவனைத் தரிசிப்பதற்கும் அந்த வேற் பெருமானின் திருவருள் நிச்சயம் வேண்டும்.

முத்தமிழால் வைதாரையும் வாழவைப்பவன் முருகன். தமிழே வடிவான அருட் குமரனின் அருள்மகிமை அனுபவித்தவர்களுக்கு மட்டுமே புரியும். யாமோதிய கல்வியும் எம் அறிவும் தாமே பெற வேலவர் தந்ததனால்" என்பது கந்தரனுபூதி. அருணகிரிநாதர் திசைமாறிப் போய் வசைமாரியில் மூழ்கி தீய பழக்கங்களுக்கு அடிமையாகி தம் வாழ்வைச் சிதைத்தவேளை முருகன் தடுத்தாட்கொண்டு தன் புகழ் பாட வைத்ததுபோல இந்தச் செல்வச்சந்நிதி வேலவனும் எம்மைத் தீயவழி செல்லாமல் தூயவழியில் செல்ல வைத்து அருள்மாரி பொழிந்து கொண்டிருக்கின்றான். இ∴து மறுக்கமுடியாத உண்மை.

"பாழ்வாழ் வெனுமிப்படு மாயையிலே வீழ்வாயென என்னை விதித்தனையே" என்றும் "இல்லேயெனும் மாயையிலிட்டனை நீ பொல்லேனறியாமை பொறுத்திலையே" என்றும் "கூர்வேல் விழிமங்கையர் கொங்கையிலே சேர்வேன் அருள் சேரவும் எண்ணுமதோ" என்றும் "எந்தாயுமெனக்கருள் தந்தையும் நீ- சிந்தாகுலமானவை தீர்த்தெனையாள் கந்தா!" என்றும் அருணகிரியார் அனுபூதியிலே பாடியிருப்பது இவண் நோக்கத்தக்கது. இ∴து அநுபவ உண்மை.

முருகன் என்றால் அழகன் என்று பொருள். அவன் கையிலிருக்கும் வேல் அழகு மிகுந்த சக்திவேல். இங்கே செல்வச்சந்நிதியில் எழுந்தருளியிருக்கும் வேல் அருட்சக்தி வேலாகும். வெற்றிவேல் வீரவேல் விண்ணோர் சிறைமீட்டவேல், சூர்மார்பும் குன்றும் துளைத்தவேல் என்பது பாட்டு. ஆகவே ஆற்றங்கரையான் என அழைக்கப்படும் சந்நிதிவேல் அடியார் குறைதீர்க்கும் அருள்வேல் எனக் கூறின் மிகையாகாது. "வேல் வேல் வெற்றிவேல்" என்று கோஷமிட்டவண்ணம் சந்நிதியை வலம் வரும் அடியார்களின் அருட்காட்சி நெஞ்சைத் தொடுகின்ற பக்திபூர்வமான ஒரு நல்ல காட்சியாகும்.

அது ஒருபுறமிருக்க, முருகநாம பஜனை இந்தச் செல்வச்சந்நிதியில் எந்நேரமும் நடைபெற்றுக்கொண்டிருக்கும் ஒரு தெய்வீக நிகழ்வாகும். அதாவது சந்நிதி வேலவனின் மூலஸ்தானத்துக்குப் பக்கத்திலே ஒரு பூவரசு மரம் நிற்கிறது. அந்த மரநிழலில் அடியார்கள் அமர்ந்திருந்து அழகன் முருகனைப் பாடிப்பரவிப் பணியும் காட்சி இங்கன்றி வேறெங்குமே காணமுடியாது.

மேலும் தொண்டைமானாற்றின் தீர்த்த மகிமை சொல்லுந்தரமன்று. இச்சந்நிதி வேலவனை வணங்கிக் கொண்டு ஆலய மேற்கு வீதிவழியாக வந்து ஆற்றிலே மூழ்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்நானஞ் செய்து பின்னர் தீர்த்தக் கேணியிலே கை வாளியால் தண்ணீர் அள்ளி மூன்றுமுறை நீராடினால் எல்லா நோய்களும் பறந்தோடிவிடும். உண்மையான நம்பிக்கையுடனே நீராடி நீறணிந்து சந்நிதியை வலம் வந்து வணங்கினால் மாறாத வருத்தமெல்லாம் மாறி சுகவாழ்வு கிட்டும்; இந்தச் சந்நிதி வேலவனின் அருள் அருமருந்தாகி நோயை நீங்கச் செய்துவிடும்.

இந்தச் செல்வச்சந்நிதியில் வீற்றிருக்கும் வேலவனுக்கு அன்னதானக் கந்தன் என்று ஒரு பெயர் உண்டு. ஏனெனில் நோய்பிணி மாற்றி அருள்புரிவதோடு பசிப்பிணியையும் போக்கிவிடுகிறான் இச்சந்நிதி வெற்றிவேலவன். "இடும்பை கூர்வயிறே உன்னோடு வாழ்வது மிகவும் கஷ்டம்" என்று ஔவைப்பாட்டி கூறியிருப்பதுபோல மனிதனுக்குப் பசியும் ஒரு விதத்தில் நோய்தான். இது வந்துவிட்டால் எல்லாமே போய்விடும். "பசி வந்திட்டால் பத்தும் பறக்கும்" என்று தெரியாமலா நம் முன்னோர்கள் கூறிச் சென்றிருக்கின்றார்கள். இச்சந்நிதி கோவிலைச் சுற்றிப் பல்வேறு மடங்களில் பசிப்பிணி போக்கும் அன்னதானம் மிகச் சிறப்பாக நடைபெறுவது ஒரு தனி விசேட அம்சமாகும்.

இந்தக் கோயிலுக்கு வருபவர்கள் பசியோடு போவதை முருகன் விரும்பமாட்டான். எப்படியாவது அவர்களுக்கு அன்னம் கிடைக்க வழிசெய்து விடுவான் இந்தச் சந்நிதி வேலவன். ஆலய வீதியிலே உட்பிரகாரத்தில் வடக்குப் பக்க மண்டபத்தில் தொடர்ந்து அன்னதானப்பணி நடந்துகொண்டேயிருக்கும். இந்த அருமையான ஆனந்த அற்புதக் காட்சி வேறு எங்கும் காணமுடியாது.

வேதனை தீர்க்கும் வேலவன் அடியார் பசியையும் போக்கி இன்னருள் புரிகின்ற இந்த ஆற்றங்கரை ஆலயத்தின் சிறப்புகளுக்கு எல்லையே இல்லை. அடுக்கிக்கொண்டே போகலாம். இந்த அன்னதானக் கந்தப்பெருமானின் ஆலயத்துக்கு முன்னே அமைந்துள்ள சந்நிதியான் ஆச்சிரமத்திலும் இப்பசிப்பிணி போக்கும் பணி மிகச் சிறப்பாக நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது. அறுபத்து மூன்று நாயன்மார்களாகப் பாவனை செய்து அறுபத்து மூன்று அடியார்களுக்குப் பழம், பாக்கு, வெற்றிலை, பணம் முதலியன வைத்துப் பூஜைபண்ணி அவர்களிடம் பிடிசோறு வாங்கி ஆண்டவனுக்கு அர்ப்பணிக்கும் பணி அற்புதமானது. வேறு எங்குமே நடக்காத ஓர் அரிய திருப்பணி இது. "நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க" என்று தொடங்கிச் சிவபுராணம் பாடித் தாமும் வணங்கி மற்றவர்களையும் வணங்க வைக்கின்ற பாங்கு இங்கின்றி வேறெங்குமே காணமுடியாது. ஆற்றங்கரை வேலவனின் அருளால் இந்த அற்புதப் பணியை அழகுறச் செய்துவருகின்ற மோகனதாஸ் சுவாமிகள் போற்றுதற்குரியவர். அவருடைய இப்பணியால் சிறப்புற்றவர்கள் எண்ணிலடங்கார். தானங்களில் சிறந்தது அன்னதானம். ஏனெனில் அது ஒன்றுதான் முழு மனதுடன் "இனிப்போதும்" என்று மனமாரச் சொல்லப்படுவது. அந்தவகையில் சிறப்பான தானத்தைச் செய்து வருகின்ற சந்நிதியான் ஆச்சிரம சுவாமிகளின் அறப்பணி பாராட்டுக்குரியதே!

எல்லாம்வல்ல ஆற்றங்கரை வேலவன் திருவருட்கருணைத் திறத்தின் அரும்பெரும் சக்தியினால் நடைபெறும் சந்நிதியான் ஆச்சிரமப்பணிகள் மேன்மேலும் வளர்ச்சியுற்று நல்லபடி திகழ அவனருளையே நாடி நிற்கின்றோம். செல்வச்சந்நிதியுறையும் வெற்றிவேல் அடியார்கள் அனைவருக்குமே ஜெயத்தைத் தரவேண்டுமென்று வாழ்த்தி மகிழ்கின்றோம்.

**கோபத்தை அன்பினால் வெற்றிகொள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தொடர்ச்சி...)



# திருவண்டப்பகுதி

## சிவனது தூலசூக்குமத்தை வியந்தது

(தில்லையிலருளிச் செய்யப்பட்டது)

## இணைக்குறளாசிரியப்பா

மறைந்த
சங்கநூற் செல்வர் பண்டிதர் சு. அருளம்பலவனார் அவர்கள்
(யாழ்ப்பாணம் - காரைநகர்)



சொல்லுவ தறியேன் வாழி முறையோ
தரியே னாயேன் றானெனைச் செய்தது
தெரியே னாவா செத்தே னடியேற்
கருளிய தறியேன் பருகியு மாரேன்
விழுங்கியு மொல்ல கில்லேன்
செழுந்தண் பாற்கடற் றிரைபுரை வித்
துவாக்கட னள்ளுநீ ருள்ளகந் ததும்ப
வாக்கிறந் தமுத மயிர்க்கா றோறுந்
தேக்கிடச் செய்தனன் கொடியே னூன்றழை
குரம்பை தோறு நாயுட லகத்தே
குரம்பைகொண் டின்றேன் பாய்த்தி நிரம்பிய
அற்புத மான வமுத தாரைகள்
எற்புத் துளைதொறு மேற்றின னுருகுவ
துள்ளங் கொண்டோ ருருச்செய் தாங்கெனக்
கள்ளூ றாக்கை யமைத்தன னொள்ளிய
கன்னற் கனிதேர் களிறெனக் கடைமுறை
என்னையு மிருப்ப தாக்கின னென்னிற்
கருணை வான்றேன் கலக்க
அருளொடு பராவமு தாக்கினன்
பிரமன்மா லறியாப் பெற்றி யோனே.

**பதவுரை:-**

வாழி- என்னை அடிமைகொண்ட எம்பெருமான் திருவருள் வாழ்வதாக. தான் எனைச் செய்தது நாயேன் சொல்லுவது அறியேன்- அவ்விறைவன்தான் என்னை ஆட்கொண்ட வகையை நாயை ஒத்தவனாகிய அடியேன் சொல்லுதல் அறியேன்; தரியேன்-

**இறைவன் விரும்பும் மந்திரம் இன்சொல்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆட்கொண்டதனாலாகும். இன்பப் பேற்றினை அடியேன் தாங்கமாட்டேன்; தெரியேன்- அதனை இன்னதென்று தெரியவுமாட்டேன்; முறையோ- நான் இவ்வாறு இருப்பது முறையாகுமோ. ஆ ஆ செத்தேன்- ஆஆ யான் எனது என்னும் செருக்கு நீங்கப்பெற்றேன்; அடியேற்கு அருளியது அறியேன்- எம்பெருமான் அடியேனுக்கு அருள் செய்தமைக்குக் காரணம் யாது என்பதையும் அறிந்திலேன்; பருகியும் ஆரேன்- எம் பெருமான் அருளிய பேரின்ப வெள்ளத்தைக் குடித்தும் தெவிட்டப்பெறேன்; விழுங்கியும் ஒல்ல கில்லேன்- அதனை முழுவதும் விழுங்கியும் பொறுக்குமாற்றலுடையேனல்லேன்; வாக்கு இறந்து அமுதம்- சொல்லின் அளவையும் கடந்து பேரின்ப அமுதமானது, உவா கடல் நள்ளுநீர் உள் அகம் ததும்ப- நிறைமதிக் காலத்துக் கடலின் உள்ளிடத்துப் பொங்கி எழுகின்ற நீரைப்போல உள்ளத்தின் உள்ளிடத்தே நிரம்ப செழு தண் பால் கடல் திரை புரைவித்து- அதனைச் செழுமையான குளிர்ந்த பாற்கடலின் திரையினை ஒக்கப் பரவச் செய்து, மயிர்க்கால் தோறும் தேக்கிட செய்தனன்- மயிரின் அடிதொறும் வந்து நிறையும்படி செய்தனன்; நாய் உடல் அகத்தே குரம்பை கொண்டு நாய்போல் இழிந்த என் உடம்பினுள்ளே தான் இருத்தற்குச் சிறுவீடு அமைத்துக்கொண்டு, கொடியேன் ஊன்தழை குரம்பை தோறும்- கொடியவனாகிய எனது ஊன்மிகுந்த சிறிய உடம்பின் இடங்கள்தோறும், இன்தேன் பாய்த்தி- இனிய தேன்போன்ற பேரின்பத்தினைப் பாயச்செய்து, நிரம்பிய அற்புதமான அமுத தாரைகள் எற்பு துளைதொறும் ஏற்றினன்- நிறைந்த வியக்கத்தக்க பேரின்ப அமுதநீர் ஒழுக்குகளை எனது உடம்பிலுள்ள எலும்பின் உட்டுளைகள்தோறும் ஏறச் செய்தனன்; உருகுவது உள்ளம் கொண்டு ஓர் உரு செய்தாங்கு- உருகுவதாகிய உள்ளத்தினையே முதற்காரணமாகக் கொண்டு கட்புலப்படத்தக்க ஒரு வடிவத்தைச் செய்தாற்போல, எனக்கு அள்ளூறு ஆக்கை அமைத்தனன்- எனக்குப் பேரின்ப அமுதத்தைக் கொண்டு வாயூற இனிமைசெய்யும் உடம்பை ஆக்கிவைத்தான்.

வாழிய என்பது ஈறுகெட்டு வாழி என நின்றது. தான் எனைச் செய்தது என்றது இறைவன் என்னை ஆட்கொண்டு முன்னிருந்த நிலையினின்றும் வேறுநிலை அடையச் செய்த தன்மையினை,

"வஞ்சகப்பெரும் புலையனேயுன் கோயில் வாயிலிற்
பிச்சனாக்கினாய் பெரியஅன்பருக் குரியனாக்கினாய்"

சதக 96

என அடிகள் அருளியமையுங் ஈண்டறியற்பாலது.

இன்பமன்றிப் பிறிதொன்றும் தோன்றாமையானும் அதன் இயல்பினைப் பிறர்க்கெடுத் துரைத்தல் ஆகாமையானும், "சொல்லுவதறியேன்" என்றார். அதனைத் தம்மால் அறியலா காமையின் "தெரியேன்" என்றார். இறைவன் கொடுத்த பேரின்பத்தைத் தாங்கமாட்டாமையின் "தரியேன்" என்றார். "கோற்றேன் எனக்கென்கோ குரை கடல்வாய் அமுதென்கோ, ஆற்றேன் எங்கள் அரனே" (உயிருண்ணி 8) என அடிகள் அருளியமையுங் காண்க.

முறையோ என்பது தான் எனைச் செய்ததைத் தெரியாமலும் சொல்ல அறியாமலும் தாங்க முடியாமலும் யானிருப்பது ஒழுங்காமோ என இறைவனிடம் முறையிட்டவாறு.

கீர்த்தி வேண்டின் நேர்த்தியாய் உழைத்திடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவா செத்தேன் என்றது நீங்குதற்கரிய யான் எனது என்னும் செருக்கு நீங்கப் பெற்றேன்; ஆ ஆ இ்.தென்ன வியப்பு என்றவாறு. யான் எனது என்பன நீங்கியமை...

"நான் கெட்ட வாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ"

தெள் 18

"யான் எனதென் றுரைமாய்த்துக் கோதிலமுதானானை" கண்டபத்து 5 என அடிகள் அருளியவாற்றானுமறியப்படும். ஆ ஆ என்பன இடையே உடம்படுமெய் பெற்று ஆவா என்றாயின. "ஆவா என்ன ஆசைப்பட்டேன்" (ஆசைப் 3) என்புழிப்போல இவை ஈண்டு வியப்பின்கண் வந்தன.

அடியேற்கு அருளியது அறியேன் என்றது ஒன்றுக்கும் பற்றாத அடியேனுக்கு இறைவன் எளியனாய் வந்து அருளியது எதனால் என அறியேன் என இறைவன் அடியார்க்கெளியனாந் தன்மையை வியந்துரைத்தவாறு.

பேரின்பத்தைப் பருகியும் அதனைப் பருகும் வேட்கை மேன்மேல் வளர்தலின் "பருகியும் ஆரேன்" என்றார். "புணருந்தொறும் பெரும் போகம் பின்னும் புதிதாய்... வளர்கின்றதே" திருக்கோவையாரில் (9) அடிகள் அருளியமையுங் காண்க. பருகுதல்- குடித்தல். ஆர்தல்- தெவிட்டல். பருகியும் ஆராமையினால் முழுவதும் விழுங்கியும் அதனைப் பொறுக்கும் ஆற்றலின்மையின் "விழுங்கியு மொல்ல கில்லேன்" என்றார்

"வழங்குகின் றாய்க்குன் அருளார் அமுதை வாரிக்கொண்டு
விழுங்குகின்றேன்" அடைக்கலப் 10

என அடிகள் அருளியவாறுங் காண்க. விழுங்குதல்- முழுதுமாய் உண்டல். ஒல்லல்- பொறுத்தல். இப்பொருட்டாதல் "ஒல்லுவ சொல்லா துரை வழுவச் சொல்ல" என்னும் பரிபாடலுரையில் (12:65) "ஒல்லுவ- பொறுப்பன" எனப் பரிமேலழகர் உரைத்தமை யானுமறிக. கில்- ஆற்றலுணர்த்துவதோர் இடைச்சொல்.

வாக்கிறந்தமுதம் (170) உவாக்கடல் நள்ளுநீர் உள்ளகந் ததும்ப (169) செழுந்தண் பாற்கடல் திரைபுரைவித்து (165) மயிர்க்கால்தோறுந் (170) தேக்கிடச் செய்தனன் (171) என மாற்றிக் கூட்டிப் பொருள் கொள்க.

பேரின்ப அமுதின் தன்மையும் அளவும் சொல்லின் அளவைக் கடந்தமையின் "வாக்கிறந் தமுதம்" என்றார். இறத்தல்- கடத்தல். "சொல்லிறந்து நின்றதொன்மை யாதிகுணம்" (குயில்1) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க.

உவா என்றது ஈண்டு நிறைமதிக் காலத்தை "உவவுமதியுருவி னோங்கல் வெண்குடை" (புற 3:1) என வருதலுங் காண்க. அக்காலத்து கடலின் உள்ளிடத்து நீர் பெருகுவதுபோல உள்ளத்தின் உள்ளிடத்தே அமுதத்தைப் பெருகச் செய்தமையின் "உவாக்கடல் நள்ளுநீர் உள்ளகந் ததும்ப" என்றார். உவாநாளிற் கடல் பெருதல்,

"உருகெழு பெருங்கடல் உவவுக் கிளர்ந்தாங்கு" அக 201:9

"உவாக்கடற் பரப்பி லொல்லென மயங்கி"

பெருங்(1) 37:278

"உவாக்கட லொலியின்" பெருங்(1) 38.89.

என வருவனவற்றாலுமறியப்படும். நள்ளுநீர்- நடுவிலுள்ள நீர். நள்ளு- நடு. இப்பொருட்டாதல்

ஈதலால் வருவதே ஈடற்ற புண்ணியம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நள்ளுங் கீழுளு மேலுளும் யாவுளும்" (சத46) என்புழியுங் காண்க. நள்ளுநீரைப் போல என ஒரு சொல் அவாய் நிலையான் வருவித்துரைக்க. ததும்ப- நிரம்ப, "குறும்பல் குறும்பிற் றதும்ப வைகி" (புற 177:7) என்புழிப்போல,

மிகத்தூய பேரின்ப அமுதத்தினை மேன்மேன் எழுந்து மயிர்க்கால் தோறும் தேக்கிடச் செய்தமைக்குச் "செழுந்தண் பாற் கடற்றிரை" உவமை. பேரின்ப அமுதம் உடம்பின் உள்ளகத்தே நிரம்பி அதன் மேலுள்ள மயிர்க்கால் வரையில் நிறையச் செய்தமையின் "அமுதம் மயிர்க்கால் தோறும் தேக்கிடச் செய்தனன்" என்றார். தேக்கல்- நிறைதல். "தேக்கிய தேனுடன் இறால்மதி கிடைக்கும்" (கல்லாடம் 1:5) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. "மலித ருவன்றன் மல்க லார்தல்.... தேக்கல் கிளைத்தல் நிரம்பல் பூரணங் கமமே நிறைவு" எனப் பிங்கலந்தையில் (7:470) வருதலுங் காண்க.

உடம்பின்கண் தோல் இரத்தம் எலும்பு மேதை முதலிய மற்றைய பொருள்களிலும் ஊன்மிக்கிருத்தல்பற்றி "ஊன்றழை குரம்பை" என்றார். தழைத்தல்- மிகுதல். இப்பொருட்டாதல் "மைத்தழையா நின்ற மாமிடற்றம்பலவன்" என்னும் திருக்கோவை யாரினும் (102) காண்க. குரம்பை- குடில். சிறுபாண் 174நச். குரம்பை போறலின் உடம்பைக் "குரம்பை" என்றார். "கள்ளப் புலக் குரம்பை" (சிவபுரா 88) "மலமாக் குரம்பை" சத (54) "இடுக்கணுடைப் புன்குரம்பை" (சென்னி8) "முழுப் புழுக் குரம்பை" (பிடித்த) என அடிகள் பிறாண்டு அருளியமையுங் காண்க.

நாயுடல் என்பது உடம்பின் இழிவைக் குறித்தது. அடிகள் தமது உடம்பினை இறைவன் தானிருக்கும் இடமாகக் கொண்டமை கண்டு "நாயுடலகத்தே குரம்பை கொண்டு" என்றார். "இறைவனே நீயென் உடலிடங் கொண்டாய்" "ஈசா உடலிடங் கொண்டாய்" (கோயில் 5, 10) எனப் பிறாண்டும் அருளியமை காண்க. அகத்து என்றது இருதய கமலத்தை.

இன்றேன் என்றது இனிய தேன் போன்ற பேரின்பத்தை அதனை இறைவன் உடம்பெங்கும் நிறைவித்தமையோடு உடம்பிலுள்ள வலிய எலும்புகளின் துளைகள் தொறும் ஏறச்செய்தமை தோன்ற "அமுத தாரைகள் எற்புத் துளைதொறும் ஏற்றினன்" என்றார். அற்புதமான அமுத தாரை என்றார் அப்பேரின்ப வொழுக்கு முன் ஒருபோதும் கண்டறியப்படாத தொன்றாகலின், தாரை- ஒழுக்கு. "நீரொருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்ப" (திருவெம் 15) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. என்பு- எற்பு என்றாயிற்று. "மெல்லொற்றுத் தொடர்மொழி மெல்லொற் றெல்லாம், வல்லொற் றிறுதி கிளையொற் றாகும்" (தொல்: குற்றியலுகரப் 9) என்பது விதி. என்பில் துளையுண்மை "என் தென்பின் புரை" (உயிருண்ணி 4) என்பதனாலுமறியப்படும்.

நாயுடலகத்தே (172) குரம்பை கொண்டு (173) கொடியேன் ஊன்றழைக் (171) குரம்பைதோறும் (172) இன்றேன் பாய்த்தி நிரம்பிய (173) அற்புதமான அமுத தாரைகள் (174) எற்புத் துளைதொறும் ஏற்றினன் (175) என முடிக்க.

அன்பினால் உருகும் உள்ளத்தையே பொருளாகக் கொண்டு அதனால் ஓர் உருச்செய்தால் அது உருகிய தன்மைத்தாயிருக்கு மாதலின், உருகுவதாகிய தமது யாக்கைக்கு "உருகுவது உள்ளங் கொண் டோருருச் செய்தாங்கு ஆக்கை அமைத்தனன்" என உவமையாகக் கூறினர். இஃது இல்பொருளுவமை. அன்பினால் ஆக்கை உருகல்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அன்பினா லடியேன் ஆவியோ டாக்கை ஆனந்த மாய்க் கசிந்துருக" (கோயிற்2) என அடிகள் அருளியவாற்றானுமறிக.

அள்ளூறு ஆக்கை- வாய் ஊற இனிமை செய்யும் யாக்கை. அள்ளூறல்- வாயூறல். "அள்ளூறித் தித்திக்கப் பேசுவாய்" (திருவெம் 3) என வருதல் காண்க.

ஒள்ளிய கன்னல் கனி தேர் களிறு என- சிறந்த கரும்பாகிய இனிய உணவினையும் விளவின் கனியினையும் ஆராய்ந்து உணவாகக் கொள்கின்ற ஆண்யானையைப் போல, கடைமுறை என்னையும் இருப்பது ஆக்கினன்- முடிவில் ஒன்றுக்கும் பற்றாத என்னையும் பேரின்பத்தில் நிலைபெற்று இருக்குமாறு செய்தருளினன்; என்னில் கருணை வான் தேன் கலக்க என்னிடத்தில் திருவருளாகிய தூய தேன் கலக்கும்படி பிரமன்மால் அறியா பெற்றியோன்- நான்முகனும் திருமாலும் அறியமுடியாத தன்மையையுடைய எம்பெருமான், அருளொடு பரா அமுது ஆக்கினன் - அவ்வருளொடு மேலான பேரின்ப அமுதத்தினையும் அமைத்து வைத்தனன்.

வேழக்கரும்பினையும் விழவின் கனியினையும் விரும்பியுண்ணும் யானை அவ்வுண்டற் சுவையின்கண் களித்து இறுமாந்திருத்தல்போல, இறைவன் தனது அருட்பேரின்பத்தில் திளைத்து இறுமாந்து களித்திருக்கச் செய்தனன் என்பார். "கன்னற் கனிதேர் களிறெனக் கடைமுறை, என்னையுமிருப்ப தாக்கினன்" என்றார். "இறுமாந்திருப்பன்கொலோ- வீசன் பல கணத்தெண்ணப்பட்டு" என அப்பரடிகள் (தே.9:11) அருளியதும் ஈண்டு சிந்திக்கத் தக்கது.

கன்னல்- கரும்பு. "கழைவேழ மிக்கு கன்னல் கரும்பே" என்பது திவாகரம், தேர்தல் ஈண்டு உணவாகக் கொள்ளுதல். "கொங்கு தேர் வாழ்க்கை" (குறுந்) என்புழிப்போல. கடை முறை தான்சாந்துயரந் தரும்" (குறள் 792) என்புழிப்போல. என்னையும்- ஒன்றுக்கும் பற்றாத என்னையும். "என்னையுமொருவனாக்கிச் சென்னியில் வைத்த சேவக போற்றி" (போற்றி 129:30) என வருதல் காண்க. இருப்பதாக்கினன்- சீவன் முத்தனாக இருக்கச் செய்தனன்.

இறைவன் என்னிடத்து வைத்த பேரருளினால் அவ்வருளொடு பேரின்பத்தினையும் அமைத்து வைத்தனன் என்பார். "என்னிற் கருணைவான்றேன் கலக்க, அருளோடு பராவமுதாக்கினன்" என்றார். கருணை வான்தேன்- கருணையாகிய தூயதேன். "தன் கருணைத் தேன்" (அம்மானை 6) என அடிகள் அருளியமையுங் காண்க. வான்- தூய்மை. இப்பொருட்டாதலை "சங்கம்போல் வான்மையார் சால்பு" (பு.வெ.மா.185) என்புழி வான்மையார் என்பதற்குத் தூய்மையுடையார் என அதன் உரையாசிரியர் உரைத்தமையானுமறிக. பரா அமுது என்றது மேலான பேரின்பத்தை.

அருளொடு பராவமுது ஆக்கிய பெருமான் தேவரிற் சிறந்த பிரமனாலும் திருமாலினாலும் காணமுடியாத பெருந்தன்மையோன் என்பார். "பிரமன் மால்காணாப் பெற்றியோன்" என்றார். "பிரமன் மாலும் அறியாப் பெரியோன்" (ஞான 26.9) எனவும் "பிரமன் மால் அறியாத பெருமையன்" (நாவு. 194:2) எனவும் தேவாரத்து வருவன காண்க.

(திருவண்டப்பகுதி முற்றிற்று)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தைப்பூச நன்னாள்

– திரு ஆ. இராசரெத்தினம் அவர்கள் –

கண்கண்ட தெய்வங்கள் சூரியனும் சந்திரனுமே. ஒன்று பிதா மற்றொன்று மாதா. விண்வெளியில் முதல் ஓடுபாதை சந்திரனுடையது. ஆகவே பூமிக்கு அருகில் இருப்பவன் அவன். அவனுக்கு மேலே நான்காவது ஓடுபாதையில் இருக்கும் சூரியனிடம் இருந்து சூடான கதிர்களைப் பெற்று தன்னிடத்தே இருக்கும் தண்ணீருடன் இணைத்து குளிரச்செய்து வெப்பத்தால் வாடும் இப்பூவுலக ஜீவராசிகளை மகிழச் செய்வான் சந்திரன். சோதிடம் சூரியனுக்கு இராசிச்சக்கரத்தில் சந்திரனுக்கு அடுத்த கட்டத்தில் அதாவது சிங்கத்தில் இடமளித்துள்ளது. சூரியனை ஆன்மகாரகன் என்று சோதிடமும் ஆன்மா என்று வேதமும் குறிக்கின்றன. சந்திரனை- அதாவது கடக இராசியின் அதிபதியை- மனது காரகன் என்றும் குறிப்பிடுகிறது.



ஆன்மாவுடன் இணைந்தால் மட்டுமே மனம் செயற்படமுடியும். இராசிகள் 12 ஆக இருப்பினும் இருவருக்கு ஒவ்வொரு வீடுதான் அருகருகாக ஒதுக்கப்பட்டுள்ளது. ஏனெனில் ஆணும் பெண்ணும் (கணவனும் மனைவியும்) அருகருகில் அமைவதால் விபரீதங்கள் உரு வாகச் சாத்தியம் ஏற்படாது. இதனால் அன்றோ இறைவனைப் "பெண்ணில் நல்லாளுடன் பெருந்தகை இருத்தல்" என்றும் "உமையொரு பாகன்" என்றும் தமிழ்வேதம் பறைசாற்றியது.

"உலகம் உவப்ப வலனோர்பு திரிதரு பலர் புகழ் ஞாயிறு" என்கிறது திருமுரு காற்றுப்படை. "ஆன்மாக்கள் மகிழும்படி எழுந்து (மகாமேருமலையை)ப் பிரதட்சணம் செய்யும் பல சமயத்தாரும் புகழும் சூரியன்" என்பது நாவலர் உரை.

ஏழு குதிரைகள் பூட்டப்பட்ட தேரில் உலாவரும் சூரியனை ஏழுபரியிரதத்து இரவி" எனக் குறிப்பிடுவார் அருணகிரியார். "சிவப்பு, பச்சை முதலிய 7 நிறக்குதிரைகள் பூட்டப்பட்ட தேரில் கதிரவன் காட்சி தருகிறான்" என்கிறது மெய்ஞான நூல். 7 குதிரைகள் எனக் குறிப்பிடுவதை விஞ்ஞானம் "VOBGYOR" எனப்படும் ஏழுவகை வர்ணங்களாகக் குறிப்பிடுகிறது.

சூரியன் மகர லக்கினத்தில் இருந்து கடக இராசியை நோக்கிச் செல்லும் காலத்தை உத்தராயணம் (வடக்கு நோக்கிப் போதல்) என்றும் கடகத்தில் இருந்து மகரம் நோக்கிச் செல்வதை- அதாவது தெற்கு நோக்கிச் செல்வதை- தட்சிணாயணம் என்றும் குறிப்பிடுவார்கள். தேவர்களுக்கு உத்தராயணம் பகல் எனவும் தட்சிணாயணம் இரவு என்றும் குறிப்பிடுவார்கள். சூரியன் மகரத்துள் பிரவேசிக்கும் புண்ணிய காலத்தின் தொடக்க நாள்தான்- தைமாதப்பிறப்பு- மகர சங்கராந்தி- தைப்பொங்கல் திருநாள் என்பர். "தை பிறந்தால் வழி பிறக்கும்" என்பது பழமொழி. ஏனெனில் வயல் தோட்டங்களில் இருந்து இயற்கை தரும் தானியம் காய்கறி வகை வீடு நிறைந்து காணப்படுவதனால் எதிலும் குறையிருக்காது. அதற்கான நன்றிக்கடனாகவே நாங்கள் சூரிய நமஸ்காரம், மாட்டுப் பொங்கல் செய்து சுற்றத்தாருடன் பகிர்ந்து உண்டு மகிழ்ந்து கொண்டாடுகிறோம்.

இது நிற்க, மகர இராசியில் சூரியன் பிரவேசிக்கும் காலத்தைக் காலை - உதயம்- என்று கருதும்பொழுது அதற்கு முன்பதான $2^1/_2$ நாழிகைக் காலத்தை - அதாவது தனு இராசிக் காலத்தை (மார்கழிமாதம்) வைகறைக் காலம்- விடியற்காலம்- பிரம்ம முகூர்த்தம் என்று குறிப்பிடுவார்கள். அக்காலத்தைப் பற்றி இவண் சிந்திப்பது சாலச்சிறந்தது.

அக்காலம் ஒரு சிறப்பான காலம். இதைத்தான் பரமாத்மா "மாதங்களில் நான் மார்கழி" என்று கூறியுள்ளார். ஏனெனில் சகல ஜீவராசிகளும் உறக்கத்திலிருந்து எழுந்து செயற்படுதலால் காக்கும் கடவுளான ஸ்ரீமத் நாராயணன் அச்செயல்களைச் செயல்படுத்துதல் அவன் கடமையன்றோ.

கடக லக்கினமானது அவதார புருடர்கள், ஞானிகள், இசை விற்பன்னர்கள், அறிஞர்களுடன் சம்பந்தப்பட்டது. அத்துடன் தைமாசப் பௌர்ணமிப் பூச நட்சத்திரத்தில் வரும் அந்த நாளையே தைப்பூசமாகக் கொண்டாடுவார்கள். உயிருக்கு அறிவுத் தெளிவை ஏற்படுத்துவதில் பௌர்ணமியும் பூசநட்சத்திரமும் துணைபுரிகின்றன.

தைப்பூசத்தன்று சூரியனின் 7ஆம் பார்வை சந்திரனது ஆட்சிவீடான கடகத்திலும் சந்திரனின் 7ஆம் பார்வை (ஆட்சியாக) சூரியனின் மகர வீட்டிலும் விழுகின்றன. இது மிகவும் உயர்ந்த நிலையாகும் சூரியனால் ஆன்மபலமும் சந்திரனால் மனோபலமும் கிடைக்கப்பெற்று ஆன்மாவும் மனமும் ஐக்கியமாகின்றன.

இந்த நல்ல நாளில் அன்றோ சிவன் முதன்முதலாகத் தில்லையில் நடனமாடிய திருநாளுமாம். தைப்பூச நாளில் நடந்த இறைவனின் அந்த ஆனந்த தாண்டவத்தை வியாக்கிரபாத முனிவரும் பதஞ்சலியும் கண்டு பேருவகை கொள்ளும் பேற்றைப் பெற்றனர்.

சாதாரணமான உலகியல் வாழ்வில் ஒரு கணவனும் மனைவியும் இணைந்து அனுபவிக்கும் சிற்றின்பத்தையே பிறருக்கு மொழிமூலம் தெளிவாகப் புரியவைக்க முடிவதில்லை. அதனிலும் மேலான பேரின்பத்தை- அதாவது ஆன்மாவும் மனமும் ஐக்கியமாகும்- பெருவாழ்வை எவ்வாறு வார்த்தைகளால் வர்ணிக்க முடியும்? "எவ்வாறு ஒருவர்க்கு இசைவிப்பதுவே"

இந்த நாளின் சிறப்பையுணர்ந்த சம்பந்தப்பெருமானும் பூம்பாவையிடம் இந்த நன்நாளைக் காணாது போகின்றனையோ என்று கவலைப்பட்டுப் பாடியுள்ளார்.

**முயற்சி இல்லாதவன் முன்னேற முடியாது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மைபூசும் ஒண்கண் மடநல்லார் மாமயிலைக்
கைப்பூசும் நீற்றான் கபாலீச்சுரம் அமர்ந்தான்
நெய்பூசும் ஒண்புழக்கல் நேரிழையோர் கொண்டாடும்
தைப்பூசம் காணாதே போதியோ பூம்பாவாய்

என்பது அவர் அருள்வாக்கு.

தமிழகத்திலும் இலங்கையிலும் மலேசியாவிலும் தைப்பூசத் திருவிழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது. அன்று பழநியிலும் மற்றும் முருகன் கோவில்களிலும் முருகன் வெள்ளி ரதம் மஞ்சம் பூந்தண்டிகையில் வள்ளி தெய்வானை சமேதரராக உலாவரும் காட்சியைக் காணக் கண் ஆயிரம் வேண்டும்.

வீதியில் காவடி எடுத்தாடுவோர் ஒருபுறம், பால்காவடி, பன்னீர்காவடி எடுப்பார் ஒருபுறம், கரகக்காவடி, செடில்காவடி ஒருபுறம், பக்தர்களின் பஜனை ஒருபுறம், அங்கப் பிரதட்சணம் செய்யும் அடியார்கள் ஒருபக்கமாகக் காட்சி தருவார்கள். இதனை ஒரு புலவர் தமது அருட்கவியில்,

"பலதிசையும் காவடிகள்
பெருமுழவு தாளவகை
பஜனையிசை கூடுமொழி - திகழ்வீதி
பரவுமடியார் பசிகள் தணியுமன்னசாலையிவை
பயில்வுறு நல்லூரிலுறை - பெருமான்"

என்றும் பாடியுள்ளார்.

இவற்றுள் முருகனும் பக்தர்களோடு சேர்ந்து ஆடிப்பாடி வருவதாகப் பக்தர்கள் கூறுவார்கள். நேர்த்திக்கடனுக்காகப் பழனியில் விசேடமாகக் காவடி எடுப்பார்கள் பக்தர்கள். காவடியின் தோற்றம்பற்றி பின்வரும் புராணக்கதை ஒன்றுண்டு. அதாவது அகத்தியர் தனது சீடனான இடும்பனிடம் "நான் தெற்கே பொதிகைமலை செல்வதால் கயிலையிலிருந்து சிவகிரி சக்திகிரியாகிய சிரஞ்சீவி மலைகளை எடுத்துவரும்படி பணித்தார். அவர் அருளிய மந்திர சக்தியால் பிரம்ம தண்டத்தைத் தடியாகவும் அனந்தன் கார்க்கோடன் முதலான எட்டு நாக சர்ப்பங்களைக் கயிறாகவும் கொண்டு இரண்டு மலைகளையும் காவடியாகக் கட்டித் தூக்கிக்கொண்டு தெற்குநோக்கிப் பயணித்தான். இடும்பன் வழியில் ஆவினன்குடி அருகே சிறிது இளைப்பாறினான். மீண்டும் அவன் காவடியைத் தூக்க முயன்றபோது இயலவில்லை. சிவகிரி உச்சியில் கௌபீனம் அணிந்த சிறுவன் கையில் தடியுடன் நின்றிருந்தான். அதேநேரம் காவடியின் பிரம்ம தண்டமும் நாகசர்ப்பக் கயிறுகளும் மறைந்தன. இடும்பன் அதிர்ச்சியடைந்து மலைமீது நின்ற சிறுவனை அங்கிருந்து செல்லும்படி எச்சரித்தான்.

சிறுவனோ "இது எனது இடம் போக முடியாது" என்றான். கோபமடைந்த இடும்பன் சிறுவன்மீது பாய்ந்தான். ஆனால் அடுத்தகணமே இடும்பன் மூர்ச்சையடைந்தான். இதையறிந்து அவ்விடம் வந்த அகத்தியர் இறைவனைப் பணிந்தார். முருகப்பெருமானும் குராமரம் ஒன்றின் அடியில் இருந்து இடும்பனுக்குக் காட்சி தந்தார். சிவகிரி சக்திகிரி இருமலைகளுக்கும் தலைவனாகத் திகழ இடும்பனுக்கு அருள் செய்தார். அப்போது

**ஆசை இருப்பவனிடம் அன்பும், ஆனந்தமும் நெடுநாள் தங்குவதில்லை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னைப்போன்று காவடி சுமந்துவரும் அடியாருக்கும் அருள்புரிய வேண்டும் என்று வேண்டினான். முருகப்பெருமானும் அப்படியே வரம் தந்தார். ஆவினன் குடியானைப் பழனியில் அகத்தியர் தினம் இரண்டு வேளையும் முருகனைப் பூசித்து வைத்தியம், சோதிடம் மற்றும் ஞானநூல்களை இயற்றும் பேரருளைப் பெற்றார். இதனையே,

“செந்தமிழில் உனையே வணங்கு குருநாதர்
தென்றல் வரை முனிநாதர் அன்று கும்பிட
நல்லருளே பொழிந்த தென்பழனி மேலுகந்த பெருமாள்”

என்று போற்றுகிறார் அருணகிரியார். இதேபோன்று திருத்தணிகைத் தலத்திலேதான் இருமல் வியாதியைக் குணப்படுத்துவதற்கான சுலோகம் ஒன்றை அருணகிரிநாதர் பாடியருளினார். திருப்புகழ் நூலில் இந்த சுலோகம் உள்ளது. இதனை வள்ளிமலை சுவாமிகள் காவேரி ராகத்தில் அற்புதமாகப் பாடுவார். எந்த நோயாக இருப்பினும், ஒரு தம்ளர் தண்ணீரில் சிறிதளவு விபூதியை இட்டு வைத்துக்கொண்டு இந்த சுலோகத்தை ஆறுமுறை பாராயணம் செய்யவேண்டும். பிறகு அந்தத் தண்ணீரை அருந்தினால், ஜூரம், தலைவலி, இருமல், விஷநோய், வாதம், மார்பில் எரிச்சல் முதலான சகல நோய்களும் நீங்கும் என்று சாதுராம் ஸ்வாமிகள் அருளியுள்ளார். சகல ரோகங்களும் விலக இதனைப் படிக்கலாம் என காஞ்சிப்பெரியவாள் (தெய்வத்தின் குரல்- 2) தனது உரையில் போற்றியுள்ளார்.

இதோ அந்தத் தெய்வீகச் சுலோகம்:-

இருமலு ரோக முயலகன் வாத
மெரிகுண நாசி விடமேநீ
ரிளிவுவி டாத தலைவலி சோகை
யெழுகள மாலை யிவையோடே
பெருவயி றீளை யெரிகுலை சூலை
பெருவலி வேறு முளநோய்கள்
பிறவிகள் தோறு மெனை நலி யாத
படியுன தாள்கள் அருள்வாயே
வருமொரு கோடி யசுரர்ப தாதி
மடியஅ நேக இசைபாடி
வருமொரு கால வயிரவ ராட
வடிசுடர் வேலை விடுவோனே
தருநிழல் மீதி லுறை முகி லூர்தி
தருதிரு மாதின் மணவாளா
சலமிடை பூவி நடுவினில் வீறு
தணிமலை மேவு பெருமாளே.

மேலே குறிப்பிட்ட புராணக்கதையின் அடிப்படையில்தான் தென்னாட்டில் சில முருகன் கோவில்களில் இடும்பனைக் காவல் தெய்வமாக வழிபடுகிறார்கள். இலங்கையிலும் இடும்பனைக் காவல் தெய்வமாகச் சில கோவில்களில் வழிபடுவதுடன் காவடியும் எடுக்கிறார்கள்.

அறிவு என்பது ஆற்றைப் போன்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில இடங்களில் இடும்பனை வைரவராக வணங்குவார்கள். வைரவர் சிவனின் புதல்வன். சிவ ரூபம்- சிவ அம்சம். ஆனால் இடும்பன் அகத்தியரின் சீடன்- காவல் தெய்வம். இருவரும் வேறு வேறு. அன்று இடும்பன் வேண்டிக்கொண்டபடி பக்தர்கள் நேர்த்திக்கடனாகக் காவடி எடுக்கிறார்கள்.

முருகனின் தோற்றம் பற்றிக் கந்தபுராணம், விநாயகர் கதை, கந்தர் கலிவெண்பா முதலியன கூறியுள்ளன. கந்தபுராணத்தில்,

"அருவமு முருவமாகி அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்
பிரம்மமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனியாகக்
கருணைகூர் முகங்களாறுங் கரங்கள் பன்னிரண்டும் கொண்டே
ஒரு திருமுருகன் வந்தாங் குதித்தனன் உலக முய்ய"

எனக் கூறப்பட்டுள்ளது.

எத்தனை முகங்கள் கைகள் இருப்பினும் திருவடி இரண்டே. அன்பர்கள் சரண் அடைவது திருவடியிலேதான்.

இயல்பாக ஒரு குழந்தை பிறந்ததும் பெற்ற தாயானவள் அப்பிள்ளையையுடைய (சோதிட ரீதியாகவும்- அழகு- அதன் பிற்கால வாழ்க்கை) இவை பற்றி அறிய ஆர்வம் கொள்ளல் இயல்பு. அதன்படி எல்லாமறிந்த அன்னை வேதநாயகனை நோக்கி விபரம் அறிய விரும்பியபோது இறைவனும் அன்னை பராசக்திக்குப் பின்வருமாறு திருவாய் மலர்ந்தருளினார்.

ஆதலின் நமது சத்தி அறுமுகன் அவனும் யாமும்
பேதக மன்றால் நம்போல் பிரிவிலன் யாண்டும் நின்றான்
ஏதமில் குழவி போல்வான் யாவையும் உணர்ந்தான் சீரும்
போதமும் அழிவில் வீடும் போற்றினர்க் கருளவல்லான்.

"தேவி! எமது அருட்சக்தியான அறுமுகனும் யானும் எம்போல் பிரிவில்லாதவன். முக்காலமும் நிலையானவன். பரிசுத்தமான பச்சைக்குழந்தை போன்றவனாயினும் எல்லாமறிந்தவன். தன்னை வணங்கிச் சரணடைந்தவர்களுக்குச் சீரும் போகமும் அழிவற்ற மோட்சத்தையும் அள்ளித் தருபவன்" என்று திருவாய் மலர்ந்தருளினார்.

மேற்கூறப்பட்ட இறைவன் திருவாக்கைக் கருத்தாகக் கொண்டு ஸ்ரீ முத்துசுவாமி தீட்சிதர் பாடிய கிருதியையும் ('ஸ்ரீ சுப்பிரஹ்மண்யாய நமஸ்தே' இராகம் காம்போதி) என அதற்கு ஸ்ரீ காஞ்சிப் பெரியார் சங்கீதச் சக்கரவர்த்தி அரியகுடி ஸ்ரீ இராமானுஜ ஐயங்கார் அவர்கட்கு வழங்கிய வியாக்கியானத்தையும் இவ்விடம் குறிப்பிடல் சாலப் பொருந்தும்.

அரியகுடியவர்கள் ஒவ்வொரு சொற்றொடராக நிறுத்தி மீண்டும் அக்கிருதியைப் பாடச் சுவாமிகள் பொருள் விளக்கிவந்தார். கந்தபுராணத்துக்கு ஆறுமுக நாவலர் விரிவுரை செய்தது போன்று சுவாமிகள் பல நூல்களிலிருந்து மேற்கோள் காட்டி ஒரு பெரிய உரை செய்தார். அக்கிருதியின் ஈற்றடிகளான

"போக மோட்ச ப்ரதாத்ரே
ஸ்ரீ சுப்ரஹமண்யாய நமஸ்தே"

என்ற வரிகளுக்குப் பின்வருமாறு வியாக்கியானம் செய்தார்.

**சோதிக்கும் இறைவனே சாதிக்கவும் வைப்பான்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனலட்சுமியிடமும் சந்தானலட்சுமியிடமும் சென்று மோட்சத்தை வேண்டினால் கிடையாது. போகம் தான் கிடைக்கும். தட்சணாமூர்த்தியிடம் போய் போகத்தைக் கேட்டால் கிடைக்காது. அவர் மோட்சத்தைத்தான் தருவார். ஆனால் சுப்ரமணியரோ இரண்டையும் தருவார்.


“போகமோட்சப் ப்ரதாதா’- இம்மை மறுமை இரண்டையும் தருபவர். அப்படியே பூர்த்தியாகிறது அவர் உரை.

ஆகவே கையில் வெண்ணெய்யை வைத்துக்கொண்டு உலகெலாம் அலையாது கலியுகவரதனாகிய கந்தனை அவன் திருநாளாகிய தைப்பூச நன்னாளில் அழகன் (கந்தன்) மஞ்சத்தில் வள்ளி தெய்வானை சமேதரராகப் பவனிவரும் காட்சியை ஏதேனும் ஒரு முருகன் கோவிலிலோ அன்றி நல்லூர் கந்தசாமி கோவிலிலோ அன்றி அம்பாள் அருள் பெற்றவரும் இணுவில் மஞ்சத்தடியில் வசித்தவருமான பெரிய சந்நியாசி சுப்பிரமணியன் இற்றைக்குச் சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்னர் இந்தியாவிலிருந்து வரவழைக்கப்பட்ட சிறந்த சிற்பிகளால் அமைக்கப்பட்ட பிரமாண்டமானதும் சரித்திரப் பிரசித்தி பெற்றதும் தீபங்களால் அலங்கரிக்கப்பட்டதுமான மஞ்சத்தில் வள்ளி தெய்வானை சமேதரராகப் பவனி வரும் இணுவில் கந்தனின் கண்கொள்ளாக் காட்சியைக் கண்டு களிப்புற்று அருள்பெறுவீராக!

நல்லூரான் திருவடியை
நான் நினைத்த மாத்திரத்தில்
எல்லாம் மறப்பேனடி - கிளியே
இரவு பகல் காணேனடி.

## சந்நிதி வேலன் அருளைச் சகலரும் பெறவே வேண்டும்

சந்ததி பெருக வேண்டும்
சஞ்சலம் தீர வேண்டும்
சந்நிதி வேலன் அருளைச்
சகலரும் பெற வேண்டும்
இந்திரன் பிரமா சிவனே
இவனது அருளைப் பெற்றார்
மந்திரம் தந்திரம் இல்லா
மருந்திது ஒன்று தானே



- கவிஞர் வ. யோகானந்தசிவம் -

# அருணகிரிநாதர் அருளிய கந்தரநுபூதி

(தொடர்ச்சி...

– வாரியார் சுவாமிகள் –



34. சிங்கார மடந்தையர் தீநெறிபோய்
மங்காமல் எனக்கு வரந்தருவாய்
சங்க்ராம சிகாவல சண்முகனே
கங்காநதி பால க்ருபாகரனே.

## பதவுரை

சங்க்ராம சிகாவல- போரில் வல்ல மயிலை உடையவரே! சண்முகனே- ஆறுமுகக் கடவுளே! கங்காநதி பால- கங்கா நதியின் புதல்வரே! க்ருபாகரனே- கருணைக்கு இருப்பிட மானவரே! சிங்கார மடந்தையர்- அலங்காரம் புரிந்து கொள்ளுகின்ற பொது மாதர்களின், தீ நெறி போய்- தீய வழியிலே சென்று, மங்காமல்- கெட்டுப் போகாமல், எனக்கு வரம் தருவாய்- அடியேனுக்கு வரம் தந்தருளுவீராக.

## பொழிப்புரை

போரில் வல்ல மயிலை உடையவரே! ஆறுமுகக் கடவுளே! கங்கா நதியின் புதல்வரே! கருணைக்கு உறைவிடமானவரே! அலங்கரித்து ஆடவரை மயக்கும் பொது மாதர்களின் தீய வழியில் சென்று கெடாதவாறு அடியேனுக்கு வரம் தந்தருளு வீராக.

## விரிவுரை

***சிங்கார மடந்தையர் தீநெறி:-***

சிருங்காரம் என்ற வடமொழிச் சொல் சிங்காரம் எனத் திரிந்து வந்தது. இது விலைமகளிரைச் சுட்டியது. குலமகளிரை யன்று. விலைமாதர் ஆடையணிகலன்கள், மலர் முதலிய சாதனங்களால் சதா தம்மை நன்கு அலங்கரித்துக்கொண்டு இளைஞரை அன்றி முதியவரைக்கூட, துறந்தோரையும்கூட, மயக்கி அல்லல் கடலில் அழுத்துவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகனுடைய திருவடிப் பேரின்ப அநுபூதியை அடைய விரும்பும் பக்குவப்பட்டவர்க்கு நெறி, சன்மார்க்கமாகும். அதற்கு நேர்மாறானது ஆசை வயப்பட்ட புன்னெறியாகும்.

மங்குதல்- மழுங்குதல்.

ஞான விளக்கத்தை மழுங்கச் செய்வது பெண் மயல் என்று குறிப்பிடுகிறார்.

**தீ நெறி போய் மங்காமல்:~**

"பொய்யெல்லா மெய்யென்று புணர்முலையார் போகத்தே
மையலுறக் கடவேனை மாளாமே காத்தருளி"

-திருவாசகம்.

தீமையுள்ளன யாவையும் தந்திடும், சிறப்பும்
தோமில் செல்வமும் கெடுக்கும்; நல்லுணர்வினைத் தொலைக்கும்
ஏம நன்னெறி தடுத்திருள் உய்த்திடும்; இதனால்
காமம் அன்றியே ஒரு பகை உண்டு கொல் கருதில்?

-கந்தபுராணம்.

"காமமே நரகபூமி காணியாக் கொடுப்பது"

-திருவிளையாடற்புராணம்.

"வாமமேகலை மங்கைய ரால்வரும்
காமமில்லை எனிற் கடுங்கேடெனும்
நாமமில்லை நரகமும் இல்லையே"

-கம்பராமாயணம்.

**எனக்கு வரந்தருவாய்:~**

பெண்மயலால் தடுமாறும் ஒருவனுடைய விண்ணப்பமாக, காமாதியறுபகையும் அறவே களைந்த அடிகளார் இதனைக் கூறுகின்றார் எனக் கொள்க.

**சங்க்ராம சிவாகல:~**

சங்க்ராமம்- போர்.

"பணிபாச சங்க்ராம பணாமகுட
நிகராட்சம பட்ச பட்சிதுரங்க"

-கந்தரலங்காரம் (52)

சிகாவலம்- மயில்.

"சிகாவல கலாபமேல்"

-மகாபாரதம் (காண்டவ.2)

**கங்காநதி பால:~**

ஆறு அருட்சோதிகளும் சிறிதுநேரம் கங்கையில் தவழ்ந்த காரணத்தால் முருகன் காங்கேயன் என்று பேர் பெற்றான்; உண்மையில் அவன் கங்கையின் மகன் அல்லன்.

**நண்பனின் செய்கையில் நம்பிக்கை வேண்டும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கங்கையின் புதல்வ னென்றும்கார்த்திகை மைந்த னென்றும்
செங்கண்மால் மருக னென்றும் சேனையின்செல்வ னென்றும்
பங்கயன் முதலோர் தேறாப் பரஞ்சுடர் முதல்வன் தன்னை
இங்கிவை பலவுஞ் சொல்வது ஏழைமைப் பால தன்றோ.

-கந்தபுராணம்.

கங்கை மீதுள்ள கருணையால் கங்காபாலன் என்ற பெயரைத் தாங்கினான். ஆதலினால் "க்ருபாகரன்" என்று விளித்தார்.

க்ருபா ஆகரன்- வடமொழி தீர்க்க சந்தி.

"..... அம்புலியின்
கீற்றைப் புனைந்த பெருமான் குமாரன் க்ருபாகரனே"

-கந்தரலங்காரம் (1)

### கருத்துரை

ஆறுமுகப் பெருமானே! மாதர் மயல் படாத வரம் அருள்.

(தொடரும்...

## சந்நிதிக் கந்தன்
## கழற்கோர் கவிமாலை - 47
## "கருணை பொழிய வருவான்"

கரிய குழலி குறமாது கதிய தருள வருவேலின்
கழலி லளிந லுபசார -மகிழ்வாகி
கருணை புரியு முனமூல முனமு ளிடம தைநாடி
கவினொ டணிசெ யழகான -பல்லக்கில்
பெரிய வயிலை நனிசூடி விரளி தடவு துணிமூடி
புகலு மதனில் தருமாகச் -சதுசுற்றி
புலர மலர்க ளளிபூவெ டடியர் புயம ததுவேறி
பிரிய மொடுன திருவீதி -வருவேலா!
நெரியெ ளெணையு மிளநீரும் நினது மனம துளதேசி
நெகிழு மடியர் தருபால்பஞ் -சாமிருதம்
நிலமுள் கனிகள் தயிர்தேனும் நிறைகுங் குமஞ்சந் தனம்பூதி
நிகரில் பலவின் சுழையோடு -பன்னீரும்
பெருக வளிநல் லபிஷேகம் முடிய குளநன் நீராடி
கருணை பொழிய வருவேல -னுனதாளை
பரவு மடியர் புவிவாழ பரிவொ டுளமு ளவைகூட
பகர வரிய வரமீய்சந் -நிதியானே!

-இராஜேசுவரி ஜெகநாதன்-

**ஆடம்பரமற்ற எளிய வாழ்க்கை அறநெறிக்குத் துணை செய்யும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணவர்க்குந் தோன்றாத கற்பு

— திரு நா. நல்லதம்பி அவர்கள் —

திருவருட்பயன் என்னும் நூலில் பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள் பற்றி உமாபதி சிவாச்சாரியார் கூறியுள்ளார்கள். இங்கே பதி இறைவனையும், பசு ஆன்மாவையும் பாசம் மும்மலங்களையும் குறிக்கின்றன. மும்மலங்களாவன ஆன்மாவைப் பற்றி நிற்கும் ஆணவம், கன்மம், மாயை என்பனவாகும்.

இனி, உலகில் ஆன்மா பிறவி எடுத்தால் பதியின் அருள்பெற்று மும்மலமாகிய பாசங்களினின்றும் விடுபட்டு முத்திபெற விரும்பவேண்டும்; அப்பொழுதுதான் மனிதப்பிறவி எடுத்ததன் பயனைப் பெறலாம். அல்லது மீண்டும் மீண்டும் பிறவிக்கடலில் அழுந்தவேண்டும் என்கிறது இந்துமதம்.

சாதாரணமாக, ஆன்மாக்கள் பிறவி எடுக்கும்போது மும்மலங்களும் சேர்ந்து ஆன்மாவோடு வருகின்றன. ஆனால் பதியைப் பாசங்கள் சேரமாட்டா. பதி சத்துப் பொருளாக உள்ளது; பாசம் அசத்துப் பொருளாக உள்ளது. ஆனால், ஆன்மா தனது ஆறாம் அறிவைப் பயன்படுத்தி, பதியின் அருள் பெறமுடியும்; பெற்றுப் பதியைச் சாரமுடியும். பதியை நாடிச் சென்று ஆன்மா சத்தாகலாம்; பாசத்தோடு நின்றால் அசத்தாகவே இருக்கவேண்டியதுதான்.

இவ்வாறான நிலையில் ஆன்மா சதசத்து என்று பெயர் பெறுகின்றது.

சத்து அசத்தைச் சாராது, அசத்து அறியாது, அங்கண் இவை
உற்ற சதசத்தாம் உயிர். (திருவருட்பயன்)

இந்த மும்மலங்களின் ஒன்றாயிருக்குந் தன்மையானது, ஆன்மா பதியின் அருளை நாடி பக்திசெய்யும்போது வலிமையிழந்துபோவது. அப்பொழுது மாயையும் கன்மமும் ஆன்மாவை விட்டு நீங்கிவிடும். ஆனால் ஆணவம் பின்னரும் ஆன்மாவோடு தொடர்ந்து முத்திநிலை வரையும் செல்லும் குணமுடையது.

அவ்வாறு முத்திநிலைவரையும் ஆன்மாக்கள் பலரோடும் செல்லும் இந்த ஆணவம், இறுதிவரை எந்த ஆன்மாக்களுக்கும் தன்னை வெளிப்படையாகக் காட்டாது. அதனால் ஆணவ மலத்தை இருள்மலம் (இருண்மலம்) என்று சொல்வர். ஏன்? இருளிலும் கொடியது என்றும் சொல்வர்.

ஒரு பொருளும் காட்டாது இருள் உருவம் காட்டும்
இரு பொருளும் காட்டாது இது. (திருவருட்பயன்)

இருள் தன்னுள் அடங்கிய பொருளைக் காட்டாவிட்டாலும் தன்னைக் காட்டும். ஆனால், ஆணவ இருளானது தான் ஆன்மாவோடு சேர்ந்திருப்பதை அந்த ஆன்மா உணரவிடாது; தன்னையுங் காட்டாது. அதனால் ஆன்மா தனது பிறவியின் பயனை அடையாமல் பிழையான வழியில் சென்றுகொண்டு, பிறருக்குத் தீமையும் செய்யும்.

இப்படி எல்லா ஆன்மாக்களோடு சேர்ந்தும் அவர்களுக்குத் தான் சேர்ந்திருப் பதையோ அன்றித் தன்னையோ காட்டாமல் இருக்கும் கற்பு உடையது ஆணவம். அது இருளிலும் கொடியது. இருள் தன்னுள் மறைந்துள்ள ஒன்றையுங் காட்டாது; ஆனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னைக் காட்டும் என்கிறார் உமாபதி சிவாச்சாரியார்.

பலரைப் புணர்ந்தும் இருட்பாவைக்கு உண்டென்றும்
கணவர்க்கும் தோன்றாத கற்பு. (திருவருட்பயன்)

இதனைப் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் பின்வருமாறு விளக்குகின்றார்.

"தீண்டாத கற்புடைய செழுந்திரு ஆகிய திரௌபதி, ஆன்ம நாயகன் ஆகிய ஒருவனால் மாத்திரம் தீண்டப்படும் கற்பினள்; இருட்பாவையோ, "சத்து அசத்தைச் சாராது" என்றபடி அந்த ஒருவனாலும் தீண்டப் படாதவள். அரிபிரமேந்திராதி தேவர்க்குந் தோன்றாத கற்பினள் என்று புகழ்வதுபோல இருண்மலத்தின்- இருட்பாவையின் தீமை பழிக்கப்பட்டமை காண்க" என்கிறார்.

## அருட்பாவையும் இருட்பாவையும்

பாரதக் கதையிலே கூறப்பெற்ற திரௌபதி, துரியோதனன் முதலியோரது ஆணவமாகிய இருட்பாவையை அழிப்பதற்காக அவதாரஞ் செய்த அருட்பாவை என்றே வியாசபகவான் காட்டுகின்றார்.

சிவபெருமானுடைய அதோமுகம், அதர்மத்தை அழிக்க முற்படும்போது தோன்றுகிறது. அந்த அதோ முகத்திலிருந்து பிறந்தவள் திரௌபதி. மற்றைய ஈசானம், தற்புருஷம், வாமதேவம், அகோரம், சத்யோஜாதம் ஆகிய ஐந்து முகங்களிலிருந்தும் உதித்தவர்கள் பஞ்சபாண்டவர். அதனாலே திரௌபதி பஞ்சபாண்டவருக்குத் தர்மபத்தினி யாகிறாள்.

திரௌபதியின் பிறப்பு நோக்கம் பஞ்சபாண்டவர் மூலம் நிறைவு பெறுகின்றது என்பது பாரதக்கதை.

எமது எழுதாமறையான வேதத்தை வகுத்து எழுதியதும், பாரதக் கதையை எழுதியவரும் வியாச பகவான் என்பது நாம் அறிந்ததே.

வள்ளலே திருக்குமரா வடிவேலா
வரம்தந்து நலமருள வருவாயே
கள்ளம் நீக்கிக் கபடம் நீக்கி எமைக்காத்து
கடுகளவு துயர் வரினும் களைவாயே
தெள்ளு தமிழ் பாடல் ஓத அருள்வோனே
செய்யும் தொழில் நலமாக அருள்வாயே
உள்ளமதில் உறையும் நற் பெரியோனே முருகா
உவகை பொங்க தினம் நின்று அருள்வாயே

-தின்னப்பு தனபாலசிங்கம்-

நேர்மையாக வாழ்தலே மனிதனுடைய கடமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தொடர்ச்சி...

# வட இந்திய தல யாத்திரை

– செ. மோகனதாஸ் சுவாமிகள் –

**காலம்: 13.06.2013 வியாழக்கிழமை**

காசி யாத்திரையில் முக்கியத்துவம் வாய்ந்தது ஹரித்துவார். இறைவனை அடைவதற்கு முதல் வாசலாக சொல்லப்படுகிறது. இருபுறமும் உள்ள மலைத் தொடர்களின் நடுவே கங்கை ஓடி வருகின்ற அழகே அழகு. முதன்முதலாக கங்கை பூமியில் விழுந்து வருகின்றமையால் அதன் பிரவாகம் அச்சத்தைத் தருவதாக இருக்கும். அதன் காரணமாக கரையோரம் கற்தூண்கள் நாட்டப்பட்டு நீண்ட இரும்புச் சங்கிலிமூலம் பிணைக்கப்பட்டுள்ளது. இதன் பயனாக கங்கையில் நீராடும் யாத்திரிகர்கள் பயம் இல்லாமல் நீராடலாம். அந்த வகையில் எமது குழுவினரோடு நானும் நீராடுவதற்கென கங்கைக் கரையோரம் கட்டப்பட்ட படிக்கட்டில் இறங்கி நீராட ஆயத்தமானோம். கங்கையின் வேகம் காரணமாக நாம் ஒருவரை ஒருவர் பிடித்துக்கொண்டும், அமைக்கப்பட்ட சங்கிலிக் கோர்வையைப் பற்றிப்




பிடித்தும் எமது நீராடலை முடித்துக்கொண்டோம். அன்று பகல் அங்கே உள்ள சங்கராச் சாரியாரால் தோற்றுவிக்கப்பட்ட மடம், மற்றும் அங்கே அருட்திறம் கொண்டதாக விளங்கும்

**கோபம் அன்பை அழிக்கிறது, செருக்கு அடக்கத்தை அழிக்கிறது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானசதேவி ஆலயம் அமைந்த உயரமான மலை உச்சிக்கு கம்பிமூலம் செல்லும் டோலியில் ஏறி மானசதேவியை வழிபட்டோம்.



அந்த ஆலய வளாகம் முழுவதும் மக்கள் கூட்டம். அவ்வளவு மக்களுக்கிடையிலும் ஒரு ஒழுங்கு முறையான வழிபாடு. எமது குழுவினர் அனைவரும் இவ்வழிபாட்டில் கலந்து கொண்டனர். அந்த ஆலயம் அமைந்த மலை உச்சியில் இருந்து பார்த்தபொழுது ஹரித்துவாரில் உள்ள முழுப் பிரதேசமும் பார்க்கக்கூடியதாக இருந்தது. ஒரு பக்கம் மலை முகடுகள். அதைச்சூழ உள்ள முகிற்கூட்டம். அதன் நிமித்தம் உடலுக்கு இதமான குளிர். பச்சைப் பசேலென்ற மரக்கூட்டம். அதன் அடியில் ஓடிவரும் கங்கையின் நெளிவு சுழிவுகள், இக்காட்சிகளையெல்லாம் எழுத்தில் வடிக்கமுடியாது. நேரில் பார்த்தால்த்தான் அக்காட்சியின் அழகு புரியும். இக்காட்சிகளை எல்லாம் எமது குழுவினர் தத்தமது புகைப்படக் கருவிமூலம் சிறைப்படுத்திக்கொண்டார்கள்.

ஒருவழியாக மானசதேவியின் வழிபாட்டை முடித்துக்கொண்டு விடுதிக்குத் திரும்பினோம். அன்று பகல் உணவை முடித்து வெளியில் போய்வந்த உடல் அசதி தீரும் வண்ணம் எமக்கென ஒதுக்கப்பட்ட அறைகளில் மாலைவரை தங்கி இருந்தோம். அன்று இரவு கங்கைக் கரையில் தினமும் நடைபெறும் கங்கா பூசையில் கலந்துகொள்ளும் வண்ணம் நானும் எனது குழுவினரும் கங்காபூசை நடைபெறும் இடத்தை அடைந்தோம். அந்தப் பூசையின் மகத்துவம் காரணமாக கங்கைக் கரையெல்லாம் ஒரே ஜனத்திரள். எல்லோரும் இந்தியாவின் பல பாகங்களில் இருந்து வந்த யாத்திரிகர்கள். எங்கும் கங்கா மாதாஜிக்கு ஜே என்னும் ஒலியுடன் கூடிய பூசை வழிபாடுகள்.

மனிதன் சிரிப்பது பிறரைப் பார்த்து, அவன் அழுவது தன்னைப் பார்த்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரையோரம் உள்ள நீண்ட படித்துறையில் 9 பீடம் வைக்கப்பட்டு அதன்மேல் பூசைக்குரிய பொருட்களோடு அடுக்குத் தீபங்கள் ஒற்றைத் தீபம் முதலியன வைக்கப்பட்டிருந்தன. அதனைச் சூழ உள்ள பிரதேசம் முழுவதும் அங்கே இடம்பெறும் பூசை வழிபாடுகளைக் காணும் பேரவாவுடன் யாத்திரிகர்கள் அமர்ந்திருந்தார்கள். சரியாக 7 மணி அளவில் ஒரே வயதையொத்த அழகான உடையலங்காரத்துடன் 9 பூசகர்கள் வருகை புரிந்து அங்கேயுள்ள அவரவர்க்கென வைக்கப்பட்டிருந்த ஒன்பது பீடத்திலும் ஏறி நின்று கங்கா மாதாவுக்கு செய்யும் பூசையானது கூடியுள்ளவர்களை பக்திப் பரவசத்துடன் ஈடுபடச் செய்யும் வழிபாடாகும். அத்துடன் ஓடும் கங்கையில் பார்த்தால் ஒருவித இலையால் செய்யப்பட்ட தொன்னையில் பூவுடன் நெய்த்தீபம் ஏற்றி யாத்திரிகர்கள் செய்யும் வழிபாடானது எங்கும் காணாத அதிசயம். கங்கை நீரில் அவை மிதந்து செல்லும் காட்சி பார்ப்போரை பரவசப்படுத்தும். இத்தரிசனத்தில் எமது குழுவினரும் ஈடுபட்டு இரவு 10 மணி அளவில் விடுதிக்குப் போய்ச் சேர்ந்தோம். நாம் இருந்த விடுதிக்கும் கங்கைக் கரைக்கும் $1^1/_2$ கிலோமீற்றர் தூரம் இருக்கும். நாம் அனைவரும் காலாற நடந்து சென்றே இத்தரிசனத்தில் ஈடுபட்டோம். நடந்த தூரம் தெரியாதபடி வீதி இருமருங்கும் உள்ள வியாபார நிலையங்களைப் பார்வையிட்டபடியே தங்களுக்கு விரும்பிய பொருட்களையும் வாங்கியதோடு அன்றைய நாள் கழிந்தது.

**காலம்: 14.06.2013 வெள்ளிக்கிழமை**

இன்று காலை 6 மணியளவில் எமது பயணம் ஹரித்துவாரில் இருந்து ரிஷிகேஸ் செல்வதற்குரிய ஒழுங்கினை ஸ்ரீரெங்கநாதன் அவர்கள் மேற்கொண்டிருந்தார்கள். அந்த வகையில் ஒழுங்கு செய்யப்பட்ட பேருந்தில் காலை, மதியத்திற்குரிய உணவு வகைகளோடு நாம் அனைவரும் புறப்பட்டோம். காலை 9 மணி அளவில் ரிஷிகேஸ் போய்ச் சேர்ந்தோம். அங்கும் கங்கையில் நீராட்டத்தை முடித்து கங்கை நதிக்கு மேலாக அமைக்கப்பட்ட ஒரு நீண்ட தொங்கு பாலத்தின் ஊடாக ஒரு கரையிலிருந்து மறு கரைக்குச் சென்றோம். வரும் யாத்திரிகர்கள் அனைவரும் அப்பாலத்தின் ஊடாக போய்வரும்போது அப்பாலத்தின் ஆட்டமானது எமது குழுவினரைக் கிலி கொள்ளச் செய்தது. மிகவும் உறுதியான முறையில் அப்பாலத்தை அமைத்திருந்தார்கள். அப்பாலத்தில்



**கோபம் தவத்தைக் கொன்றுவிடும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்து ஓடிக் கொண்டிருக்கும் கங்கையைப் பார்க்கும்பொழுது கரையின் இருபக்கமும் அமைக்கப்பட்டிருந்த படித்துறையில் மக்கள் நீராடும் காட்சி ஒருபுறம், சூழவுள்ள அந்தப் பிரதேசத்துக்குரிய வகையில் அமைக்கப்பட்ட மிகப்பிரமாண்டமான ஆலய அமைப்புக்கள்



அதனைச்சூழ உள்ள மக்கள் கூட்டம். இத்தனை காட்சிகளையும் எமது குழுவினர் பார்த்து மெய்மறந்து அந்தச் சூழலுக்கு ஏற்றவகையில் இணைந்து செயற்பட்டமை எந்தவிதமான மனிதரையும் தன்வயப்படுத்தும் மகிமை ரிஷிகேசத்திற்கு உண்டு என்பது புரிந்தது. அதன் நிமித்தம் அங்கே அமைந்துள்ள சிவானந்த ஆச்சிரமமும் அதனை அண்டியுள்ள பிரதேசம் முழுவதும் காவியுடையுடனும், சடாமுடியுடனும் நடைபயிலும் துறவிகளையும் காணக்கூடியதாக இருந்தது. அங்கே அமைந்துள்ள பல இடங்களையும் பார்வையிட்டபின் எமது குழுவினர் (மீண்டும் தொங்கு பாலத்தினூடாக மறு கரையை அடையாது) கங்கை நதியில் இரு கரைக்கும் போய் வந்து கொண்டிருந்த படகின்மூலம் மறுகரையை அடைவதற்குரிய ஒழுங்கினை மேற்கொண்டு படகுத்துறையை அடைந்தோம். அத்துடன் ஓடிக்கொண்டிருக்கும் கங்கையில் படகில்போகும்போது கரையோரம் உள்ள பல இடங்களையும் பார்க்கலாம் என்ற எண்ணமும் படகில் போவதற்குரிய காரணமாக அமைந்தது. ஆம், நாம் படகுத்துறையை அடைந்தபொழுது எம்மோடு வந்திருந்த ஒரு அம்மையார் படகில் ஏறி கங்கையைக் கடப்பதற்கு பயந்த வண்ணம் இருந்தார். நானும் கார்த்திகேயனும் அம்மையாருக்கு மனத்தைரியம் ஊட்டி நாம் இருக்கிறோம் வாருங்கள் என்று அவரது கையைப் பிடித்து அழைத்து படகில் ஏற்றுவதற்கு முயற்சித்தபோது நாம் அனைவரும் அதிர்ச்சியடைந்த அந்தச் சம்பவம் இடம்பெற்றது. (தொடரும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரதா முருகா மயில் வாகனனே

- திருமதி சறோஜினிதேவி சிவஞானம் அவர்கள் -



நெஞ்சக்கன கல்லு நெகிழ்ந்து உருகத்
தஞ்சத்து அருள் சண்முகனுக்கு இயல்சேர்
செஞ்சொற் புனை மாலை சிறந்திடவே
பஞ்சக்கர ஆனை பதம் பணிவாம்

ஆத்ம ஞானம் அருளுவது அநுபூதியாகும்.

ஆடும் பரிவேல் அணி சேவல் எனப்
பாடும் பணியே பணியாய் அருள்வாய்
தேடும் கயமா முகனைச் செருவில்
சாடும் தனியானை சகோதரனே.

கந்தரனுபூதி பெற்றுக், கந்தரனுபூதி சொன்ன
எந்தை அருள் நாடி இருக்கும் நாள் என் நாளோ.

கந்தரனுபூதி என்பதற்குக் கந்தப் பெருமானுடன் கலந்து (விளைந்த) கிடைக்கப்பெற்ற "அனுபவஞானம்" என்பது பொருள். முருகப் பெருமானை முன் முனைப்போடு வேண்டி வேண்டித் தொழுதவர்கள் உலகில் எல்லாம் அடைந்தவர்களாவார்கள். நயக்கத்தக்க நல்லருள் பெற நவநிதியும் பெற முருகப்பெருமானின் கலியுகவரதனின் கந்தசஷ்டி விரதமும் கந்தசஷ்டியில் பூண்டுள்ள விழாக்கோலமும் இவ்வுலக உயிர்கள் உய்தி பெறும் பொருட்டே ஆகும்.

முருகனை அடைவதற்கு இலகுவான வழி அவன் "புகழ்" பாடுதலாகும். முருகா, முருகா முருகா என்று நாம செபம் செய்தலுமாகும். ஒருகால் முருகா என்றால் இருகாலும் தோன்றுவான் முருகன் என்பது ஆன்றோர் வாக்கு.

கருதா மறவா நெறி காண எனக்கு
இருதாள் வனசந்தர என்று இசைவாய்
வரதா முருகா மயில் வாகனனே
விரதா சுரசூர விபாடணனே.

(கந்தரனுபூதி- 21)

அருணகிரிநாதர் தந்த கந்தரனுபூதிப் பாட்டிலே 21ஆவது பாடல் இது. மிகவும் சிறப்பான பாடல். முருகன் தரும் வரம் பற்றிப் பேசுவது இதுவாகும். சூரசம்மார வரத மூர்த்தியே! நினைப்பு மறைப்பற்ற அனுபூதி நிலைபெற உன் பாதக் கமலங்களை..... பாதக்கமலங்களை..... மட்டுமல்ல உன் திருவருளையே தந்தருள்வாய். எப்படி? "உன்னை" மறப்பில்லாத நினைப்புத் தர வேண்டும் முருகா! உன்னை நான் மறந்தால் தானே நினைப்பதற்கு! முருகா யான் உன்னை மறக்க வொண்ணாத நினைப்போடு இருக்க வேண்டும். உன் நினைவு மரண பரியந்தத்திலும் என்னைவிட்டு நீங்கக் கூடாது என்பதே அனுபூதிமான்கள் வேண்டிக் கேட்கும் வரமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரதா! கேட்ட வரங்களை அள்ளித் தருபவனே! எப்படி அள்ளித்தருபவன், கேட்ட வரங்களைத் தாமதிக்காது கேட்ட மாத்திரத்திலேயே அள்ளித் தருபவன்.

1) தூய்மையான அடியவர்கள்!

2) ஐம்புலன்களையும் அடக்கும் அடியவர்கள்!

தாமதமின்றி முருகன் அருளைப் பெற்று உய்யலாம் என்பதே கந்தரனுபூதியின் கருத்தாகும். இந்த அநுபூதிப் பாடல் மிகவும் சிறந்தது. ஆறுமுகப் பெருமானுடைய அருளைப் பெற்று அநுபூதியடையும் ஒவ்வொருவரும் முருகவேளிடம் கருதா! மறவா! நெறிபெறும் பொருட்டு வேண்டுகின்ற அரிய வேண்டுகோள் இதுவாகும்.

மேலும் பழனியாண்டவனை- தண்டாயுதனைத் தேவர்க்கு வரம் தந்த வரதா முருகா தம்பிரானே என தேவர்க்கு வரம் தருபவனை மிகவும் ஏற்றமுடன் போற்றுகின்றார் திருப்புகழ் அருளிய அருணகிரிநாதர். வாழ்வு தந்தவன் வரதன் முருகன் என்று திருவுந்தியாரும் இதனைப் போற்றுகின்றது.

இரவு பகலில்லாத இன்ப வெளியூட்டே
விரவி விரவி நின்றுந்தி பெற
விரைய விரைய நின்றுந்தி பெற

(திருவுந்தியார்- 20)

இரவு பகலில்லாத இது இன்பவொளி நேரம், இரவு பகலில்லாத இன்பம் தருதலாகிய நேரம். பரமானந்தத்திலே கூடி நின்று இளைப்பாறும்படி என்று திருவுந்தியார் எடுத்துக் காட்டுகின்றது. கருதல், மறத்தல், நினைப்பதும், மறப்பதும் அநுபூதிக்குத் தடை. எனவே இரவும் பகலுமற்ற இடத்தில் இருப்பது எளிது. இரவு பகலில்லாத இன்ப வெளியானது இடையறாத இன்ப அனுபவமாகும் என்பதே இதன் பொருளாகும். இதனைக் கந்தரலங்காரமும் மிகச் சிறப்பாகக் கூறுகின்றது.

அரப்புனை வேணியன் சேய் அருள் வேண்டும் அவிழ்ந்த அன்பால்
குராப்புனை தண்டை அம்தாள் தொழல் வேண்டும் கொடிய ஐவர்
பராக்கு அறல் வேண்டும் மனமும் பதைப்(பு) அறல் வேண்டும் என்றால்
இராப்பகல் அற்ற இடத்திலே இருக்கை எளிதல்லவே

(கந்தரலங்காரம்- 74)

எனவே இராப்பகலற்ற இடம் எவ்வளவு எளிதானதோ, இலகுவானதோ அவ்வளவு எளிதானதும் இலகுவானதும் "முருகன் அநுபூதி" பெறுவது. முருகனை மறவாது நினைப்போடு என்றென்றும் இருப்பதற்கு முருகனே வரம் தர வேண்டும். வரதா முருகா உன் வரம் வேண்டும்.

அருணகிரிப் பெருந்தகை முருகன் புகழை எந்தெந்த வழிகளில் எல்லாம் பாட முடியுமோ அந்தந்த வழிகளிலெல்லாம் பாடிப்பாடி இன்புறுகின்றார். எமக்கு அள்ளி அள்ளி அருளியிருக்கின்றார். திருவண்ணாமலைக் கோபுரத்தில் முருகனின் திருவருள் பெற்றவர் தான் அருணகிரிநாதர். அருணகிரிப் பெருமான் அருளிய சப்த இரத்தினங்களைப் பார்ப்போம். முருகன்:- திருப்புகழ், கந்தர் அலங்காரம், கந்தர் அநுபூதி, வேல் விருத்தம், மயில் விருத்தம், திருவகுப்பு, கந்தரந்தாதி என்ற ஏழும் சிறந்த இரத்தினங்களாக

**படைகளைவிட வல்லமை உள்ளவை கருத்துக்களே.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிளிர்கின்றன. அதிலே ஒரு மந்திர நூலாகத் திகழ்வது கந்தரனுபூதியாகும். இப்பாடல்கள் 51ம், 51ம் மந்திரங்களேயாம். இவை அனைத்தும் மந்திர மாலைகள் ஆகும்.

"அநுபூதி கேட்டு அகம் உருகிக் கண்ணீர் வராது" நிற்பவர்கள் யாருமே இருக்க மாட்டார்கள். கேட்ட வரங்களை அருள்பவரே முருகவேள் மயில் வாகனக் கடவுளே முருகவேள். அருவருப்புள்ள அசுரனாகிய சூரபன்மனை வேலாயுதத்தால் பிளந்தவரே முருகவேள். பிளந்தது மட்டுமல்ல அவனுக்கு நல்லறிவு கொடுத்து "ஞானமும் அருளி" சேவலும் மயிலுமாக வாழ்வு கொடுத்தவராவார். "ஓம் முருகா" ஆடும் பரிவேல். பாடும் பணியே பணியாய் அருள வேண்டும். அடியார் உய்யும் பொருட்டு பாடி நலம் திகழ நல்லருள் புரிபவனை, வரந்தரும் முருகனை இந்தக் கந்தசஷ்டி நன்நாளிலே தொழுது மனம் மொழி மெய்களினாலே வந்தித்துச் சிந்தித்து அருள் பெறுவோமாக.

1ஆவது முகம்:- தொழுவார்க்கும், தொழ வேண்டுமென்ற அறிவிலார்க்கும் அருளும் முகம் முதலாவது முகம். இவ்வருளைப் பெற கந்தசஷ்டி நன்நாள் சிறந்த பொன்னான நாளாகும்.

2ஆவது முகம்:- கள்ளங்கபடமில்லாத மனமுடையவர்க்கு வேண்டுவார் வேண்டும் வரம் ஈந்து வினை தீர்ப்பது கந்தனின் அடுத்த முகம்.

3ஆவது முகம்:- மந்திர விதியின் மரபு விதியை உணர்த்துவது "சரவணபவ" ஐவகை வேள்விக்கும் உதவும் முகம்.

4ஆவது முகம்:- வழிபடுவோரையும், பிறரை வழிபட உணர்த்துவோரையும் பூரணச் சந்திர ஒளியோடு அருள் கொடுப்பது.

5ஆவது முகம்:- தீயோரை அழித்து தீயோரல்லாத நல்லோர் அழிந்து விடாமல் காத்தருளும் முகம்.

6ஆவது முகம்:- இல்லறம் (திருமணவாழ்வு). இவ்வுலகிற்கு இல்லற வாழ்வை உணர வைக்கும் முகம்.

ஆறுமுகமான பொருள் நீ அருள வேண்டும்.
ஆதி அருணாசலம் அமைந்த பெருமாளே.

பரமானந்தத்திலே கூடி நின்று இளைப்பாறுதல் பெறுவதும், இளைப்பாறுதல் தருவதும் முருகவேளின் கந்தசஷ்டி விரதமாகும். கந்தசஷ்டியில் கந்த விரதம் அனுஷ்டித்து கந்தனருள் பெறுவோமாக.

## சந்நிதியான் பிரசாதம்

சந்நிதியான் திருவருளால் தழைத்தனவாம் பணிகளுள்ளே
செந்நெறியில் நடாத்திவரும் சிவஞானச் சுடரொளியே
இன்னலெனு மிருள்நீக்கி இதயமெலாம் மலர்விக்கும்
உன்னரிய பிரசாதம் உவந்தேற்றுப் பயன்கொள்க.

-மு. தியாகராசா-

விருந்தினரைத் தக்கமுறையில் உபசரிக்க வேண்டும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ ரமண நினைவலைகள்

(தொடர்ச்சி...

## 11. தயாபர ரமணன்

முதுகு வளைந்து, பழுத்த மூதாட்டியான அம்மணி அம்மாள் ரமணநகர் வாசி. ஆச்ரமத்தில் கோயில் விளக்கேற்றுதல் முதலிய கைங்கரியங்களைச் செய்தவர். வைராக்கியம் அதிகம். வயதான காலத்தில் தனியே வசித்த இவர் சமீபத்தில்தான் ஆச்ரமத்திலிருந்து உணவு பெற்றுக்கொள்ள சம்மதித்தார். நான் கேட்டதன் பேரில் தனக்கும், பகவானுக்கும் நடந்த முதல் சம்பாஷணையைத் தெரிவித்தார். அதன் விபரம் வருமாறு:



1940க்கு முன்பே நான் என் தாயாருடன் பகவானைத் தரிசித்தேன். அதன்பின் என்னால் பகவானது சந்நிதியை விட்டு இருக்க முடியவில்லை. அதனால் வீட்டை விட்டு ஓடி வந்துவிட்டேன். எனக்கு அப்போது இளம் வயது. பகவானை வணங்கி, "சுவாமி! எனக்கு உபதேசம் கொடுங்கள்" என்று கேட்டேன். பகவான் புன்னகைத்து "எடுத்துப் போக பெரிய பாத்திரம் கொண்டு வந்திருக்கிறாயா?" என்றது. தன் கைகளை அகல விரித்து எவ்வளவு பெரிய பாத்திரம் என்பதையும் காண்பித்தது. நான் அசையாமல் நின்றேன். அதன்பின் பதினைந்து நிமிடங்கள் என்னை தயவுடனும், அனுக்கிரகத்துடனும் பார்த்தது. நான் மெய்சிலிர்த்து நின்றேன். அந்த மாதிரி அனுபவம் என்வாழ்வில் அதற்கு முன்பு ஏற்பட்டறியேன். அலையலையாக ஆனந்தம் பொங்கியது. என் தைரியத்தையெல்லாம் ஒன்று திரட்டி, மறுபடி பகவானைக் கேட்டேன். "சாமி, நான் இங்கு நிரந்தரமாக வசிக்கலாமா?" அதற்கு பகவான் "நான் யாரையும் வரவோ, தங்கவோ, போகவோ சொல்வதில்லை. எல்லாம் அவரவர் பிராரப்தப்படி நடக்கும்" என்றது. அதற்கெல்லாம் அப்போது எனக்கு அர்த்தம் புரியவில்லை. அதையே நம்பி, அதன் மலர்ப்பதத்திலேயே இன்றுவரை இருப்பதன் காரணம் அந்த முதல் கருணா கடாக்ஷமே என்று, இன்று எனக்கு நன்றாகத் தெரிகிறது. பகவான்தான் கடவுள், கருணையின் வடிவம். நான் இங்கு தங்கும் பொறுப்பை பகவான் வெளிப்படையாக ஏற்கவில்லைதான். ஆனால் வாழ்நாளெல்லாம் இங்கேயே தனியாக வசிப்பதென்பது அதனருளன்றி நடக்கக் கூடிய காரியமா? சாத்தியமாகுமா?"

பகவான் உங்களை ஆச்ரமத்தில் தங்க சிபாரிசு செய்யவில்லை என்றதும் நீங்கள் என்ன செய்தீர்கள்? என்று நான் கேட்டதுதான் தாமதம், அவர் சட்டென்று "என்ன சொல்கிறாய் நீ? பகவான் வெளிப்படையாகப் பேச வேண்டுமா என்ன? அதன் ஒரு பார்வை போதாதா? உடனே அருள்சக்தி வேலை செய்ய ஆரம்பித்து விட்டதே,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எச்சம்மா அன்று என்னைத் தன் வீட்டுக்கு அழைத்துப் போனார். அங்கு சிலகாலம் வசித்துவிட்டுப் பின்னர் ஆச்ரமத்துக்கெதிரில் சிறிய வீட்டுக்கு குடிபெயர்ந்தேன். பகவானருகில் இருக்கவும், அதன் எழில் முகத்தைப் பார்க்கவும், தேனினுமினிய அதன் குரலைக் கேட்கவும் மாத்திரமே நான் விரும்பியதெல்லாம். அவை எனக்கு ஏராளமாக, வேண்டுமட்டும் கிடைத்தன" என்றார். அவர் முகத்தில் வாழ்வு நிறைவேறியதன் திருப்தி நிலவியது.

*      *      *      *      *      *

மிகவும் வயதாகி, "நடுவுக்கலப்பல்" கிராமத்தில் தன் வீட்டில் வசித்து வந்த, பகவானின் பழவடியாரான திரு தொப்பைய முதலியார், "மா ஆனந்தமயீ" அவர்களால் அறிமுகம் செய்யப்பட்ட சமயத்தில் "தபஸ்ஸ்வாமி" என்று பெயரிடப்பட்டவர். 1930க்குப் பிறகு பகவானிடம் வந்து சேர்ந்ததிலிருந்து, பரம பக்தராக விளங்கினார். மாத்ரு பூதேச்வரர் ஆலயத்தின் கும்பாபிஷேகச் சடங்குகளை மேற்பார்வை பார்ப்பதற்கு இவர் நியமிக்கப்பட்டவுடன் பகவான் வெளிப்படையாகவே அதை ஆமோதித்தது. நான் அனேகமுறை கேட்டுக்கொண்டபின் அவர் தன் சத்குருவின் நினைவாகச் சிலவற்றை எழுதி அனுப்பினார்.

"அளவு மீறிய குடும்பத் தொல்லைகளால் நான் வாழ்வில் வெறுப்புற்றிருந்த சமயம் அது. ஒருநாள் நான் பகவானது அறையில் நுழையும்போது பகவான் தனியே வீற்றிருந்தது. அச்சமயம் ஒரு கோவிலின் புனருத்தாரண வேலை- மிக சோர்வளிப்பது- என்னிடம் ஒப்படைக்கப் பட்டிருந்தது. மனம் தளர்ந்து, துன்பத்தில் மூழ்கிய நான் உலக வாழ்வைத் துறந்து துறவறம் மேற்கொள்ள விழைந்தேன். துணிந்து நான் பகவானிடம் "பகவானே! ஆன்மிக சாதனை செய்வதற்கு, உலகத் தொடர்புகளைத் துண்டிக்க வேண்டுமல்லவா?" என்று கேட்டேன். சிலை போன்ற மௌனம்தான் பதில்!"

சில நாட்களுக்குப் பின் மறுபடி அந்த விஷயத்தை எடுத்தேன். "இன்னும் பகவான் பதில் அளித்தருளவில்லையே" என்றேன். கடுமையான குரலில் பகவான், "துறப்பது என்றால் என்னவென்றெண்ணுகிறாய்? மேற்கொள்வது என்றால் என்ன? துறப்பதாம், எடுத்துக்கறதாம், போவது எங்கே? எடுத்துக்கொள்வது எதை? எங்கும் எல்லாமே 'நான்' தான். யார் எதைத் துறப்பது? எங்கே போவது?" என்றது.

பகவான் இதை மிகக் கடுமையான குரலில் சொல்லவே, அது என்னைக் கண்டிப்பதாக எண்ணி வெளியில் போய் அழ ஆரம்பித்துவிட்டேன். பதினைந்து நிமிடங்களுக்குப் பிறகு சிறிது அமைதி அடைந்து பகவான் நான் அழுததைப் பார்த்து விட்டதோ என்று யோசிக்கலானேன். பகவான் என்னை, முகத்தில் அதே கடுமையுடன் பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்டு நடுங்கிவிட்டேன். பின்னர் நான் பகவானருகில் போனதும் அது முருகனாரிடம், "அவரைப் பார். எல்லாவற்றையும் துறந்து ஓடிவிட வேண்டுமாம்! நாம் எங்கிருந்து வந்தோம், வேறெங்காவது போவதற்கு? "உள்ளதோ உள்ளபடியே" எப்பொழுதும் இருக்கிறது. எங்கு போவது, போவது யார்?" திடீரென பகவானின் முகபாவம் மாறியது. அன்பும் தயவும் நிறைந்தது. மென்மையாக, பரிவாக என்னைப் பார்த்து, "நீ யார்? சொல்" என்று இனிய குரலில் கேட்டது. நான் தைரியத்தை வலிந்து வரவழைத்துக்கொண்டு "எனக்குத் தெரியும், பகவானே, நான் சுத்த ஆன்மா" என்றேன். அதற்கு பகவான், அருள் நிறைந்த பார்வை பார்த்து மீண்டும் பேச ஆரம்பித்தது.

**உண்மை நட்பு இல்லாத நிலையே மிகக்கொடிய தனிமை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிந்துகொள்ள வேண்டியதெல்லாம் அவ்வளவுதான். அறிவு பூர்வமான இந்த உணர்வு திடமற்ற ஞானம். உரிய காலத்தில் திட ஞானம் பெறுவாய். அதுதான் முடிவான உண்மை. நீ எதுவோ அதுவாக இருப்பாய்". இந்த உறுதிமொழிகளை பகவானிடமிருந்து பெற நான் கொடுத்து வைத்திருக்க வேண்டும். எனக்குத் தேவையானது வேறென்ன உளது?"

(தொடரும்...

## கதியாய் வருவாய் கதிரேசா!

சரணம் சரணம் முருகையா
சண்முக வடிவே குமரையா
வரணும் வரணும் வேலையா
வரங்கள் அருள்வாய் கந்தையா
(சரணம்... சரணம்...)

சந்நிதியில் அன்னதானக் கந்தன்
நல்லூரில் அலங்காரக் கந்தன்
கதிர்காமத்தில் காவடிக் கந்தன்
மாவிட்டபுரத்தில் கற்பூரக் கந்தன்
(சரணம்... சரணம்...)

ஆணும் பெண்ணும் சிறுவர் சிறுமியரும்
ஆனந்தமுடன் உன் வாசல் வந்தோம்
இருவினைகள் கடலில் தடுமாறும்
எங்கள் வாழ்வைக் கரை சேர்ப்பாய்
(சரணம்... சரணம்...)

பாற்காவடி பன்னீர்க் காவடி
பூக்காவடி புஷ்பக்காவடி
அனைத்துக் காவடிகளும் கட்டி
அரகராச் செய்து புறப்பட்டோம்
(சரணம்... சரணம்...)

கண் தெரியாத முதியோர்க்கும்
கண்ணாய் வருவாய் சுப்பிரமண்யா
வாய்பேச முடியா உயிர்களையும்
வாழவைப்பாய் வண்ணமயில் வாகா
(சரணம்... சரணம்...)

கவலையால் வாடும் நெஞ்சங்களுக்கு
கருணை பொழிவாய் கார்த்திகேயா
கதியற்றோர் வாழ்வு கரைசேரக்
கதியாய் வருவாய் கதிரேசா!
(சரணம்... சரணம்...)

- திரு ரவிசாந் செ -

அறிவு அச்சத்தை முறிக்கும் மருந்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித வாழ்க்கையில் மனதின் ஆதிக்கம்

–தொகுப்பு: திரு கு. கோபிராஜ் அவர்கள்–

மனிதனை ஆட்டிப்படைப்பது மனம். நம் வாழ்க்கையில் ஏற்படும் சுக துக்கங்களுக்கு மனத்தின் கண் நிகழும் மாறுபாடுகள்தான் காரணம். நல்லதைக் கெட்டதாகவும், தீயதை நல்லதாகவும் இருப்பதை இல்லாததாகவும், இல்லாததை இருப்பதாகவும் அதேபோல், அழகாக இருப்பதை அழகு இல்லாதது போலவும், அழகாக இல்லாததை அழகுள்ளதாகவும் நம்மை எண்ணிச் செயற்படுத்துவது நம் மனம்தான்.

நம் மனம் எப்படியிருக்கிறதோ அப்படியேதான் புற உலகிற்கு காட்சி அளிக்கும். தூய்மையான மனது வெளியில் தூய்மையையே காட்டுகிறது. ஆகையால் தூய்மை, தீமை இவை புறத்தே இல்லை. அகத்தில்தான் உள்ளது.

புறத்தூய்மை நீரான் அமையும் அகம்தூய்மை... -திருவள்ளுவர்.

வேலைக்குத் தகுந்த வேஷம் போட்டுத்தான் ஆக வேண்டும். உதாரணமாக வேலைக்குப் போகும்போது, ஓர் உடை, வீட்டில் இருக்கும்போது ஓர் உடை இப்படி அணிகிறோம் அல்லவா? அந்தந்த உடையை அணியும்போது மனதிலும் அதற்கேற்ப பக்குவம் வந்து விடுகிறது.

-ஸ்ரீ ஜெயந்திர சரஸ்வதி ஸ்வாமிகள்.

மனதில் அன்பும், சந்தோஷமும் இருக்கிறபோதுதான் தெளிவாக இருக்கிறது. மனம் என்பது ஓர் திரை மாதிரி நாம் அன்றாட வாழ்க்கையில் கண்களில் தெரிகிற ஒவ்வொரு பொருளும், விஷயமும் நிகழ்ச்சியும் விம்பங்களாக நம் மனத்திரையில் நன்றாகப் பதிந்து விடுகின்றன.

மனித குலத்தின் வாழ்க்கையில் வெற்றியோ, தோல்வியோ அவரவர்களுடைய மனப்பான்மையைப் பொறுத்தே இருக்கிறது. ஒரு சிறைக்கைதி ஜெயில் அறைக்குள் தரையில் தூங்குகிறான். ஒரு செல்வந்தர் மாளிகையில் கட்டிலில் தூங்குகிறார். அங்கே வெளியில் தாழ்ப்பாள். இங்கே உள்ளே தாழ்ப்பாள். அவ்வளவுதான் வித்தியாசம். தூங்கிவிட்டால் அப்புறம் இருவர் மனநிலையும் ஒன்றுதான்.

-திருமுருக கிருபானந்தவாரியார்.

விரும்பத்தகாத எண்ணங்களையும், உணர்ச்சிகளையும் மனிதனின் நினைவு மனதிலோ, ஆழ்மனதிலோ இடம்பெறாமல் செய்வதற்கு "கத்தாரிசிஸ்" என்று மனவியல் நிபுணர்கள் சொல்வதாக கூறப்படுகிறது. கவலைகள் மனிதனை விட்டு சுலபமாக விலகாது. நம்முடைய முயற்சியால்த்தான் அதை விலக்கமுடியும்.

"ஒரு மனிதன் எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கவேண்டும் என்று மனதில் தீர்மானிக்கிறானோ அந்த அளவுக்குத்தான் மகிழ்ச்சியாக இருக்கிறான்.

-ஆப்ரஹாம் லிங்கன்.

எண்ணங்களின் தொகுப்பே மனம். எண்ணங்கள் படிப்படியாக அகலுகின்ற போது மனிதனுடைய விருத்திகளும் அடங்குகிறது. மனது அடங்க அடங்க அதன் சஞ்சலத்தன்மை குறைகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"யோக சித்த விருத்தி நிரோத" மனதைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதும் ஒருவித யோகம்தான். எது நல்லது? எது கெட்டது? என்று மனிதனின் அறிவு முடிவு செய்யும் தறுவாயில், மனம் என்ற நாகம் அழித்து விடுகிறது.

சுவாமி ஆசுதோஷானந்தர், நம் மனம் வாழ்க்கையைப் பற்றி நன்கு புரிந்துகொள்ள வேண்டும் என்று ஒரு உதாரணத்துடன் விளக்குகிறார். ஆறு ஒன்று பாய்ந்து செல்கிறது. சுற்றிலும் இருள் சூழ்ந்த நேரம். கரையிலுள்ள தெருவிளக்கின் வெளிச்சம் ஆற்றுநீரில் வட்ட வடிவில் விழுந்து கொண்டிருக்கிறது. ஆற்றின் சிற்றலைகளின்மீது இலை ஒன்று மிதந்து வந்துகொண்டிருக்கிறது. வட்ட வெளிச்சத்தின் எல்லைக்குள் வரும் வரை அதனை நாம் காணமுடியவில்லை. எல்லைக்குள் வரும்போது அது மிதப்பதையும் மறு எல்லை வரை செல்வதையும் காண்கிறோம். அந்த எல்லையைக் கடந்தபின் அந்த இலை மீண்டும் நம் பார்வையிலிருந்து மறைந்துவிடுகிறது. நம் வாழ்க்கையும் இதேபோல்தான். புத்தர் சொல்லியிருக்கிறார். "எவருடைய சிந்தை கலங்காமல் இருக்கிறதோ, எவருடைய மனம் குழப்பமடையாமல் இருக்கிறதோ, எவர் புண்ணியத்தையும் பாவத்தைப் பற்றியும் சிந்திப்பதில்லையோ, அவர்களுக்கு அச்சம் என்பதே அணுவளவும் இல்லை.

பர்த்ருஹரி நீதி சதகத்தில் மூர்க்கனின் மனதை ஒரு காலும் திருத்தமுடியாது என்பதை கீழ்க்கண்டவைகளுடன் ஒப்பிட்டு சொல்லியிருக்கிறார்.

1. முதலை பற்களின் நடுவில் உள்ள மாணிக்கத்தை வெளியே எடுத்துவிட முயற்சிப்பது.
2. கொந்தளிக்கும் கடலை படகைக் கொண்டு கடக்க முயற்சிப்பது.
3. சீறும் பாம்பை பூச்சரத்தைப்போல் தலையில் சூடிக்கொள்ள ஆசைப்படுவது.
4. மணலை அரைத்து அதிலிருந்து எண்ணெய் எடுப்பது.
5. கானல்நீரை பிழிந்து தண்ணீராக்கி தாகத்தைப் போக்கிக்கொள்ள முயற்சி செய்வது.
6. உலகம் பூராவும் திரிந்து முயலின் கொம்பை அடைய முயற்சிப்பது.
7. தாமரைத் தண்டில் உள்ள மெல்லிய நூலைக் கொண்டு மதம் பிடித்த யானையை கட்ட முயற்சிப்பது.
8. மென்மையான வாழைப்பூவின் நுனியால் வைரக்கல்லில் துளைபோட நினைப்பது.
9. தேனைக் கடலில் கொட்டி இனிமையாக மாற்ற விரும்புவது.

பகவத் கீதையில் கிருஷ்ணன் அர்ஜுனனிடம் மனிதனின் மனதைப் பற்றிக் கூறுகிறார். "எவன் தன்னை உதாரணமாகக் கொண்டு இன்ப துன்பங்கள் இரண்டையும் சமமாகப் பார்க்கிறானோ, அந்த யோகிதான் சிறந்தவன் என்பது துணிபு"

வாழ்க்கையில் ஏற்படும் இன்ப துன்பம், நன்மை தீமை, இருட்டு வெளிச்சம், விருப்பு வெறுப்பு இவை எல்லாவற்றிற்கும் காரணம் மனம்தான். கடிவாளம் இல்லாதது மனக்குதிரை.

மனிதகுலம் சிந்திக்கத் தொடங்கிய காலத்திலிருந்து அன்றும் இன்றும் என்றும்- எழுகின்ற கேள்வி "இந்த நிலையில்லாத உலகில் நிலைபெற்றிருக்க எப்படி வாழ வேண்டும்" என்பதுதான். விலங்கு நிலையில் உள்ளவர்கள் "எப்படியும் வாழலாமென்று வாழ்கின்றனர்.

**நல்ல நம்பிக்கை என்பது உண்மையின் மறுபிறப்பு.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனாலேயே வாழ்வியல் தரத்தில் தாழ் நிலையில் வாழ்கின்றனர். மனித நிலையில் வாழ்பவர்கள், பகுத்தறிவின் துணையால் இப்படித்தான் வாழவேண்டுமென்று விரும்புகின்றனர். முயல்கின்றனர். வெற்றி கண்டவர்கள் தெய்வநிலைக்கு உயர்கின்றனர்.

ஆதலால்த்தான் வான் புகழ்கொண்ட வள்ளுவப் பெருந்தகை "வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்" என்கிறார். (பெரிய புராணத்தில் வாழ்க்கை நெறி)

மனசு மனிதனை படாதபாடு படுத்துகிறது. சுழிக்காற்றில் அகப்பட்ட சருகைப்போல் மனதின் பிடியில் அகப்பட்ட மனிதன் தத்தளிக்கிறான்.

போர்களிலெல்லாம் மிகப் பயங்கரப்போர். மனதுடன் மனிதன் நடத்தும் போர் ஆகும். ஆனால் விருப்பு, வெறுப்பு, சுகம், துக்கம் யாவும் புத்தி இயங்கும் வரைதான் ஏற்படுகின்றன. உறங்கும்போது மனம் செயல்படாமல் இருக்கிறது.

மனதைக் குரங்கின் சுபாவத்திற்கு ஒப்பிட்டிருக்கிறார்கள். நாம் மனதில் நல்ல எண்ணங்களைப் பயிரிட முயற்சிகொள்ள வேண்டும். ஆனால். அநேக சமயங்களில் நம் மனம் நினைக்கும் நல்லவற்றை செய்ய முடியவில்லையே என்ற வருத்தம் ஏற்படும். நல்லொழுக்கம் பெற்றால் மனம் பக்குவநிலையை அடையும். வள்ளலார் சொல்லுகிறார்,

"மடம் புகபேய்
மனத்தாலே மயங்குகின்றீர், மனதை வசப்
படுத்தீர் வழிப்படுத்தும் வழி துறை கற்றறியீர்"

ராமகிருஷ்ண பரமஹம்சர் மனிதனின் மனதைப் பற்றி உதாரணம் காட்டி அழகாக சொல்லியிருக்கிறார். "கீழே கொட்டிய கடுகைப் பொறுக்கி எடுப்பது வெகு சிரமம். அதுபோல பல திசைகளிலும் ஓடும் மனதை ஒருமைப் படுத்துவது எளிதன்று. ஆனால் வைராக்கியத்தால் அதை சாதித்துவிட முடியும்.

விரும்பத்தகாத எண்ணங்கள் அல்லது செயல்கள் இவைகளை மனதில் அடைத்து வைக்காமல், வெளியே மனம் விட்டு பேசினால் மன இறுக்கம் நீங்கி உடல் ஆரோக்கியம் கெடாமல் இருக்கும்.

"மனச்சுமையை இறக்கி வைக்க கற்றுக்கொள்ளுங்கள். உங்கள் மனதை குடைவது எதுவானாலும் அதனை உடனுக்குடன் பேசி வெளியேற்றி விடுங்கள்.

-Dr ஆர்.எம். காப்மேயர்.

"மனோநாம ஸங்கல்ப் விகல்பாத்மிக அந்த
கரணவ்ருத்தி: புத்திர்நாம நிச்சயாத்மிக
அந்த கரணவ்ருத்தி:

-வேதாந்தசாரம் 60,65)

எப்போதும் சஞ்சலப்படுவது மனம். ஒன்றை நிச்சயமாக முடிவு செய்வது புத்தி. மனிதனின் மனோபாவம் தான். அநேக வித்தியாசங்களுக்கு காரணம் "மாசுபடிந்த தங்கம் இருக்கிறது. மாசு படிந்திருப்பதால், தங்கத்தை வீசி எறிந்து விடுவாயா? நெருப்பிலிட்டு புடம்போட்டு அழுக்கை நீக்கி பயன்படுத்துவாயல்லவா? அழுக்கு நீக்கியவுடன் அது புனிதமாகிறது. அதேபோல்த்தான் மனம்.

-சத்திய சாயிபாபா.

உழைப்பிலேதான் சுகமே உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம் (தொடர்ச்சி)

| | | |
|---|---|---|
| திருமதி மாலதி பாலச்சந்திரன் | மலேசியா | 10000. 00 |
| திரு ஆதிசேரன் குடும்பம் | பருத்தித்துறை | 15000. 00 |
| திரு இரத்தினேஸ்வரன் | (அவுஸ்திரேலியா) ஈவினை | 6000. 00 |
| திருநாவுக்கரசு தேவகுமார் | கனடா | 20000. 00 |
| சந்திரப்பிரகாசம் கபிஷேசன் | பருத்தித்துறை (கல்விப்பணி) | 5000. 00 |
| திருமதி திலகம் செல்வகுலசிங்கம் | கரவெட்டி | 2000. 00 |
| அ. தவராசா | வட்டுக்கோட்டை | 1000. 00 |
| வெங்கடாசலம் கமலாதேவி தம்பாலை | அச்சுவேலி | 1000. 00 |
| முருகேசு சுவாமிகள் அடியார் | கிளிநொச்சி | 8000. 00 |
| திருமதி சரஸ்வதி தியாகராஜா | லண்டன் | 5000. 00 |
| முருகேசு சுவாமிகள் | கீரிமலை | 3000. 00 |
| புருஷோத்தமன் மழவராஜர் | புத்தூர் | 1000. 00 |
| ம.க. ஸ்ரீதரன் சபாபதிப்பிள்ளை வீதி | உடுவில் | 2000. 00 |
| திரு ஞானேஸ்வரன் | கொழும்பு | 3000. 00 |
| முருகன் அடியார் | உடுத்துறை | 20000. 00 |
| தேவன் ஸ்ரோர்ஸ் | ஆவரங்கால் | 1புட்டி பருப்பு, 1புட்டி அவல் |
| சிவகுமாரி நித்தியானந்தன் | பிரான்ஸ் | 1மூடை அரிசி, 10k பருப்பு |
| திரு மணிவண்ணன் | கொழும்பு | 1மூடை அரிசி |
| திரு மகாலிங்கம் | வத்தளை | 7000. 00 |
| ஜெ. சந்திரப்பிரகாஷ் குடும்பம் | பருத்தித்துறை (மருத்துவப்பணி) | 5000. 00 |
| K.V. துரைசாமி நினைவு | மயிலிட்டி | 1000. 00 |
| திரு செந்தூரன் | கரணவாய் | 1000. 00 |
| சு. பரஞ்சோதிநாதன்மூலம் சுதர்ஷன் வர்ணிகா | யாழ்ப்பாணம் | 2மூடை அரிசி, 2புட்டி பருப்பு, 1மூடை சீனி, 5000. 00 |
| திரு திவாகரன் பிறவுண்றோட் | யாழ்ப்பாணம் | 2மூடை அரிசி, 1மூடை சீனி, 1புட்டி பருப்பு, 10பெட்டி அங்கர், 10000. 00 |
| சுதாகரன் மங்களராணி | கரணவாய் | 500. 00 |
| திருமதி நடராஜா செல்வராணி | மல்லாகம் | 2000. 00 |
| மோகன் கடை ஆவரங்கால் | | 2மூடை அரிசி, 1மூடை சம்பா, 2புட்டி மா, 1புட்டி பருப்பு |
| திரு ஞானலிங்கம்மூலம் ஹரிதரன் | கோண்டாவில் (கனடா) | 10000. 00 |
| செல்வரத்தினம் குடும்பம் | சுன்னாகம் | 1000. 00 |
| செ. சின்னத்துரை | நெல்லியடி | 1000. 00 |

**அகந்தையைத் துறந்தால் இறையருளைப் பெறலாம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| த. சாந்தகுமாரன் | முல்லைத்தீவு (U.K) | 10000. 00 |
| திருமதி நடராசா | லண்டன் | 5000. 00 |
| ஐ. இராமசாமி | சுன்னாகம் | 10000. 00 |
| அருமைத்துரை ஜனார்த்தன் | மானிப்பாய் | 10000. 00 |
| ர. யதுஷங்கீத் | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| தா. கந்தசாமி | கரணவாய் தெற்கு | 10000. 00 |
| கணபதிப்பிள்ளை கந்தையா கோவிற்கடவை | கரவெட்டி | 2000. 00 |
| சிவசக்தி சிவகுமாரன் | | 5000. 00 |
| J. சந்திரப்பிரகாஷம் | பருத்தித்துறை | 10000. 00 |
| வி. சிந்துஜன் | உடுவில் | 2000. 00 |
| கு. நித்தியானந்தன் | யாழ்ப்பாணம் | 2000. 00 |
| இ. மகேந்திரம் | புன்னாலைக்கட்டுவன் | 3000. 00 |
| திருமதி வே. இராசநாயகம் | நீர்கொழும்பு | 3000. 00 |
| T. ஸ்ரீதரன் | லண்டன் | 15000. 00 |
| பாபு வெதுப்பகம் | புன்னாலைக்கட்டுவன் | 2மூடை அரிசி |
| முத்து கணேஸ் | இணுவில் | 1மூடை அரிசி |
| மருதம் | நெல்லியடி | 2மூடை அரிசி |
| பா. அன்னஞானம் | சுழிபுரம் | 1000. 00 |
| வி. நாகம்மா | சுழிபுரம் | 500. 00 |
| ச. வைத்தியநாதக் குருக்கள் சண்முகப்பிரியா பொலிகண்டி | | 4000. 00 |
| திருமதி சாரதா சந்திரசேகரசர்மா | கனடா | 2000. 00 |
| செல்வி சோபிகா சுந்தரேசசர்மா | கனடா | 2000. 00 |
| T. ஸ்ரீரெங்கநாயகி தாதி உத்தியோகத்தர் | யாழ்ப்பாணம் | 4000. 00 |
| க. கலாபரன் | கனடா (கோண்டாவில்) | 2000. 00 |
| புஸ்பகாந்தா இராமச்சந்திரா | டுபாய் | 10000. 00 |
| சி. பத்மநாதன் குமாரசாமிவீதி | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| திருமதி செல்வநாயகி ஞானசுந்தரம் | கரவெட்டி | 5000. 00 |
| குமாரலிங்கம் குருபரன் | நோர்வே | 5000. 00 |
| குமாரலிங்கம் கிரிதரன் | நோர்வே | 5000. 00 |
| திருமதி தங்கராசா சரஸ்வதி | பருத்தித்துறை | 5000. 00 |
| வேலுப்பிள்ளை செல்லத்துரை | கரவெட்டி கிழக்கு | 2000. 00 |
| அ. சாவித்திரியம்மா | பருத்தித்துறை | 5000. 00 |
| E.S.P. நாகரட்ணம் அன்சன்ஸ் | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| சுசிலா நகைமாடம் | பருத்தித்துறை | 1மூடை அரிசி |
| இ. குமாரசாமி ஆசிரியர் | அச்சுவேலி | 2000. 00 |
| த. தனுஷன் | வயாவிளான் | 1000. 00 |
| ஸ்ரீ சிவராம் ரேடர்ஸ் | யாழ்ப்பாணம் | 1மூடை பருப்பு |

(தொடரும்...)

**நல்ல எண்ணங்களைத் தூவினால்தான் நல்ல பலனைப் பெறலாம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சக்தியின் சொருபம் அன்னை ஸ்ரீ சாரதாதேவி அம்மையார்

**– திரு பாலன் சுதாகரன்** அவர்கள் –



உயிர்களைப் பக்குவப்படுத்தி முத்தியை வழங்கும் நிலையில் இறைவன் முதலில் எடுக்கும் வடிவம் தாய் வடிவமாகும். அதாவது குழந்தையைப் பெற்று பாலூட்டி, தாலாட்டி தொட்டிலில் வளர்த்தி பின்பு சிறிது வளர்ந்த பின்பு விளையாடவிட்டு பின் நின்று பார்த்து மகிழ்பவள் தாய். குழந்தை குறும்பு செய்யுமாயின் அச்சுறுத்தியும் பின்பு அணைத்தும் அறிவுரைகள் கூறியும் பேணுபவள் தாய். எவை எவை எப்பொழுது தேவையென அறிந்து கொடுத்து வளர்ப்பதுமின்றி அமைதியாக உறங்க வைப்பதும் தாய். இதே நிலையிலேயே இறைவனும் தாயாக நின்று ஆன்மகோடிகளைப் பேணி எடுத்துப் பிறப்பறுக்கின்றான் என்பது சைவ சித்தாந்த முடிவு. இறைநிலையில் இது ஒரு உயர்ந்த தத்துவமாகும்.

உலக வாழ்க்கைக்கு ஜீவ ஒளியாகப் பெண் குலமே அமையவேண்டும். தாமம், சத்தியம், தாய்மை, பொறுமை, கருணை, கற்பு, தன்னம்பிக்கை, தன்னடக்கம் ஆகியவை அனைத்தும் பெண்குலத்துக்குப் பெருமையைத் தேடி, கணவனைக் கண்கண்ட தெய்வமாகப் போற்ற வேண்டிய கடமை பெண்களுக்கு உண்டு.

இதன்படி சக்தியின் சொருபமாகத் தோன்றி காமம் அணுகாத காதல் தெய்வமாக ஒளிபரப்பி, காதல் முதிர்ந்து தியாகமே ஓருருவமாகி, மன்னுயிரில் தன்னுயிர் போற்றி, சாந்தத்தின் பீடமாக அமர்ந்து, அன்றும் இன்றும் என்றும் மனுக்குலத்தை அழியாப் பேரின்ப வீட்டிற்கு இட்டுச் செல்லும் வழியைக் காட்டி நிற்கின்ற அன்னையின் அருளை அறிபவரே அறிவர்; அனுபவிப்பவரே பயன் துய்ப்பர்; அவர் வழி நிற்பவர் ஆனந்தப் பெருவாழ்வில் திளைப்பர்.

வங்காளத்திலுள்ள ஜெயராம்பாடிக் கிராமத்தில் 1853ஆம் ஆண்டு நேர்மைக்கோர் உறைவிடமாய் விளங்கிய இராமச்சந்திர முகாஜிக்கும், அன்பே உருவாய் வாழ்ந்த சியாமா சுந்தரிக்கும் அருமகளாய் அவதரித்தார் அன்னை சாரதா தேவியார். பள்ளிப்படிப்பு எதுவுமே அற்றவரெனினும் பெண்மைக்கு வேண்டிய அரும்பண்புகளெல்லாம் நிறைவு பெற்று வளர்ந்தார். ஐந்து வயதிலேயே கைலையில் எழுந்தருளியுள்ள கதாதரப் பெருமானாகவே கமார்ப்புகூரில் உதித்த கதாதரனை (ஸ்ரீ ராமகிருஸ்ண பரமஹம்சரை) வாழ்க்கைத் துணைவராகப் பெற்றார். அன்னையார் மூன்று வயதிலேயே ஆலய விழாவொன்றுக்குச் சென்றிருந்தபோது தனது ஆன்மநாயகன் கதாதரனே என்பதைச் சுட்டிக் காட்டினார். ஸ்ரீ ராமகிருஷ்ணரும் தனது ஆன்மீகப் பணிக்கு அருந்துணைவியாக வரவிருந்த சிறுமி சாரதை வாழும் இடம் இதுவெனக் குறிப்பிட்டு உறவினரை அவ்விடத்துக்கு மணம்பேச அனுப்பினார். எனவே இவர்கள் இருவரும் பிறப்பிலேயே

**இயல்பாகக் கொடுக்கக்கூடியதை மறைக்காதே.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவரை ஒருவர் அறிந்து கொண்டவராதலின் பிறவிதோறும் தொடர்ந்து வருகின்ற இணை பிரியாத தெய்வீகத் தம்பதிகளாக மதித்தனர்.

இராமகிருஷ்ண தேவரின் அருட்சக்தியாக வாழ்ந்து இன்றும் உள்ளுவார் உள்ளத்தில் உயிர்த்துடிப்புடன் தரிசனம் தந்து அருள் சார்ந்து காத்துவரும் அன்னையின் வாழ்வு பாரதப் பெண்மையின் சக்தியெல்லாம் ஒருங்கு திரண்டு முழுமை பெற்ற பூரண வாழ்வாகும். வேதகாலத்தில் பெண்மை காத்து ரிஷியாக விளங்கிய மைத்ரேயி ஞானம் பெறுவது ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு யாக்ஞய வல்லியர் என்ற முனிவரைக் கணவராக அடைந்தார். அதேபோல் அன்னை சாரதைக்கும் ஞானநிலை கொடுத்து ஞாலத்து உயிர்களுக்கெல்லாம் ஞானத்தாயாக்குவது ஒன்றையே கருத்திற்கொண்டு ஸ்ரீ ராமகிருஷ்ண முனிவர்; அவரைத் தனது ஆன்ம நாயகி ஆக்கிக் கொண்டமை ஒப்பிட்டு நோக்கற்பாலது. சீதை, சாவித்திரி போன்ற இந்தியப் பெண்மைக்குப் பெருமை சேர்த்த பல மாதர் மணிகளின் வாழ்க்கை நிகழ்வுகளும் அன்னையின் வாழ்வில் நாம் காணும் நிகழ்வுகளும் ஆராய்ந்து நோக்கும் இடத்து ஒத்தவையாய் இருப்பதை உணர்ந்து கொள்ள முடிகிறது.

நாணம் என்னும் போர்வையுள் தன்னை மறைத்து, தக்ஷிணேஷ்வரத்தில் தரிசனத்துக்கு வந்த திரளான மக்கள் கூட்டத்தின் கண்களிற் படாமலே வாழ்ந்து இல்லறமாம் நல்லறம் நடத்திய அன்னை வீரத்தாய் ஆகவும் விளங்கினார். சந்தர்ப்பம் ஏற்பட்டவிடத்து கயவரின் கொடுமையைக் காய்ந்து அழிக்கும் வீரசக்தியும் அன்னையிடம் விளங்காமலில்லை.

பாரத மாதா ஈன்ற வீராங்கனையாகிய ஜான்சிராணி போன்ற வீரமகளிரெல்லாம் தலையாய வீரம் படைத்திருந்தார் அன்னை. அப்படியான சந்தர்ப்பங்களில் காளிதேவியாகவே செயற்பட்டார். ஆனால் சில சமயங்களில் கயவரிடத்திலுள்ள கீழ்மைக் குணங்களைத் தனது அன்பினால் போக்கி, அவர்களை உத்தம பக்தர்களாக மாற்றியதும் உண்டு. உட்பகைவர்களாகிய காமக்குரோதாதிகள் முதலிய அசுரரை பூண்டோடு நாசமாக்கித் தூய்மையின் பிறப்பிடமாய் விளங்கிய தெய்வமாது எமது அன்னை.

அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்ற நல்லணி அணிந்து புனிதையாய் விளங்கினார். அவர் எதிரில் சாதி, மத, இன, குல, குண, நிற, நாடு போன்ற எந்த வேறுபாடுகளுமே தலை காட்டவில்லை. "மகனே நீ குருதேவரின் குடும்பத்தைச் சேர்ந்தவனன்றோ? உனக்குத் தீஷை அளிக்குங்கால் உனது ஜாதியைப் பற்றி விசாரித்தேனா? இங்கு ஜெயராம் பாடியில் நீ வரும்போது எவரும் உன்னைத் தடுக்கமாட்டார்கள்! என்று தாழ்ந்த குலப் பக்தனொருவனுக்கு உறுதி அளித்தார். அந்நிய நாட்டவரது போட்டியாய் தமது பரம்பரைத் தொழிலை இழந்த "மகம்" மதியக் குடும்பத்தினர் பலர் வறுமையாலும் பசி பட்டினியாலும் பிழைக்க வழியின்றித் திருட்டுத் தொழிலை மேற்கொள்ள நேர்ந்தபோது தமது புதுவீடு கட்டுவதற்கு அவர்களையே கூலியாட்களாக அமர்த்தித் தொழில் கொடுத்து அவர்கள் வாழ வழிகாட்டினார். இவ்வாறு திருடர்களையும் தமது பேரன்பால் அடியார்களாக்கி வந்த தெய்வ சக்தி அவரிடம் இருந்தது. அன்னையாரது தன்னலமற்ற அன்பும், எளிமையும், மகிழ்ச்சியும் நிரம்பிய வாழ்க்கை, தூரத்திலும் அண்மையிலும் உள்ள மக்களைக் கவர்ந்தது. அவர் தனது வாழ்க்கையாலன்றிச் சொல்லினால் மதபோதனை செய்ததில்லை.

**இன்சொல்லின் விலை அற்பம். ஆனால் அதன் மதிப்போ அதிகம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் தன்னை தஞ்சமென அடைந்த அனைவருக்குமே மந்திரோபதேசம் செய்து புனிதராக்கினார். அவர்கள் பாவமெல்லாம் தானே ஏற்று இடையறாது மந்திரஜெபம் பண்ணினார். இதயத்தின் ஆழத்தில் இடையறாது மந்திர ஓசை ஒலித்தவாறே நாட் கடமைகள் அனைத்தையும் ஒழுங்காக நிறைவேற்றினார். பற்றற்ற நிலையில் பரனடியில் சிந்தையை ஒடுக்கி கருவி கரணங்களால் கருமமாற்றும் திறனை அன்னையிடம் தான் நாம் கற்றுக்கொள்ள வேண்டும். சுவாமி விவேகானந்தரின் சிஷ்யையாய் மேலை நாட்டிலிருந்து வந்த பெண்ணடியார்களோடு கலந்து உறவாடி அவர்களுக்கெல்லாம் அருமைத் தாயாகவே விளங்கினார். பழமையும், புதுமையும் ஒன்றினைந்த புனிதை அவர். இராமகிருஷ்ண தவப்புதல்வர்களுக்கு அழுதழுது இறையடி பணிந்து அருந்த வழியற்றி வசிப்பிடம் பெற்று இராமகிருஷ்ண சங்கமே உருவாவதற்கு அத்திவாரமிட்டவர் அன்னை. இதனாலேயே அவர் "சங்கஜனனி" என்று இராமகிருஷ்ணரின் அடியார்களால் போற்றப்படுகிறார். பல கன்னியரும் காளையரும் அர்த்தமற்ற பகட்டு வாழ்க்கையை விட்டு ஆத்மீக வாழ்க்கையை மேற்கொண்டனர். அவரது உயர்ந்த ஆத்மீக ஆதர்ஷ வாழ்வும், பேரன்பும் இப்பொழுதும் இளம் சமுதாயத்துடனும் பேரெழுச்சி கொடுத்துக் கொண்டிருக்கிறது.

ஸ்ரீ சாரதாமணி தேவியாரின் நிலைத்த சின்னங்களாக பேலூரிலும் ஜெயராம் பாடியிலும் கட்டப்பட்டுள்ள கோவில்களும் ஆச்சிரமங்களும் விளங்குகின்றன. இன்று இவ்விரு இடங்களையும் தலைமைப்பீடமாகக் கொண்டு அகில உலகிலும் கிளை ஸ்தாபனங்கள் உருவாகி சமய சமூகப் பணிகள் சிறக்க அருள் சுரந்தவர் அன்னை. அந்தத் தெய்வத் திருத்தாயின் 161ஆவது ஜனன நிறைவு மார்கழி மாதம் 17ஆம் திகதி உலகளாவிய ரீதியில் இடம்பெறுகின்றது. இந்த நன்னாளிலே அந்தப் பரம தயாநிதியாம் கருணா சொருபிணியின் பாதக் கமலங்களைப் பணிந்து அவரருளில் திளைத்து உய்வோமாக!

## முன்னேற ஒரே ஒரு வழி

முன்னேற்றம் என்ற கட்டடத்துக்கு அத்திவாரம் போன்றது தெய்வ நம்பிக்கை. அந்த நம்பிக்கை எமது சமுதாயத்தில் குறைந்து போவதன் பலனாகத்தான் நாம் பலவிதமான இன்னல்களையும் இடர்பாடுகளையும் சந்தித்து வருகின்றோம். காற்றைக் கண்ணாற் காணமுடியாது. அது உயிர்கள் வாழ்வதற்கு இன்றியமையாததாய் இருப்பது போல் இறைவனும் இறைசக்தியும் எமக்குத்தேவை. அடையாளம் காட்டுவது சிரமமாக இருந்தாலும் இறைவன் என்ற ஒருவன் நமக்குத் தேவையானவரே. அவர் தேவை என்ற காரணமே உண்மை என்பதை எமது நடைமுறை வாழ்க்கையில் நாம் உணருகின்றோம். ஆனாலும் பட்டம், படிப்பு, பொருளாதாரம் என்று நாம் வாழ்க்கையில் உயரும்போது நான்தான் பெரியவன் என்ற மமதை கொண்டு நடக்கின்றோம். அந்நிலையில் இறை நம்பிக்கை இருக்குமானால் நாம் ஒவ்வொருவரும் உயர்ந்தவர்களாவோம். இறை நம்பிக்கை இல்லாவிட்டால் நம் சொந்த வாழ்விலும்சரி, நம் சமுதாய வாழ்விலும் சரி முன்னேற முடியாது.

அற்பனுக்கு கோபம் அனாவசியமாக வரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "காளமேகம்" பாடல்கள் (தொடர்ச்சி...)



**வேணிப் பிரான்:**

பெருமான் மன்மதனையும் முப்புரத்தையும் எரித்தான். எனினும், அவனின் உடலில் ஒரு பாதி உமையாளுடைய தல்லவா? அவன் செய்ததெல்லாம் தன் பத்தினியின் துணை யினைக் கொண்டேதான் அல்லவோ! என்கிறார் கவிஞர். சிவன் செயலில் சக்திக்கும் சரிபாதி பங்குண்டென்பது உண்மை தானே!

சித்தசனை முப்புரத்தைச் செந்தழலாய் வீழவொரு
பத்தினியைக் கொண்டெரியப் பண்ணினான் - நித்தம்
மறையோத வீற்றிருக்கும் மண்டலமென் றில்லைப்
பிறைசூடும் வேணிப் பிரான்.

"தில்லை நகரத்திலே வீற்றிருப்பவனும், இளம்பிறை சூடியவனும், செஞ்சடையினை உடையவனுமாகிய பெருமான் மன்மதனையும் திரிபுரத்தையும் அவை செந்தழலால் எரிந்து விடும்படியாக ஒப்பற்ற தன் பத்தினியைத் துணைகொண்டே செய்தனன். அப்படிப்பட்டவனுக்கு நாளும் மறையோத வீற்றிருக்கின்ற சிறப்புத்தான் எதற்காகவோ? அது வேண்டாததே என்றதாம்."

அவளின் துணையைக் கொண்டே அவன் அந்தச் செயல்களைச் செய்திருக்க, அவளைப் போற்றாமல், அவனை மட்டுமே போற்றுவது முறையன்று; ஆதலின் போற்றுதல் அவனுக்கு மட்டும் எதற்காகவோ? துணைநின்ற அவளையே போற்றுவோம் நாம் என்கிறார் கவிஞர்.

**கொங்கை வடு:**

சிவபெருமான் அருள் திருமேனியினை உடையவன் என்றாலும், அம்மையின் கொங்கையின் வடுக்கள் மட்டும் அவன் திருமேனியிலே ஒருபோதும் மறையாமலேயே விளங்கும் என்கிறார் காளமேகம். அரிய கற்பனைச் சுவை விளங்கும் சிறந்த பாடல் இது.

ஆறா தொருக்காலு மையாமே கம்பருக்கு
மாறா வடுவாய் மறையாதே - பேறாகச்
செங்கையினா லேயமுந்திச் செய்யகச்சிக் காமாட்சி
கொங் கையி னாலிட்ட குறி.

"ஐயா! தான் பெற்ற பெரும்பேறாகக் கருதிச் செவ்விய தன்மையுடைய காஞ்சிக் காமாட்சி அம்மையானவள், தன் செங்கையினாலே இறுக அழுத்தித் தழுவித் தன் கொங்கைகளினாலே இட்ட அடையாளமாகிய வடுவானது, ஒருபோதுமே நின் திருமேனியை விட்டு மறையவே மாட்டாது. என்றும் மாறாத வடுவாக அது நின்பால் விளங்கிக் கொண்டிருக்கும்.

**துன்பத்தைக் காணாதவன் இன்பத்தைக் கண்டுகொள்ள முடியாது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவனே அனைத்துக்கும் முதலாகிய பெருமான் எனினும் அவன் அன்பர்க்கு அருளுகின்ற பெருங்கருணையும் உடையவன். அந்தக் கருணை வெள்ளத்தினாலேயே அம்மையின் கொங்கை வடுக்களை அவன் தன் திருமேனியிற் கொண்டிருக்கிறான் என்று அறிதல் வேண்டும். இதனால், பெருமானின் அருளும், அம்மையின் காதற் பெருக்கமும் கூறியதாயிற்று.

**நஞ்சு தின்றதென்?**

தேவர்களும் அசுரர்களும் ஒன்றுகூடிப் பாற்கடலைக் கடைந்தனர். அந்த நாளிலே எழுந்த நஞ்சினைச் சிவபெருமான் உண்டு அவர்களைக் காத்தனர். அதனைக் குறிப்பிட்டு, "அவர் தன் உயிரை விட்டுவிடுவதற்குக் கருதிப்போலும் அங்ஙனம் நஞ்சினை அருந்தினர்" என்று பாடுகிறார் காளமேகம்.

கல்லால் அடித்ததற்கோ காலால் உதைத்ததற்கோ
வில்லா லடித்ததற்கோ வெட்கினீர் - சொல்வீரால்
மஞ்சுதனைச் சூடுமுயர் மதிலானைக் காவாரே
நஞ்சுதனைத் தின்றதென்முன் னாள்.

சாணக்கியன் உம்மைக் கல்லால் அடித்தானே அதற்காகவோ? கண்ணப்பன் உம்மைக் காலால் உதைத்தானே அதற்காகவோ? அருச்சுனன் உம்மை வில்லால் அடித்தானே அதற்காகவோ? எதற்காகவோ? நீர் வெட்கமுற்றீர்? மேகங்கள் தன்னைச் சூழ்ந்திருக்க விளங்கும் உயரமான திருமதிலையுடைய திருவானைக்காவிலே வீற்றிருக்கும் சிவபெருமானே! நீர் முற்காலத்திலே நஞ்சுதனைத் தின்றீரே! அது எதனால் என்பதனை எனக்குச் சொல்வீராக.

உலக வாழ்விலே வெறுப்பு ஏற்படும்போது ஒருவர் நஞ்சினை உண்டு உயிரை விட்டுவிட முயல்வது இயல்பு. அதனை மனதிற்கொண்டு, பெருமான் நஞ்சுண்ட செயலுக்கும் இப்படிக் காரணங்களைக் கற்பிக்கிறார் கவிஞர்.

**பதினாறு பேர்கள்:**

"பதினாறும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்வாய்" எனப் பலரும் வாழ்த்துகிறார்கள். அவை எவை என்பதனைக் கூறுவது இச்செய்யுள்.

துதிவாணி வீரம் விசயஞ் சந்தானம் துணிவுதனம்
அதிதானியஞ் சௌபாக்கியம் போக - வறிவழகு
புதிதாம் பெருமை யறங்குலநோ வகல்பூண்வயது
பதினாறுபேறும் தருவாய் மதுரைப் பராபரனே.

மதுரைப் பராபரனே- மதுரைப் பேரூரிலே கோயில் கொண்டிருக்கின்ற பரம்பொருளே! துதி- புகழ் (1), வாணி- கல்வி (2), வீரம்- மனவுறுதி (3), விசயம்- வெற்றி (4), சந்தானம்- மக்கட்பேறு (5), துணிவு- தைரியம் (6), தனம்- செல்வம் (7), ஆதி தானியம்- அதிகமான தானிய வளம் (8), சௌபாக்கியம்- சிறந்த இன்பம் (9), போகம்- நல்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுபோகம் (10), அறிவு- ஞானம் (11), அழகு- பொலிவு (12), புதிதாம் பெருமை- புதிதாக வந்து நாளுக்கு நாள் சேர்கின்ற சிறப்பு (13), அறம்- அறம் செய்யும் பண்பு (14), குலம்- நல்ல குடிப்பிறப்பு (15), நோவகல் பூண் வயது- நோயில்லாவோடு கூடியமைந்த நீண்ட ஆயுள் நலம் (16) என்ற பதினாறு பேறும்- என்று சொல்லப்படுகின்ற இந்தப் பதினாறு பேறுகளையும், தருவாய்- தந்து எனக்கு அருள் செய்வாயாக.

**ஒருத்தி போட்டாளே!**

கும்பகோணத்திலே, ஒரு சமயம் ஒரு பெரிய சோறூட்டு விழா நடந்தது. அந்த சோறூட்டு விழாவிற் காளமேகமும் கலந்து கொண்டார். பந்தி பந்தியாக அமர்ந்து அனைவரும் உணவருந்திக் கொண்டிருந்தனர். அப்போது, ஒரு நிகழ்ச்சி நடந்தது.

தலையின் முன்புறத்திலே குடுமி வைக்கும் வழக்கமுடைய ஒருவன், கவிஞருக்கு அருகிலேயே இருந்து சாப்பிட்டுக்கொண்டிருந்தான். அவனுடைய குடுமி திடுமென அவிழ்ந்து இலையிலும் போய் விழுந்தது. தன் தலைமயிரை எடுத்து அவன் உதறவே, எச்சிற் பருக்கைகள் சில காளமேகத்தின் இலையிலேயும் போய் விழுந்தன. அதனால் அவனை இப்படிப் பாடி நிந்திக்கிறார் கவிஞர்.

சுருக்கவிழ்ந்த முன்குடுமிச் சோழியா சோற்றுப்
பொருக்குலர்ந்த வாயா புலையா - திருக்குடந்தைக்
கோட்டானே நாயே குரங்கே யுனையொருத்தி
போட்டாளே வேலையற்றுப் போய்.

கட்டவிழ்ந்துபோன முன் குடுமியினையுடைய சோழியனே! சோற்றுப்பொருக்கு காய்ந்து அகலாது ஒட்டிக்கொண்டிருக்கும் வாயனே! இழிந்தவனே! திருக்குடந்தை நகரின் கோட்டானே! நாயே! குரங்கே! ஒருத்தி, வேறு வேலையற்றுப்போய் உன்னையும் ஒரு பிள்ளையாகப் பெற்றுப் போட்டாளே! அவளை எப்படி நொந்து கொள்வது?

சுருக்கு- தலைமுடியை அள்ளிச் செருகும் தன்மை, பொருக்கு- காய்ந்துபோன பருக்கைகள், கோட்டான்- ஆந்தை.

இந்தச் செய்யுள் அடியிற் கண்டபடியும் வழங்கும்.

சொருக்கவிழ்ந்த முன்குடுமிச் சோழியா சோற்றுப்
பொருக்குலர்ந்த வாயா புலையா - திருக்குடந்தை
நாயா நரியாவுன் னாய்முகமும் சேய்வடிவும்
தாயார்தான் கண்டிலனோ தான்!

**நீர் மோர்:**

மோர் விற்பவள் ஒருத்தி, நீரிலே சிறிது மோரையும் கலந்து மோரென்று கூறி விற்று வந்தாள். அந்த மோரின் தன்மையைக் கண்ட கவிஞர் பாடியது இது.

**நன்றிகெட்டவன் மனிதன், நன்றியுள்ளது தெய்வம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரென்று பேர்படைத்தாய் ககனத் துறும்போது
நீரென்று பேர் படைத்தாய் நெடுந்தரையில் வந்தற்பின்
வாரொன்று மென்முலையா ராய்ச்சியர்க்கை வந்ததற்பின்
மோரென்று பேர் படைத்தாய் முப்பேரும் பெற்றாயே.

"வானத்தை அடையும்போது நீ "மேகம்" என்று பெயரினைப் பெற்றனை! நெடிதான தரையிடத்தே வந்ததன் பின்னர் "நீர்" என்ற பெயரினையும் பெற்றனை. கச்சுப் பொருந்திய மென்மையான முலைகளையுடைய ஆய்ச்சியர்களின் கையிடத்தே வந்ததன் பின்னால், நீ "மோர்" எனவும் பெயர் பெற்றனை! நீரே, நீ இப்படி மூன்று பெயர்களையும் பெற்றுவிட்டனையே! நின் சிறப்புத்தான் என்னே?

## ஆலவிழுதப்பன் செப்பிய திருவேல் பூவரச அருளே

ஒன்றாய்ப் பலவாயருவுருவாய் உயர்ந்துவந்தவேல்
நின்ற எல்லாவுலகத்திலும் நீக்கமிலா தெவ்வுயிர்க்கும் சான்றாய்
துன்று மேல் சோதியான அழகுவெனச் சொல்லு நாமம் புகன்று
நன்று தாங்கிய நதிமதி நாமெலாமுய்ய நின்ற சங்கரன் சேயே!

பிரணவத்தினின் றுருக்கொட பிரபஞ்சந் தனதாக்கியமைந்த
சரவணபவ பங்கயந்தொழ பன்னிருகரத்து ஆறுமுகத்தையனே!
அரணருள் செப்பிய மட்டேற்று நான்முகன் மறந்தருள்நிற்க அதன்முன்
முரணருள் முத்தொழிலின் படைப்பினை முழுமையோடிசைத்த வேல்!

கலதியாய் தம்முள் கையேந்திடுங் காழகமனத்தவர் தம்முள்ளென்றும் தீது
குலத்தொடுங் கடிந்து கெடுத்து அடியவர்க்கருள் செயக்குறித்தே ஆடும் பூவரசருளே!
உலகுமீது பல்வேறு அவதாரங் கொண்டுற்றப்பன் தொல்புகழ் சூழ்வதும் ஆற்றினிலே
புலவு பல்லுருவேலவன் நம்மையும் தழைக்கும் மாவுயர் மான்மிகங் காட்டினர்!

ஆதலாவவனைச் சேவிக்க மேலாக மேன்மை கொண்டுற்ற கந்தசஷ்டி கார்த்திகைகானும்
பாதநாடிய வெள்ளிஞான விரதங்கள் போகமறுத்து யோகத்தை மேலெனப்படுத்தும் நிஷ்டை
ஓதலாகு மவ் சரவணபவமே யன்றியும் ஒன்றுதான் சர்வ சற்குரு சங்காரவேலே!
ஏதம் நீத்திடும் அல்லல் திரமிரந்து தீரச்செய்யும் சமரவேல் சந்நிதியானே!

எந்தநன்மையும் எமக்கில்லை பிணக்கும் தீரச் செயலில்லை யென்போர் முன்வந்தப்பன்
மந்தகமாக நம்பனே காக்கரயருள் ஐந்தெழுத்து மந்திரமாக சிந்தையிலூற்றவேல்!
செந்திலங் கொண்டுற்று தந்திரமாக விழுதாடியருளூற்று குழகனாகத் தோன்றும் குமரனே!
சுந்தரந் திகழ் ஞானச் செஞ்சுடர்ச் சோதி பூக்கும் சந்நிதியான் அடியவர் ஆச்சிரமத் திருக்கரமே!

-திரு. க. தெய்வேந்திரம்-

இறை நம்பிக்கைதான் ஆன்மீக வாழ்க்கையின் சாரம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





நீதிக்கதை

## இனி விளையாடலாம்

ஜாக்கி, குக்கி என்ற இரு குதிரைகள் விளையாடிக்கொண்டிருந்தன. அவை இரண்டும் அண்ணன் தம்பிகள். எப்போதும் ஜாலியாக விளையாடுவதுதான் அவைகளின் பொழுதுபோக்கு.

கரோ எனும் கழுதை, இரண்டு குதிரைகளும் விளையாடுவதைப் பார்த்தது. அதற்கு அவைகளுடன் சேர்ந்து விளையாட வேண்டும் போலத் தோன்றியது. கரோ நேரே ஜாக்கி, குக்கியை நோக்கிச் சென்றது.



கரோவை ஜாக்கியும், குக்கியும் வரவேற்றன. “வா கரோ, என்ன எங்களைத் தேடி வந்திருக்கே ஏதாவது விஷேசமோ?”

ஒண்ணுமில்லே. நீங்க ரெண்டுபேரும் ஜாலியா விளையாடுறதைப் பார்த்ததும் எனக்கு உங்ககூட சேர்ந்து விளையாடனும் போல ஆசையா இருக்கு. என்னையும் உங்க கூட விளையாட்டுல சேர்த்துக்குவீங்களா?”

“ஓ, அதுக்கென்ன... தாராளமா உன்னையும் விளையாட்டுலே சேர்த்துக்குவோம்.” ஜாக்கி இப்படிச் சொன்னதும் கரோ மகிழ்ச்சி அடைந்தது.

“நீ எங்ககூட விளையாடினா எங்களுக்கும் ஜாலியாத்தான் இருக்கும்” குக்கி தன் பங்கிற்கு கரோவை உற்சாகப்படுத்தியது. ஜாக்கி, குக்கி, கரோ மூன்றும் ஒன்றாய்ச் சேர்ந்து ஓடிப்பிடித்து விளையாட ஆரம்பித்தன. மாலை

**தந்தையையும் தாயையும் பிரியத்துடன் காப்பாற்று.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரம் வந்ததும் மூன்றும் தத்தம் இருப்பிடம் சென்றன. இப்படியே தினமும் மூவரும் ஒன்றாய் ஓர் இடத்தில் கூடி சந்தோஷமாய் விளையாடி பொழுதைக் கழித்து வந்தனர்.


ஒருநாள் வழக்கம்போல் மூவரும் விளையாடிக் கொண்டிருந்தார்கள். அன்று மூவருமே மகிழ்ச்சியாய் இருந்தார்கள். எனவே நேரம் போனது தெரியாமல் விளையாடிக் கொண்டிருந்தார்கள்.

இருட்டு வரத் தொடங்கியது. ஜாக்கி, குக்கி இருவரின் அம்மா தன் பிள்ளைகள் வீடு திரும்பவில்லை என கவலைப்படத் தொடங்கியது. சிறிது நேரம் கழித்து அவைகளை தேடிக்கொண்டு புறப்பட்டது.

கடைசியில் ஜாக்கியும், குக்கியும் விளையாடிக் கொண்டிருப்பதைப் பார்த்து சந்தோஷப்பட்டது. அவைகளின் அருகில் சென்ற பின்னர்தான் அது கரோவைக் கவனித்தது. கரோ ஒரு கழுதை என்பது அதற்கு அப்போதுதான் புரிந்தது.

"ஜாக்கி, குக்கி" என இருவரையும் கோபத்துடன் கூப்பிட்டது. அவை இரண்டும் தாயை நோக்கி ஓடி அதன் அருகில் நின்றன. "நீங்க ரெண்டுபேரும் ஏன் கரோகூட விளையாடுறீங்க?"

"ஏம்மா. அதுகூட விளையாடினா என்னம்மா. அது எங்ககிட்டே ரொம்ப அன்பா இருக்கும்மா." அது எவ்வளவு அழுக்கா அசிங்கமா இருக்கு பாரு. இனி நீங்க ரெண்டு பேரும் அதுகூட விளையாடக் கூடாது."



இதைக்கேட்ட ஜாக்கிக்கும் குக்கிக்கும் அழுகையே வந்துவிட்டது. ஆனால், என்ன செய்வது? பாவம் அவைகளால் அம்மாவின் பேச்சை மீற முடியாது.

தன் நண்பர்களின் அம்மா தன்னுடன் அவர்கள் இனி விளையாடக் கூடாது என்று சொல்லிவிட்டாளே என கரோவிற்கும் மிகவும் கஷ்டமாகப் போய் விட்டது. கரோ வருத்தத்துடன் தன் இருப்பிடம் சென்றது.

அடுத்த நாளிலிருந்து ஜாக்கியும் குக்கியும் வழக்கம்போல தனியே விளையாடச் சென்றன. அன்று காட்டின் ஒரு புதிய பகுதிக்கு இரண்டும் சென்றன. அங்கே சற்று தூரத்தில் வனா, தனா எனும் இரு வரிக்குதிரைகள் விளையாடிக் கொண்டிருந்தன. அவைகளைப் பார்த்த ஜாக்கிக்கும் குக்கிக்கும் அவைகளுடன் சென்று விளையாட வேண்டும் என்று தோன்றியது. இரண்டும் புறப்பட்டு வனாவையும் தனாவையும் நெருங்கின.

**புலனடக்கம் கொண்ட மனிதனைத் தெய்வமாகப் போற்றலாம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்பேரு 'ஜாக்கி', இவன்பேரு 'குக்கி'. நீங்க ரெண்டுபேரும் எங்ககூட விளையாட வாறீங்களா?" "ஓ அதுக்கென்ன... வாங்க நாம ஒண்ணா சேர்ந்து விளையாடலாம்." நால்வரும் ஒன்றாய்ச் சேர்ந்து விளையாட ஆரம்பித்தார்கள்.

கரோ இல்லாத வருத்தம் வனா மற்றும் தனாவால் அவைகளுக்கு நீங்கியது. அவைகள் அனைத்தும் ஒன்றாய் சேர்ந்து விளையாட ஆரம்பித்தன. அப்போது ஜாக்கி மற்றும் குக்கியின் தாய் அங்கே வந்தது. தன் பிள்ளைகள் வரிக்குதிரைகளுடன் சேர்ந்து விளையாடுவதைப் பார்த்து மகிழ்ச்சி அடைந்தது.

புல்மேய்ந்து விட்டுத் திரும்பிய வனா மற்றும் தனாவின் தாய் வரிக்குதிரை, தனது பிள்ளைகள் குதிரைகளான ஜாக்கி மற்றும் குக்கியுடன் விளையாடுவதைப் பார்த்துவிட்டு கோபத்துடன் வந்தது.

"நீங்க ரெண்டுபேரும் தனியே விளையாடறதுதானே? ஏன் இதுங்க கூடவெல்லாம் சேர்ந்து விளையாடுறீங்க?"

"ஏம்மா, இவங்க கூட நாங்க சேரக்கூடாதா?" "நாம எவ்வளவு அழகா இருக்கோம். இவங்களைப்பாரு எவ்வளவு அசிங்கமா இருக்காங்க. இனி இவங்ககூட சேர வேணாம்." வனாவையும் தனாவையும் தாய் வரிக்குதிரை தன்னுடன் அழைத்துச் சென்று விட்டது.

இதைக்கேட்ட தாய்க் குதிரை, ஜாக்கி மற்றும் குக்கி ஆகிய மூவருக்கும் வருத்தமாய் போய்விட்டது. சில நாட்களுக்கு முன் கழுதை கரோவை தான் அவமானப்படுத்தி அனுப்பியது தாய் குதிரைக்கு ஞாபகத்திற்கு வந்தது. உடனே அது சட்டென ஒரு முடிவு எடுத்தது.

"ஜாக்கி, குக்கி... நீங்க ரெண்டு பேரும் நாளையிலேயிருந்து கரோகூட விளையாடலாம். சரியா... மகிழ்ச்சி தானே?" "ரொம்ப ரொம்ப மகிழ்ச்சியம்மா." ஜாக்கியும் குக்கியும் மகிழ்ச்சியில் குதிக்க ஆரம்பித்தன.

# ஞானச்சுடர் தை மலரில்...

**புதிய அம்சங்கள்..... புதிய தலைப்புக்கள்.....**

**1. பண்டிதர் சு. அருளம்பலவனார் அவர்களின் உரையுடன் திருவாசகம் - போற்றித் திருவகவல்**

**2. உமாபதி சிவனார் அருளிய திருவருட்பயன் (தெளிவுரையுடன்)**

**இன்னும் பல புதிய அம்சங்களுடன்**
**ஞானச்சுடர் 2014 - தைமலர் வெளியாகும்.**

சந்தோஷத்தின் விரோதி சந்தேகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவத் திருக்கோயிற் கிரியைநெறி

(தொடர்ச்சி...

– உயர்திரு கா. கைலாசநாதக் குருக்கள் அவர்கள் –

## கிரியைகளின் பொது அம்சங்கள்

கிரியைகள் நித்தியமானவையாயினும், நைமித்தியமானவையாயினும், காமிய மானவையாயினும் சில அம்சங்களைப் பொதுவாகக் கொண்டுள்ளன. இவை பலமுறை அங்கங்கே குறிப்பிடப்படுவதனால் ஒவ்வொரு முறையும் அவற்றின் விளக்கம் தராது அவற்றைத் தனியே எடுத்துத் தொகுத்து இங்கே விளக்குவது முற்றிலும் பொருத்தம் எனக் கொண்டே இவ்வம்சங்கள் இங்கு விளக்கம் பெறுகின்றன. பொதுவான இவ்வம்சங்கள் ஒன்பதாகும். இவை பூதசுத்தி, அந்தர்யஜனம், ஆவராணாந்தமான பூசை, அபிஷேகம், அலங்காரம், நைவேத்தியம், தீபாராதனை, அருச்சனை, தோத்திரங்கூறி வாழ்த்துதல், கீதவாத்தியத்துடன் நிகழும் நிருத்தியம் என்பன. இவற்றுள் பூதசுத்தி பூர்வாங்கக் கிரியைகள் என்னுந் தலைப்பின் கீழும், அந்தர்யஜனம் எட்டாம் அத்தியாயத்திலும், ஆவரண பூசை ஈறாக உள்ள கிரியைகள் இவ்வத்தியாயத்தில் யாகபூசை நிகழும் இடத்திலும் விளக்கமாகக் கூறப்படுவதால் அவற்றின் விளக்கம் இங்கு இடம்பெறவில்லை. ஏனைய அம்சங்களை ஒவ்வொன்றாகக் கவனிப்போம்.

### அபிஷேகம்

அபிஷேகத்திற்கென இரு நாழிகைகள் ஒவ்வொரு பூசையிலும் ஒதுக்கப்படல் வேண்டுமென ஆகம விதி கூறுகின்றது. அபிஷேகத்திற்கு இன்றியமையாதது பரிசுத்தமான தீர்த்தம். பெரும் வசதியமைந்த கோவில்களில் அருச்சகர், பரிசாரகர் முதலியோர் ஆற்றையடைந்து, அபிஷேகத்தின் பொருட்டு நீர்மொண்டு, குடத்தை நிரப்பி, அதனை யானை மீதேற்றிக் கொடி குடை முதலிய விருதுகளுடன் தினந்தோறும் கோவிலுக்குக் கொண்டு வருவர். இவ்வாறு நதி தீர்த்தம் கிடைக்காதவிடத்து கிடைக்கக்கூடிய வேறு நீர் நிலையங்களிலிருந்து சேகரிக்கப்படும் நீரினை மந்திரரூபமாகப் புனிதமாக்கிப் பூசைக்குப் பயன்படுத்தும் மரபு உண்டு. சப்த நதிகளையும், எல்லாச் சமுத்திரங்களையும், தீர்த்தங்களையும் சிவபூசை நிகழ்த்தும் வேளை பயன்படுத்துவதற்காகப் பூசை நிகழுமிடத்திற் சேகரிக்கப்பட்டுள்ள நீரில் சாந்நித்தியம் கொள்ளும்படி வேண்டுகோள் வடிவாக மேற்கூறிய மந்திரம் அமையும். இவ்வாறு தூய்மைபெற்ற நீர் அபிஷேகத்திற்கும் பூசைக்கும் பயன்படும். பாடலம், உற்பவம், தாமரை, அலரி முதலிய மலர்களை அபிஷேக நீரில் இடுதல் வேண்டும். இவை, நீருக்குக் குளிர்ச்சியையும் நறுமணத்தையும் ஊட்டும்.

அபிஷேகத்திற்கு உரிய திரவியங்கள் எண்ணெய், அரிசிமா, மஞ்சள்மா, பஞ்சகவ்யம், பஞ்சாமிருதம், பால், தயிர், நெய், தேன், கருப்பஞ்சாறு, பழவகைகளின் சாறு, இளநீர், அன்னம், வெந்நீர், வீபூதி, குங்குமம், சந்தனம், பன்னீர், கும்பஜலம், கங்கை முதலிய புண்ணிய நதி தீர்த்தம் என்பன இவற்றின் அளவு ஆகமங்களிற் கூறப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்சகவ்யம், பஞ்சாமிருதம் இரண்டினையும் சேகரித்துப் பூசிக்கும் முறை இவ்வத்தியாயத்தில் வேறு இடத்தில் விளக்கப்பெற்றுள்ளது.

அபிஷேகம் தொடங்கும் பொழுதும், அதன் முடிவிலும், நைவேத்தியங் கொடுக்கத் தொடங்கும் வேளையிலும், நைவேத்தியத்திற்குப் பின்னரும், தூபதீபம் காட்டும் வேளையிலும் பாத்தியமும் ஆசமநீயமும் கொடுத்தல் வேண்டும். பூசையின் தொடக்கம், அபிஷேகத்தின் முடிவு ஆகிய இம்மூன்று காலங்களிலும் அர்க்கியம் கொடுத்தல் வேண்டும். பாத்தியம் காலிலும், ஆசமநீயம் வாயிலும், அர்க்கியம் தலையிலும் கொடுக்கப்படுவன. இலாமிச்சை வேர், சந்தனம், அறுகு, வெண்கடுகு என்பன பாத்தியத் திரவியங்கள்; ஏலம், கிராம்பு, பச்சைக் கற்பூரம், ஜாதிக்காய் என்பன ஆசம நீயத் திரவியங்கள்; எள், நெல், தர்ப்பை நுனி, நீர், பால், அஷதை, வெண்கடுகு, யவநெல் என்னும் எட்டும் அர்க்கியத் திரவியங்கள்.

அபிஷேகம் நடக்கும்போது வேதகோஷஞ் செய்தல் வேண்டும். **சதருத்திரியம், சமகம், புருஷசூக்தம், ருத்ரசூக்தம்** முதலிய சூக்தங்களும், **பஞ்சசாந்தி, கோஷசாந்தி** இவ்வேத கோஷத்தில் இடம்பெறற்குரியன.

அபிஷேகம் தொடங்கும் வேளை முதல் உத்வர்த்தனம் ஈரந்துவட்டும் கிரியை நிகழும்வரை இடையீடு சிறிதுமின்றி அபிஷேகத்தைத் தொடர்ச்சியாகச் செய்தல் மிகவும் அவசியம்.

முதலில் தைலம் அபிஷேகஞ் செய்யுமுன் வாசனையூட்டப்பட்ட எண்ணெயை இரு கைகளாலும் அள்ளி எடுத்து இறைவனின் உருவம் முழுவதும் நன்கு சுவறும் வண்ணம் பூசி, இரு கண்கள், கை நகங்கள், கால் நகங்கள், காதுத் துவாரங்கள் ஆகிய இடங்களில் எண்ணை நன்கு புகும்படி "சாத்தி", இறைவனின் கை கால்களை மெல்லென வருடிப் பின்னர் சந்தனாதி எண்ணெயினால் திருவுறுப்புக்கள் அனைத்துந் தோயும் வண்ணம் அபிஷேகஞ் செய்வதும், இவ்வாறு எண்ணை "சாத்து"ம் வேளை இறைவனுக்குச் சிரமந் தோன்றாதிருக்க வேண்டி இரு மருங்கிலும் பரிசாரகர்களைக் கொண்டு பன்னீர் தெளித்த இலாமிச்சை வெட்டிவேர் முதலியவற்றாலமைந்த விசிறிகளால் வீசுவிப்பதும் இரு மருங்கிலும் சாமரைகளை இரட்டச் செய்தலும் அபிஷேக வேளைகளில் அனுட்டிக்கப்படும் மரபுகளாகும். ஒவ்வொரு திரவியமும் அபிஷேகமானதும், பாத்தியமும் ஆசமநீயமும் கொடுத்துப் புஷ்பத்தால் அருச்சித்துப் பழமும் தாம்பூலமும் நிவேதித்து நீராஜனம் செய்தலும் அபிஷேகத்தின் பொழுது கடைப்பிடிக்கப்படும் ஒழுங்காகும்.

## அலங்காரம்

அபிஷேகம் முடிந்ததும், தோய்த்துலர்ந்த திருவொற்றாடையால் ஈரந்துவட்டி, நறுமணங் கமழும் சந்தனத்தினைத் திருவுருவம் முழுவதும் பூசுதல் வேண்டும். வாசனைப் பொருட்கள் கலந்த சந்தனமே இவ்வாறு பூசுதற்குரியது. அதில் சந்தனம், கோஷ்டம், குங்குமப்பூ, பச்சைக் கற்பூரம் முதலியவற்றைப் பன்னீரிற் தோய்த்தரைத்தெடுத்த சந்தனக்கலவை இறைவனுக்குச் சாத்துதற்கு உரியது. இதன்பின் ஆடையாபரணங்களால் இறைவனை அலங்கரித்தல் வேண்டும். அலங்கரித்தல் தனிக்கலை. இக்கலையில் துறை தோய்ந்தவர் அலங்கரணாசாரியர் எனப்படுவர். இவரது கைவண்ணத்தின் விளைவே இறைவன் அழகு பொலிந்து கவர்ச்சி மிகுந்து தோற்றமளிப்பது. அலங்காரத்திற்கு உரிய

**பிடிவாதமும் கோபமும் உன் இயலாமையின் வெளிப்பாடாகும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள்கள் வஸ்திரம், உத்தரீயம், ஆபரணங்கள், மாலைவகைகள் ஆகியன. அலங்காரத்தைப் பற்றித் தனி நூலெழுதின் அலங்காரப் பொருள் ஒவ்வொன்றின் விபரங்களும் ஒவ்வொரு அத்தியாயமாக விரியும் இயல்பு வாய்ந்தவை.

பட்டு வஸ்திரங்கள், பல நிறம் வாய்ந்த பல்வகை ஆடைகள் ஆகியன அலங்காரத்திற்கு உரியன. பகல் வேளையில் இறைவனுக்கு அணிவித்தற்குரியது வெண்பட்டு. மாலைப் பொழுதில் அணிவித்தற்கு ஏற்றது மஞ்சள் பட்டு. அர்த்தயாமத்திற் குகந்தது கரியநிறம் வாய்ந்த ஆடை என நூல்கள் பகருகின்றன. பூணூலும் இறைவனுக்கு அணிவித்தற்கு உரியதாகும்.

ஆபரணங்கள், பொன்னாலும் நவரத்தினங்களாலும் அமைக்கப்பட்டவை. இன்ன கிழமையில் இன்ன நவரத்தினம் பதித்த ஆபரணங்கள் அணிவித்தற்குரியவை என்னும் விபரங்கூறும் விதிகளும் ஆகமங்களில் இடம்பெற்றுள்ளன. சிவலிங்கத்தை அலங்கரிப்பதற்கு வெள்ளி முதலிய உலோகங்களால் அமைந்த நாகாபரணம் மிக விஷேசமாக உரியது.

இறைவனுக்கு அணிவிக்கப்படும் மாலைகள் பலவகைப்பட்டன. இவற்றைக் கட்டுவது தனிக் கலையாகும். ஆரமாகவும், சரமாகவும், இண்டை மாலையாகவும், தொங்கு மாலையாகவும் தனித்தனி நிறங்களிலும், ஒன்றோடொன்று விரவிக் கலந்துவரும் பல நிறங்கள் அமைந்தனவாயும், அரும்புகளினாலும், அலர்ந்த மலர்களினாலும் வாழைநார் கொண்டு சுறுசுறுப்பாய் அசையும் விரல்களால் மாலைகளைக் கட்டுவோர் மலர்மேல் மலரை நிரைநிரையாக வைத்துக் கட்டும் அழகே தனியழகு. “சரிகை” முதலிய அலங்காரங்களால் மாலையைக் கவர்ச்சிமிக்க அழகுடன் அமைக்கும் மரபும் உண்டு. உரிய புஷ்பங்களைக் கொண்டே மாலைகள் அமைக்கத்தக்கன.

## நைவேத்தியம்

நைவேத்தியத்தின் பொருட்டு அன்னம் சமைக்கும் இடம் பாகசாலை. இதற்கு நியமிக்கப்படுபவர்கள் பாசகர்கள் எனப்படும் பரிசாரகர்களாகும். இவர்கள் சிவதீஷை பெற்றவர்களாயிருத்தல் வேண்டும். தினந்தோறும் நீராடித் தோய்த்துலர்ந்த ஆடை தரித்து, நித்திய கடன்களை முடித்து, தர்ப்பை தரித்தவர்களாக “மடைப்பள்ளி”யிற் புகுந்து நிவேதனப் பொருட்களை விதிப்படி பக்குவஞ் செய்தல் இவர்களது கடமை. அரிசியை நீரிற் கழுவிச் சுத்தஞ் செய்தல், வடிகட்டிச் சுத்தமாக்கிய நீரைக் கலையத்திற் பெய்து அடுப்பேற்றல், அரிசியைப் பாகம் செய்தல் முதலிய விஷயங்களைக் காமிகம் விரித்துக் கூறுகிறது. அரிசியின் மட்டத்திற்கு அரைப்பங்கு அதிகமாகப் பாத்திரத்தில் நீர்விட்டு சாணி முதலியவற்றால் மெழுகப்பட்ட அடித்தளத்தை உடையதும், தர்மம், அதர்மம் எனப்படும் இரு புயங்களையுடையதுமான அடுப்பின் மீது வாமதேவ மந்திரத்தினால் அதனை ஏற்றுதல் வேண்டும் எனக் காமிகாகமம் கூறுகிறது. பின்னர் அகோர மந்திரத்தினால் அடுப்பு மூட்டி, எறும்பு முதலியவற்றால் தாக்கப்படாத விறகை மாட்டி வக்திர மந்திரத்தினால் எரியச் செய்தல் வேண்டும்.

நெல்லிற் பலவகைகள் இருப்பதனையும், அதனை உரலில் இட்டு உமி நீக்கித் துப்பரவு செய்தலையும், நெல்லின் அளவையும் உத்தம மத்திம அதமமான நைவேத்தியப் பிரமாணங்களையும் ஆகமங் கூறுகிறது. கிரியைகளை ஒட்டியே அவற்றிற்குரிய

**மரியாதை பெறும் ஒரே வழி அதனை முதலிற் கொடுப்பதாகும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நைவேத்தியம் , நித்திய நைவேத்தியம், நைமித்திக நைவேத்தியம், காமிய நைவேத்தியம் என மூவகைப்பட்டு அமையும்.

சுத்தோதனம் என்பது நன்கு சமைக்கப்பட்ட வெறும் அன்னமாகும். அரிசியைக் காட்டிலும் மூன்று மடங்கு பாலும், பாலில் பாதியளவு நீரும், நீரிற் பாதியளவு பயற்றம் பருப்பும், நெய்யுங் கலந்து பக்குவமாகச் சமைத்தால் அது பாயசான்னமாகும். அரிசியின் பாதி பருப்பும், உரிய உப்பும், மிளகு பொடியும், எள்ளுப் பொடியும் கலந்த அன்னம் எள்ளன்னமாகும். அரிசியில் மூன்றிலொரு பங்கு பருப்பும், முன்கூறிய அளவு பாலும் கலந்து சமைப்பது பயற்றன்னம். பாலில் பாதியளவு வெல்லமும், அதில் பாதியளவு நெய்யும் வாழைப்பழமும் கலந்தமைவது சர்க்கரையன்னம். இவ்வாறு அன்னங்களை ஐவகைப்படுத்தி பஞ்சஹவிஸ் என ஆகமங்கள் தொகுத்துக் கூறுவன. நிவேதனத்திற்குரிய சிற்றுண்டிகள் (உபதம்சங்கள்) பாகமாக்கப்படும் வகையும் ஆகமங்களில் விரிவாக கூறப்பட்டுள்ளது. பலவகைக் கலைகளுடன் சமையற்கலையும் மிளிர்வதற்குக் கோவில் இடந்தருவது கூர்ந்து நோக்கற்பாலது.

நைவேத்தியத்தை மூன்று பங்காக்கி இரண்டு பங்கை நிவேதித்தல் வேண்டும். பாத்திரத்தில் ஒரு பங்கு மிச்சமாக இருக்கும். உபதம்சம், நெய், கறி, தயிர், தாம்பூலம், அப்பம் முதலியன நிவேதனப் பொருள்களாகக் கூறப்பட்டுள்ளன. நிவேதிப்பதற்கென வகுக்கப்பட்ட அன்னம் முதலியவற்றை மேலும் எட்டுப் பங்காகப் பிரித்து இரு பங்குகள் சிவனுக்கும், ஒன்று சக்திக்கும், ஒன்று கணேசனுக்கும், இன்னொன்று கந்தனுக்கும், ஒன்று பலியிடுவதற்கும் அக்னி கார்யத்திற்கும், ஒரு பங்கு தேசிகனுக்கும், ஒரு பங்கு பாத்திரசேஷமாக இருப்பதற்கும் உரியன என ஆகமத்தில் கூறப்பட்டுள்ளது. பாத்திர சேஷமாக இருப்பது பரிசாரகர் முதலியோர்க்கு உரியதாகும்.

நீர் நிரம்பிய தேங்காயை "குடுமி"யுடன் சமமான இரு பகுதிகளாக உடைத்துப் பின்னர் "குடுமி"யைக் களைந்து நிவேதனம் செய்தல் வேண்டும். மாதுளை முதலிய பழங்களும், தானே பழுத்த வாழைப்பழம், மாம்பழம் என்னும் முக்கனிகளும் நிவேதனத் திற்குகந்தவையாகும். (தொடரும்...

## கட்டுரையாளர் கவனத்திற்கு.....

தயவு செய்து;

1. தங்களது ஆக்கங்களை தெளிவான கையெழுத்திலோ அல்லது கணனியிற் தட்டச்சு செய்தோ அனுப்பவும்.
2. தாளில் ஒரு பக்கத்தில் மட்டுமே எழுதவும். அல்லது தட்டச்சு செய்யவும்.
3. தங்கள் ஆக்கங்களுடன் தொலைபேசி இலக்கம், விலாசம் ஆகியவற்றைத் தவறாது குறிப்பிடவும்.

-பேரவையினர்-

ஆயிரம் முறை சிந்தியுங்கள் ஒருமுறை மட்டும் முடிவெடுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆன்மீகம் மிளிரும் ஆன்மீகக் கதைகள்

-மாதாஜி அவர்கள்-

தோற்றுவாய்:

ஆன்மீகம் என்ற சொற்றொடருக்கு வியாக்கியானம் செய்வோர் பலர். அதனை எப்படி உண்டாக்குவது எப்படி அடைவது என்ற ஏக்கமும் உண்டு. ஆன்மீகம் பற்றி வியாக்கியானம் செய்தால் மட்டும் போதாது. மன ஒருமைப்பாட்டுடன் நாமஜெபம், ஆலய வழிபாடு, தீர்த்த தலயாத்திரை, திருமுறை முதலாகப் புராணங்கள், பக்தி நூல்கள் வாசிப்பதுடன் சாதகம் செய்தல் எனப் பல நிகழ்வுகள் உண்டு.

ஆன்மீக வாழ்வு சின்னாபின்னமில்லாமலும் சஞ்சலம், குதூகலம், உயர்வு தாழ்வு, சுகதுக்கம் இன்றியும் ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்று ஆணவம் கன்மம் மாயை என்பவற்றில் ஈடுபடாமல் இறைசிந்தனையுடன் இணைந்திருத்தலாகும். இது யாருக்கும் எளிதாக இருத்தல் முடியாது. அபூர்வமாக அவனருளாலே அவன் தாள் வணங்கி என்றாங்கு, தவமும் தவமுடையார்க்கே என்றாங்கு அனுபவத்தில் கைக்கொண்டு வழிநடத்தலாகும். "ஒருமைக்கண்தான் கற்க கல்வி எழுமைக்கும் ஏமாப்புடைத்து என்றாங்கு பிறவிதோறும் அனுட்டித்த ஆன்மீக பண்புகளுக்குப் பின்பே முழுமையான ஆன்மீகமும் முத்திபேறும் உண்டு.

ஆன்மீக வாழ்விற்கு அசைக்க முடியாத அத்திவாரம் என்றால் மிகையாகாதது மந்திரங்களுக்குள் மூல மந்திரமான பஞ்சாட்சரம் என்று கூறப்படும் திருவைந்தெழுத்தாகிய ஓம் நமசிவாயநம ஓம்சிவாயநம என்பதாகும். இம் மந்திரத்தின் மகத்துவங்களை பேச்சினால், சொல்லால் விளக்க முடியாது. அனுபவமும் சாதனையும் இம் மந்திரப் பெருமைகளை அனுபவிக்கச் செய்கின்றது.

இதன் அற்புதச் செயற்பாடுகளை, புராணங்கள் திருமுறைகள் போன்றவைகள் எடுத்துக்காட்டுகள்மூலம் வலியுறுத்துகின்றன.

மனிதனின் உயிர் வாழ்விற்கு தலையின் மூளையும் உடம்பின் இருதயமும் மிகமிக முக்கியமான உறுப்புக்களாகும். இவை இரண்டு உறுப்புகளில் மூளையில் பிணி பிடித்துவிட்டால் மூளைக்கோளாறுகளுடன் பைத்தியக்காரன்போல் சிலநாள் அல்லது பலநாள் உயிருடன் வாழலாம். ஆனால் இருதயத்தில் கோளாறு ஏற்பட்டு ஒருதுளி நேரம் சென்றால், இருதயத்துடிப்பு நின்றுவிட்டால், அக்கணமே உயிர் உடம்பை விட்டுப் பிரிந்துவிடும்.

வேதம் நான்கினும் மெய்ப்பொருளாவது
நாதன் நாமம் நமச்சி வாயவே
-திருஞானசம்பந்தர்.

முன்னொரு காலத்தில், தேகவலிமை, ஆரோக்கியம் தவவலிமையுள்ள ஒரு அரசன் தனக்கு ஒப்பாரும் இன்றி நாட்டை ஆண்டு வந்தான். அவன் பெயர் தசாருகன். கண்ணை இமை காப்பதுபோல மனுநீதியுடன் தசாருகன் அரசாட்சி செய்தமையால்,

**நீ உன் உரிமையை இழப்பின் உன் உணர்வையும் இழப்பாய்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலந்தவறாது மழை பெய்வதோடு நில்லாது வேதம் ஓதும் வேதியர்க்கும், கற்பு நெறி தவறாத பெண்களுக்கோர் மழை செங்கோலோச்சும் மன்னனுக்கோர் மழையென வருணபகவான் தன் கடமைகளைச் செவ்வனே செய்தமையால் மக்களும் எவ்வித குறைபாடின்றி இன்பமே சூழ எல்லோரும் வாழ்கவென வாழ்ந்து வந்தனர்.

இளவரசன் சைவாகம விதிப்படி அழகிய இராணியைத் திருமணம் செய்தான். இளவரசியிடஞ் சிவப்பண்புகள் மிகுந்து காணப்பட்டது. அவள் இமைப்பொழுதும் மறவாது திருவைந்தெழுத்தை உச்சாடணம் செய்வது சிவசின்னங்களையும் சிவநாமங்கள் முதலியனவற்றை உயிருக்குயிராகப் பேணிப் பாதுகாத்து வந்தாள்.

ஸ்ரீ பஞ்சாட்சரமென்னும் மூலமந்திரமாகிய "ஓம் சிவாயநம" என்ற மந்திரத்தை மிகவும் சிறுவயதில் முனிவர்மூலம் பெற்றமையால், அவள் நின்றும், இருந்தும், நடந்தும், கிடந்தும் இடைவிடாது ஜெபித்து வந்தமையால், அவளுடைய இருதயக் கமலத்தில் சிவமணம் கமழ்ந்து கொண்டே இருந்தது. நாள்தோறும் இவள் சிவனை மறவாத சிந்தனையுடன் நாமஜெபமும் தியானமும் செய்தமையால் அரசி, அரசனை விடத் தவநெறியில் மிகுந்து காணப்பட்டாள்.

ஒருநாள் இளவரசன் இளவரசியைத் தீண்டிக் கலந்து இன்பம் அனுபவிக்க விரும்பி அவளைத் தழுவ முயன்றான். அப்போது அரசி தூர விலகி, "அரசனே மனது வேறுபாடாகி உள்ள பெண்களையும், நோயாற் பீடிக்கப்பட்ட பெண்களையும், காப்பமுற்ற பெண்களையும், விரதமிருக்கும் பெண்களையும் தீண்டுறலாகாது. நான் எம்பெருமானுடைய ஸ்ரீ பஞ்சாட்சர மந்திரத்தியானத்தோடு எம்பெருமானின் செந்தாமரையனைய திருக்கமல பாதங்களை, எனது இருதய கமலங்களில் வைத்து, இமைப்பொழுது மறவாது பூசிக்கின்றேன். அதனால் தாங்கள் வேறு அழகிய பெண்ணைத் திருமணம் செய்து தங்கள் வேட்கையைத் தீர்த்துக் கொள்ளுங்கள்" எனக் கூறினாள் அரசி.

ஆனால் அரசன் இளவரசியின் வேண்டுதல்களை நிராகரித்தான். நான் அக்கினி சாட்சியாய் முறைப்படி உன்னை மணந்தவன் என்று அவளைத் தழுவுவதற்காகத் தீண்டினான். என்ன ஆச்சரியம்! அற்புதம்! இளவரசியில் இருந்து எழுந்த சிவக்கனலால் அரசன் அணிந்திருந்த அன்றலர்ந்த மலர்மாலை கருகியது. அணிந்த சந்தனம் சாம்பலாகியது. ஆபரணங்களும் கருகிவிட்டன. அரசன் பயந்து தூர விலகினான். துடிதுடித்தான். ஆகமவிதிமுறையாக உன்னை மணந்தேன். இவ்வாறெல்லாம் நடப்பதற்குக் காரணம் யாதென மனைவியை வினாவினான்.

இளவரசி அரசனை நோக்கி, "அரசே பிறவிப் பிணியைத் தருகின்ற ஆணவமல இருளானது கெட்டு மெய்ஞ்ஞானவொளியையும் ஆன்மீக வாழ்வையும், இறையருளையும் பெருக்குகின்ற ஸ்ரீ பஞ்சாட்சரம் என்று சொல்லப்படுகின்ற ஓம் சிவாய நம மந்திரத்தை துருவாச முனிவர் எனக்கு உபதேசித்தார். அதனை அடியேன் இடைவிடாது செபித்தும் தியானித்து வந்தமையால், அடியேனது மனம், வாக்கு ஆகியவை பரிபூரண சக்தியைப் பெற்றமையால் எமது உடல் புனிதம் அடைந்து சிவக்கனலாகி விட்டது. அதனால் பாவம் செய்த உடலைப் புண்ணியமான உடல் சேர மறுத்துவிட்டது.

**நாக்கு கத்தியைக் காட்டிலும் ஆழமாகப் பாயும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


பின்னர் அரசனும் அரசியும் யமுனைக் கரைக்குச் சென்று அங்கு தவம் செய்து கொண்டிருந்த கர்க்கி முனிவரின் திருவடிகளை வணங்கினார்கள். அரசன், முனிவரின் பாதார விந்தங்களை இறுகப் பற்றிச், "சுவாமி! உலகப் பகைமை முதலாகப் பிறவிப் பிணிகளை நீக்கவல்ல சிவமூலமந்திரமாகிய ஸ்ரீ பஞ்சாட்சர மந்திரத்தை உபதேசம் செய்ய வேண்டுமென வேண்டினார்.


முனிவர் அரசன்மீது கொண்ட பெருங்கருணையினால், அரசனின் உச்சித்தலையில் தனது கைகளை வைத்து ஆசிகூறினார். பின்னர் உண்மைப் பொருளைத் தருகின்ற சிவமூல மந்திரத்தை உபதேசம் செய்தார். அந்தளவில் அரசனின் எண்ணற்ற உரோமங்களில் இருந்தும் காகங்கள் வெளியே வந்து பறந்தன.

அரசன், ஆச்சரியத்துடன் முனிவரை வணங்கினான். அப்போது முனிவர், "அரசே! பிறவிப் பிணியைத் தருவது நல்வினை தீவினை என்பன. அவைகளை அனுபவித்தபின் எஞ்சி நிற்பது பிராரர்த்தவினையாகும். சஞ்சித வினையின் தொடர்ச்சி சிவமூல மந்திர மகிமையால் அற்றுவிட்டது. இனிமேல் பாவங்கள் தொடரா. நீயும் உன் துணைவியும் புனிதர்கள் ஆகிவிட்டீர்கள். இனி உங்கள் நாட்டிற்குச் செல்லுங்கள் என்று அருளினார்.

அதன் பின்னர் அவர்கள் திருவைந்தெழுத்தைத் துணையாகக் கொண்டு இனிதே வாழ்ந்தனர்.

# பாராட்டி வாழ்த்துகின்றோம்





**சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினால் வெளியிடப்பட்டுவரும் ஞானச்சுடர் மலருக்குரிய ஆக்கங்களை வழங்கி பேரவையின் வளர்ச்சிக்கு ஊன்றுகோலாக விளங்குபவர்களான இளைப்பாறிய ஆசிரியர் ஐ. சண்முகலிங்கம் அவர்கட்கும் கவிஞர் திரு வ. யோகானந்தசிவம் அவர்கட்கும் கலாபூஷணம் விருது கிடைத்ததையிட்டு பேரவையினராகிய நாம் வாழ்த்துகின்றோம்.**

நியாயம் இருபக்கங்களிலும் இருக்கும். ஆனால் நீதி ஒருபக்கம்தான் உண்டு.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தொடர்ச்சி...

# கண்டோம் கதிர்காமம்

–திரு கவிமணி அன்னைதாசன் அவர்கள்–



ஏறாவூரை அடைந்ததும் அனைவர்க்கும் தாகசாந்திக்காக குளிர்சோடா வழங்கப் பட்டது. தாகசாந்தி செய்த அடியார்கள் சரியாக 10.35 மணிக்கு மைலம்பரவெளியில் உள்ள காமாட்சி அம்பாள் ஆலயத்தை அடைந்தோம். இவ்வாலயம் பிரதான வீதியிலிருந்து ஏறக்குறைய $^1/_2$ கிலோமீற்றர் உள்ளே கடற்கரையை நோக்கிய குறுக்குவீதியில் அமைந்துள்ளது. இவ்வாலயத்திலிருந்து நோக்கினால் ஏறக்குறைய $^1/_2$ கிலோமீற்றர் தொலைவில் கடற்கரை தெரிகிறது. அதன் கரையூடாக புகையிரதப் பாதையும் செல்கிறது. பிரதான நுழைவாயிலின் அருகே ஓர் ஆடம்பர குளிர்பான நிலையமும் அதனூடாக உட்செல்லும்பொழுது மிகவும் நேர்த்தியான ஓர் சிறு கடை அதில் எம்பெருமாட்டிக்கு வேண்டிய சகல அர்ச்சனைப் பொருட்களும் கிடைக்கிறது. அதனைத் தாண்டிச் செல்ல ஓர் அழகிய பூங்கா அனைவரையும் கவர்ந்தது. மிகவும் குழுகுழு பூங்கா மணற்பாங்கான தரையமைப்பைக் கொண்டிருந்தபொழுதிலும் செவ்விளநீர்க் குலைகளைச் சுமந்தபடி சிறு தென்னம்பிள்ளைகள் சோலையாக்க படர்கொடிகள் சிறு செடிகள், செவ்வரத்தை வகைகள், எக்சோரா வகைகள், நந்தியாவர்த்தம், நித்தியகல்யாணி, செவ்வந்தி வகைகள், அல்லி, சம்பங்கி அனைத்தும் பூத்துக் குலுங்கும் ஓர் அழகிய பூங்கா. இப்பூங்காவினூடாகச் சென்றால் ஓர் விடுதியும் காணப்படுகிறது.

நாம் இவற்றில் அதிக நேரத்தைச் செலவழிக்காது ஆலயத்திற்குச் செல்ல ஓர் அழகிய பெரிய கோபுரத்தைத் தாங்கிய நுழைவாயிலினூடாக அம்பிகை தரிசனம் கிடைக்கிறது. அழகொழுகும் மிகப்பிரமாண்டமான மூலவளாக அன்னை கன்னங்கரேலென அருட்காட்சி தருகிறாள். பரிவார மூர்த்திகளாக விநாயகர், முருகன், நாராயணர் அமர்ந்துள் ளார்கள். பள்ளி கொள்ளும் பரந்தாமனது மிகப்பிரமாண்டமான சிலை எல்லோரையும்

முடியாது என்று சொல்லாதே முடிந்தவரை முயற்சிசெய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலிர்க்க வைக்கிறது. நாராயணனுக்குரிய ஓம் நமோ நாராயண என்ற நாமம் மெல்ல ரீங்காரமிட மிகவும் பக்திப் பரவச சூழலில் அடியார்கள் தரிசனஞ் செய்தனர். நாம் சென்றவேளை ஒரு தம்பதிகள் உபயகாரர்களாக இருந்து பிரமாண்டமான ஓம குண்டத்தில் அந்தணச் சிவாச்சாரியார்கள் வேத மந்திரஞ் சொல்லி ஓமம் வளர்த்தபடி இருந்தார்கள்.

"ஓம் நமோ நாராயணா" என்ற நாம ஒலியும் ஓமத்திரவியங்களின் தூபநெடியும் மிகமிக அற்புதமான பக்திப் பரவசநிலையைத் தரிசிப்பவர்களுக்கு ஏற்படுத்தியிருந்ததை உணரமுடிந்தது. இதன் சிறப்பம்சங்களாக,

இதுவும் ஓர் தனி நபரின் நிர்வாகத்திலுள்ள ஆலயம்.

மிகவும் அண்மைக்காலத்தில் ஸ்தாபிக்கப்பட்டது. (80களிற்குப் பின்).

மிகப் புனிதமாகப் பணியாற்றும் அரச நிறுவனங்களைப் போன்ற சீருடை அணிந்த தொண்டர்கள்.

தரை முழுவதும் வெண் பளிங்குத் தளம்.

இந்தியாவிலிருந்து வரவழைக்கப்பட்ட அந்தணச் சிவாச்சாரியார்கள்.

ஏறக்குறைய 75 ஏக்கர் காணியில் ஐம்பதுக்கு மேற்பட்ட குடும்பங்களை உறைவிடம் அமைத்து வாழ்வாதார வழிவகுத்து நிர்வகிக்கும் ஓர் நிர்வாகக் கட்டமைப்பு.

பூங்காவினுள் அமைந்துள்ள தபோதனர் விடுதி (குருமூர்த்த மண்டபம்)

இதனை நிர்வகிப்பவரும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர் என்பதையும் அறிய முடிந்தது.

ஆக வெறும் வழிபாடோடு நில்லாது எமது சந்நிதியான் ஆச்சிரமம், துர்க்காபுரம் போன்று அறப்பணிகளும் செய்யும் ஓர் ஆலயமாக கிழக்கில் அமைந்துள்ளதை அறிய முடிந்தது.

எமது அடுத்த தரிசன இலக்காக மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரர் ஆலயமாக இருந்ததால் எமது வழிபாட்டு நேரத்தைக் குறுக்கி 11.05 மணிக்கு விட்டுப் பிரிய மனமின்றி எம் பயணத்தைத் தொடர்ந்தோம். தெரு கார்பெற்றாகவே அமைந்திருந்ததால் சரியாக 11.35 மணிக்கு அமிர்தகழி மாமாங்கேஸ்வரர் ஆலயத்தை அடைந்தோம். நாம் இவ்வாலயத்தை அடைந்த நேரம் கொடியேற்றத்திற்காக மூலவர் பரிவார மூர்த்திகளுடன் எழுந்தருளி தம்ப மண்டபத்தில் வீற்றிருந்தார். அந்தணச் சிவாச்சாரியார்களின் வேதமந்திர ஒலி விண்ணளாவ தவில் நாதஸ்வரக் கலைஞர்களின் ராக ஆலாபனை அனைவரையும் ரசிக்க வைக்க ஒலிபெருக்கிகளினூடாக ஒரே ஆனந்த ஒலி அதிர்வுகளையும் ஓர் புதிய உலகிற்கு இட்டுச் சென்றுகொண்டிருந்தது. அடியார் கூட்டமோ அலைமோதிய வண்ணமிருந்தது. நாம் ஒருவாறு எம்பெருமானின் கொடியேற்றத்தைக் காணக்கூடியதாக தம்ப மண்டபத்தடியில் ஓர் மூலையில் சென்று நின்றோம். கால் வைக்க இடமின்றி மண்டபத்திலுள்ளே ஆண்கள் பெண்கள் குழந்தைகள் அடியார்கள் எங்கள் நல்லூர் முருகனின் கொடியேற்ற உற்சவத்தில் கூடியிருப்பதுபோல் கூடியிருந்தனர்.

ஆலய மண்டப கூரையும் தற்பொழுது எங்கள் ஆலயங்களைப்போன்று சீமெந்து வில்லு மண்டப அமைப்பின்றி பழைய பாணியிலேயே மிக விசாலமாக உறுதியான கூரை ஓடுகளால் வேயப்பட்டிருந்தமை இதன் தொன்மையைப் பறைசாற்றி நின்றது. அடியார்களின் அரோஹரா கோஷத்துடன் மெல்ல மெல்ல கொடி ஏறுகிறது. சரியாகத்

**போகாமல் இருப்பதைவிடத் தாமதமாகப் போவது நன்று.**

தன் கொடியேற்ற நிகழ்வைக் கண்டு களிக்க எம்மை சரியான நேரத்தில் அழைத்த மாமாங்கேஸ்வரரின் மகிமையை எண்ணிப் பார்த்து அடியார்கள் எல்லோரும் பரவசப்பட்டனர். இந்நிகழ்வும் எமது பிரயாணத் திருவருட்பேற்றிற்கு ஓர் சான்றாக அமைந்ததை அடியார்கள் தமக்குள் பேசிக்கொண்டனர்.



மெதுவாக வெளியேவந்து அப் பெரு வீதியின் அழகைப் பார்த்தோம். அதன் ஈசானத்தில் மிகப் பிரமாண்ட மான ஓர் தீர்த்தக்கேணி அமைந் துள்ளது. ஒரு புறத்தில் அடர்ந்து செழித்து வளர்ந்த தாமரைக் கொடிகள் தமக்கேயுரிய அழகோடு மலர்களும் இலைகளுமாக காட்சி தந்தன. ஆழத் திற்குச் செல்லவேண்டாமென்ற அறிவித் தல்வேறு காணப்பட்டது. ஏறக்குறைய $2\frac{1}{2}$ - 3 பரப்பு விஸ்த்தீரணமுள்ள ஓர் பெரிய தடாகமாக மாமாங்கத் தீர்த்தக் கேணி அமைந்திருந்தது. வெளிப்படி யில் நின்றபடியே எம்மில் பல அடியார் கள் தீர்த்தத்தை தெளித்து அருந்திய பின் நேரத்தைக் கணக்கிற்கொண்டு மதிய உணவிற்காகப் புறப்பட்டோம். இங்குள்ள நிர்வாகத்தினருடன் எமது ஆச்சிரம சுவாமிகள் தொடர்பு கொண் டிருந்த பொழுதிலும் எம்பெருமானின் வீதிஉலா முடிந்த பின்பே அவ்வொழுங் கில் பங்குபற்ற முடியும் என்றதினால் மாற்றொழுங்காக ஓர் சைவ போசன சாலையில் எல்லோர்க்கும் உணவைப்பெற சுவாமிகள் யோசித்தார். இடமோ புதிது எல்லோரும் ஒரே நேரத்தில் அமர்ந்து சாப்பிட வசதி..... இப்படியான ஓர் போசனசாலை.... என யோசித்தபொழுது, வல்வெட்டித்துறையைச் சேர்ந்த ஓர் இளைஞன் சுவாமிகளின் உறவினர் வழிகாட்டியாக எமது வாகனத்திலேயே எம்மோடு வந்து, அருமையான அழகான நவீன பாணியில் அமைந்த ஓர் போசன சாலைக்கு எம்மை அழைத்துச் சென்றார்.

மீன்பாடும் தேன் வாவியின் அருகில் அமைந்துள்ள ஸ்ரீ கிருஷ்ணா சைவபோசன சாலையில் அனைவரும் ஒரே நேரத்திலும் சாப்பிடக்கூடியதாக அமைந்தது. தயிர், இரசம், சாதம், பாயாசம் எனவொரு விமரிசையான சைவ போசனத்துடன் வெள்ளித் தட்டில் விருந்துண்டு நிறைவாக அனைவரும் பீடாவும் சுவைத்து களைப்புத் தீர்த்து, எம்மை அழைத்து வந்த தம்பிக்கும் நன்றிகூறி பி.ப 1.30 மணியளவில் எமது பயணம் தாந்தா மலையை நோக்கித் தொடர்ந்தது.

(தொடரும்...

துன்பங்களை மற, துன்பம் செய்தவனை ஒருநாளும் மறவாதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பே சிவம்! அன்பே அறம்!!

– திரு செ. பாலச்சந்திரன் அவர்கள் –

மூவடியால் உலகளந்தவன் கண்ணபரமாத்மா. ஈரடியால் உலகையே ஈர்த்தது திருக்குறள்.

“அன்பின் வழியது உயிர் நிலை அஃ.திலார்க்கு
என்பு தோல் போர்த்த உடம்பு” என்று திருவள்ளுவர் திருக்குறள் வாயிலாக விளக்குகிறார். சிவம் என்பதன் பொருள் மங்கலம். சிவம் என்பதன் பொருள் நன்மை. எனவேதான் முக்காலமும் உணர்ந்த முனிவர் எக்காலத்துக்கும் உதவுவதற்காகத் திருமந்திரம் என்னும் பெயரில் பத்தாவது திருமுறையாகத், தமிழ் ஆகமமாகத் தந்தருளியுள்ளார். பன்னிரு திருமுறைகளில் பத்தாவது திருமுறையாக இடம்பெற்ற திருநூல் திருமந்திரம். திருமுறை என்றால் அன்புநூல்; திருமுறை என்றால் அறிவுநூல்; திருமுறை என்றால் பக்திநூல்; திருமுறை என்றால் தெய்வத்தன்மை வாய்ந்த நூல்; திருமுறை என்றால் முத்திகொடுக்கும் நூல்.

திருமுறையைப் பன்னிரண்டாக வகுத்த சான்றோர் தெய்வத்தின் ஆரம் எனத் தேவாரத்தினையும், தெய்வ வாசகம் என திருவாசகத்தையும், தெய்வ இசைப் பாடல் என திருவிசைப்பாவையும், தெய்வத்தன்மை வாய்ந்த மந்திரமாகத் திருமந்திரத்தையும், அன்பால் நிறைந்த களஞ்சியமாகப் பெரியபுராணத்தையும் முறைப்படுத்தியுள்ளனர். ஆனால் அன்பு பற்றி மிக அழகாக எடுத்துக்கூறியவர் திருமூலர். அன்பையும் சிவத்தையும் வெவ்வேறாகப் பார்ப்பவர்கள் அறிவிலிகள் என்கிறார். அன்பு பற்றி யார் பூரணமான அறிவைப் பெறுகிறாரோ, அவர் அன்பு பற்றிய அனுபூதியினூடாகச் சிவம் ஆகின்றார் என அழகாகக் குறிப்பிடுவார்.

“அன்பு சிவமிரண் டென்ப ரறிவலார்
அன்பே சிவமாவ தாரு மறிகிலார்
அன்பே சிவமாவ தாரு மறிந்த பின்
அன்பே சிவமா யமர்திருந்தாரே”

(திருமந்திரம்)

அன்புதான் சிவம். அதனால் அன்பினை உள்ளத்தில் இருத்தி அதனை எப்பொழுதும் நினைந்து செயற்படுதல் நம் கடமையாகும். அன்பையே மலராகவும், பத்திரங்களாகவும், நீராகவும், மந்திரங்களாகவும் கொண்டு அர்ச்சிக்கலாம்; படையல் செய்யலாம். பிரசாதத்தினை தமர், பிறர் என்ற வேறுபாடு இல்லாது எல்லோருக்கும் சமமாக வழங்கலாம். இவ்வாறு கொடுப்பதில் ஏற்படும் ஆனந்தம் எல்லையற்றது. இதனாலேயே குணங்களில் சிறந்த குணம் கொடைக்குணம் என்பர் சான்றோர்.

“......... தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்” என்கிறார் திருமூல நாயனார். சிவத்தியானமாக, சிவவழிபாடாகக் கருதித் தினமும் பிற உயிர்கள்மீது அன்பு செய்து வரவேண்டும். அதுவே அறமுமாகும். அப்போதுதான் அது மாபெரும் சக்தியாக அமையும்.

**கற்காமல் இருப்பதைவிடப் பிறக்காமல் இருப்பதே நல்லது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பினால் ஆகாதது ஒன்றும் இல்லை. அன்பு வாழ்வுதான் சைவசமய வாழ்வு. அன்பு நெறியே சைவநெறி.

"நெக்கு நெக்கு நினைப்பவர் நெஞ்சுளே
புக்கு நிற்பர் பொன்னார் சடைப்புண்ணியன்
பொக்க மிக்கவர் பூவுநீரும் கண்டு
நக்கு நிற்பர் அவர் தம்மை நாணியே"

(திருநாவுக்கரசர் தேவாரம்)

இறைவன் எவ்வழி அவ்வழியிலே அடியாரும் ஒழுக வேண்டும். அதுதான் உண்மைச் சைவர்கள் ஒழுகும் வழி. இறைவன் அன்பே வடிவானவர். எனவே சைவர்களும் அவ்வழி நின்று வாழவேண்டியது முறையாகும்.

சைவசமயத்தின் நோக்கம் உயிர்கள் கடவுளை அடைதலாகும். இதனை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் "நாம் இறைவனை வணங்கி முத்தியின்பம் பெறுவதே எமது இலட்சியம்" ஆகும் என்றார். அதற்குச் சைவர்கள் கடவுள்மீது பக்தி செலுத்துதல் வேண்டும். கடவுளைக் காலையிலும் மாலையிலும் மற்றும் வேளைகளிலும் பூசித்தல், தியானித்தல், திருக்கோயிலில் வழிபாடு செய்தல், அவன்புகழ் பாடுதல், பரவுதல் முதலியனமூலம் பக்திசெலுத்தலாம்.

பக்தி சூத்திரம் செய்த நாரதமுனிவர் "பிறவிடயங்களில் செல்லும் புலனை இறைவனிடம் திருப்புதல் பக்தி" எனக் குறிப்பிடுவார். இதனை,

"வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும்
தாழ்த்தச் சென்னியுந் தந்த தலைவனைச்
சூழ்த்த மாமலர் தூவித் துதியாதே
வீழ்த்த வாவினையேன் நெடுங்காலமே"

எனத் திருநாவுக்கரசு நாயனார் தேவாரம் வாயிலாக அறியலாம். மேலும் "திருவங்கமாலை" என்ற பதிகத்தின்மூலம் ஒவ்வொரு அங்கமும் இறைவனை வழிபடுவது கடமையாகும். எனக் கோடிட்டுக் காட்டுகின்றார். அதன் ஆரம்ப அடிகள் வருமாறு:

"தலையே நீ வணங்காய்....."
"கண்காள் காண்மின்களோ....."
"மூக்கே நீ முகரலாய்....."
"வாயே வாழ்த்து கண்டாய்....."
"செவிகாள் கேண்மின்களோ....."
"கைகாள் கூப்பித் தொழுமின்....."
"கால்களாற் பயன் என்கொல்...."
"நெஞ்சே நீ நினையாய்....."

(4ஆம் திருமுறை)

பிற உயிர்களுக்கு அன்பு செய்தல், பேணுதல் என்பன அன்பே வடிவான கடவுளுக்குப் பிரியமான தொண்டாக அமையும். அதனூடாகச் சமய நோக்கமான கடவுளைப் பற்றுதல் என்பதை இலகுவில் அடைய முடியும். எல்லா நன்மைகளும் அன்பில் இருந்துதான் ஊற்றெடுக்கின்றன. அன்பே சிவம். எல்லாத் தீமைகளும் எப்போது உருவாகின்றன?

பெருந் திட்டங்கள்கூடச் சிறிது பொறுமையின்மையால் சிதறிவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பு மறுக்கப்படும்போது தீமைகள் உருவாகின்றன. அன்பின்மை "சிவநிந்தை" ஆகும். அது சுயநலத்தை வளர்க்கின்றது. சிவத்தை மறுப்பவர்கள் அன்பை மறுக்கின்றார்கள். அன்பை மறுப்பவர்கள் வாழ மறுக்கிறார்கள், என்னும் உண்மையைச் சைவநெறி காட்டுகிறது.

"எவ்வுயிரும் என் உயிர்போல் எண்ணி இரங்கவும் நின்
தெய்வ அருட்கருணை செய்யாய் பராபரமே"

எனத் தாயுமானவர் இறைவனை வேண்டுகின்றார். எல்லா உயிர்கள்மீதும் அன்பு செலுத்துவதையும், இரக்கம் காட்டுவதையும் சைவர்கள் வாழ்க்கைப் பழக்கமாக்கிக் கொள்ள வேண்டும்.

சிந்தனை, பேச்சு, செயல் என்பவற்றினால் அன்பு வெளிப்படும்போதுதான் சிவதரிசனம் செய்வதாக அமைகின்றது. அப்போதுதான் சர்வம் சிவமயம் என உணரப்படும்.

"யாவர்க்குமாம் இறைவற்கொரு பச்சிலை
யாவர்க்குமாம் பசுவிற்கொரு வாயுறை
யாவர்க்குமாம் உண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்குமாம் பிறர்க்கின்னுரை தானே"
(திருமந்திரம்)

சிவபெருமானின் திருநாமங்களே அவரின் அன்பைப் புலப்படுத்துவனவாய் உள்ளன. தியாகேசர் எனவும், வைத்தீஸ்வரன், கருணாகரமூர்த்தி, தாயுமானவர், நீலகண்டர் எனவும் பல நாமங்களை உடையவர். திருநாவுக்கரசு நாயனார், சுந்தரமூர்த்தி நாயனார் என்பவர்க்குத் தாமே பொதிசோறு கொடுத்துப் பசிப்பிணி போக்கியவர் சிவபெருமான். எனவே சைவர்கள் ஆகிய நாமும்,

"பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல்....." முறையாகும்.

"பசித்தோர் முகம் பார்....." என்றார் பட்டினத்தடிகள்.

அன்பே சொருபமாய் விளங்கும் யாவும் வணக்கத்துக்குரியவை. அந்த வகையில் கடவுள், தாய், தந்தை, பெரியோர், குரு ஆகியோர் வணக்கத்திற்குரியவர்கள் ஆகின்றனர். ஆனால் சைவம் அதற்குமேலே மரம், செடி, கொடி அனைத்திலும் இறைவனைக் காண்கிறது. கல்லிலே கடவுளைக் காண்கிறது.

"பாரொடு விண்ணாய்ப் பரந்த எம்பரனே....."
என்கிறார் மணிவாசகப் பெருமான்.

எம்மீது அன்பு கொண்டு நாம் உய்யும் வண்ணம் தனு, கரண, புவன போகங்களை இறைவன் எமக்குத் தந்துள்ளான். அதற்குப் பிரதியுபகாரமாக நாம் என்ன செய்ய வேண்டும்? மனம், மெய், மொழிகளால் அவன் வடிவில் இருக்கும் உயிர்களுக்குச் சேவை செய்ய வேண்டும்.

"மக்கள் சேவை மகேசன் சேவை" என்பர். ஆனால் விருப்பு வெறுப்பற்ற அவனைப் பற்ற நாமும் கருமத்தைச் செய்தல் வேண்டும். அதில் பற்றுவைக்கக் கூடாது என்கிறது கீதாபாடியம். இதுவே "கர்மயோகம்" என்கிறது சைவசித்தாந்தம். சரியை நெறியே சரியான ஆரம்பநெறி என்கிறது. அடுத்து கிரியை, யோகம், ஞானம் எனப் படிமுறையாகக் கூறுகிறது. இதனைத் தாசமார்க்கம், சற்புத்திர மார்க்கம், சக மார்க்கம், சன்மார்க்கம் என விளக்குகிறது.

**விவேகம் வீரத்தின் சிறப்பான பகுதி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுதி நிலையான ஞானநெறி, சன்மார்க்கநெறி எனப்படுகிறது. "எல்லாம் அவன் செயல்" என்னும் பக்குவத்துக்குள்ளாகி சத்தினிபாதம் என்னும் இறையருள் வீழ்ச்சியில் திளைத்து நிற்கும் நிலையாகும். பட்டினத்தடிகள்,

"என் செயலாவது யாதொன்றுமில்லை இனித் தெய்வமே!
உன் செயலாவதொன்றென்றே உணரப் பெற்றேன்....."

என இரங்கி நிற்பதை நோக்கலாம்.

அபிராமிப்பட்டர்.... "அன்பர் என்பவர்க்கே கனத்தரும் பூங்குழலாள் அபிராமி கடைக் கண்களே" என்கிறார். தாயுமானவ சுவாமிகள், "அன்பர் பணி செய்ய என்னை ஆளாக்கி விட்டால், இன்பநிலை தானே வந்தெய்தும் பராபரமே" என்கிறார். மாணிக்கவாசக சுவாமிகள் பிடித்தபத்து என்னும் பதிகத்தில்,


"அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே....."

என்று ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்குவதை நோக்கலாம். அன்பு நெறியை மேற்கொள்வதன்மூலம் அறவாழ்வுக்கு மனிதன் ஆளாகின்றான். இது இன்பநிலையை அடையச் சிவகதியைப் பெற ஏதுவாகின்றது. அன்பின் வழி கருணையும், கருணையின் வழி அருளும் பெற அருள் ஒளி பிரகாசித்து அருளாளராக மாறலாம். இவ்வாறு மாறியபின் அன்பே சிவமாய் அமர்ந்திடுவர்.

இதற்கு உதாரணமாகப் பட்டினத்தடிகள் அன்புடன் சிறுவர்களுடன் விளையாடிச் சிவலிங்கமாகத் திருவொற்றியூரில் அமர்ந்ததை அவர் வரலாறுமூலம் காணலாம்.

## மறக்கமுடியாத மாமனிதர் மகேஸ்வரன்
## ஜனவரி 1 அவரது நினைவு நாள்

மகேஸ்வரன் மறைந்து ஐந்து ஆண்டுகள் ஓடி மறைந்தாலும், ஒவ்வொரு ஜனவரி 1ஆம் தேதியும் உணர்வு பூர்வமாக நினைவு கூரப்படும் மாமனிதராக உயர்ந்து நிற்கிறார். இந்து கலாச்சார அமைச்சராக அவர் இருந்தபோது எல்லாச் சைவக் கோவில்களுக்கும் அவர் தன்னாலான உதவிகள் அனைத்தையும் செய்து கொடுத்தார். அதனால் நம் மக்களின் மனதில் நீங்கா இடம்பெற்று என்றும் நினைவில் வாழ்கிறார்.



செல்வச்சந்நிதி வேலவனின் புதிய சித்திரத்தேர் உருவாக்கத்திலும், புதிய பூங்காவன மண்டப நிர்மாணத்திலும் அவர் ஆற்றிய உதவிகள் சந்நிதி முருகன் அடியார்கள் மனதில் இன்றும் மறையாமல் உள்ளது.

வாழும் காலத்தில் சந்நிதியான் ஆச்சிரமத்தோடு அவர் கொண்டிருந்த ஈடுபாடும் ஆற்றிய உதவிகளையும் ஆச்சிரமம் என்றும் நன்றியோடு நினைவு கூர்கிறது.

என்றும் அவர் நாமம் வாழ்க!
ஓம் சாந்தி! சாந்தி !! சாந்தி!!!

**மற்றவர்களைக் கீழே தள்ளிவிட்டு நீ ஏணியில் ஏற முயற்சி செய்யாதே.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவலர் பக்கம்: (தொடர்ச்சி...

# சைவ சமய வினா விடை

– ஆறுமுகநாவலர் –

## 9. சிவலிங்கவியல்

225. பெண்கள், தாம் பிரசவித்த சூதகம் தமக்குரியார் இறந்த ஆசௌசம், வியாதி இவைகள் வரின், யாது செய்தல் வேண்டும்?

வருணத்தாலும் தீக்ஷையாலும் தம்மோடொத்தவரைக் கொண்டு பூசை செய்வித்தல் வேண்டும்.

226. ஆசௌசம், வியாதி முதலியவை வந்தபோது பிறரைக் கொண்டு பூசை செய்வித்தவர் யாவரும், ஆசௌச முதலியவை நீங்கியபின் யாது செய்தல் வேண்டும்?

பிராயசித்தத்தின் பொருட்டு அகோரத்தை முந்நூறு உருச் செபித்துத் தாம் பூசை செய்தல் வேண்டும்.

227. சிவலிங்கம் காணாவிடத்து யாது செய்தல் வேண்டும்?

அந்தரிகையாக பூசை செய்து, பால், பழம் முதலியவற்றை உண்டு, நாற்பது நாள் இருத்தல் வேண்டும். அவ்விலிங்கம் வாராதொழியின் வேறொரு லிங்கத்தை ஆசாரியர் பிரதிட்டை செய்துதரக் கைக்கொண்டு, பூசை செய்தல் வேண்டும். அதன்பின் வந்ததாயின் அவ்விலிங்கத்தையும் விடாது பூசை செய்தல் வேண்டும்.

228. சிவலிங்கப் பெருமானுக்கு விஷேச பூசை செய்யத்தக்க காலங்கள் எவை?

பஞ்சாக்ஷரவியலிலே சொல்லப்பட்டவை முதலிய புண்ணிய காலங்களும் சென்மத்திரயங்களுமாம். இன்னும் மார்கழிமாச முழுதினும் நாடோறும் நித்திய பூசையேயன்றி அதற்குமுன் உஷத் கால பூசையும் பண்ணல் வேண்டும். சிவராத்திரி தினத்திலே பகலில் நித்திய பூசையேயன்றி இராத்திரியில் நான்கு யாம பூசையும் பண்ணல் வேண்டும். (சென்மத் திரயங்கள்; பிறந்த நக்ஷத்திரமும் அதற்குப் பத்தாம் நக்ஷத்திரமும், அதற்குப் பத்தாம் நக்ஷத்திரமுமாம்.)

229. சென்மத்திரய பூசையால் வரும் விஷேச பலம் என்ன?

சென்மத்திரயந்தோறும் சிவலிங்கப்பெருமானுக்குப் பதமந்திரங்கொண்டு பாலினாலும், சர்க்கரையினாலும் விஷேசமாக அபிஷேகஞ் செய்து, சுகந்தத் திரவியங்கள் கலந்த சந்தனக் குழம்பு சாத்திப், பாயச முதலியன நிவேதனஞ் செய்துகொண்டுவரின், உற்பாதங்களும், பயங்கரமாகிய கிரக பீடைகளும், சகல வியாதிகளும் நீங்கும்.

**நீதி என்பது மனிதனுக்குரிய பண்பு.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ௰. நித்திய கருமவியல்

230. நாடோறும் நியமமாக எந்த நேரத்திலே நித்திரை விட்டெழுதல் வேண்டும்?

சூரியன் உதிக்க ஐந்து நாழிகைக்கு முன் நித்திரை விட்டெழுவது உத்தமம். மூன்றேமுக்கால் நாழிகைக்கு முன் எழுவது மத்திமம்; உதயத்தில் எழுவது அதமம்.

### சிவத் தியானாதி

231. நித்திரை விட்டெழுந்தவுடன் யாது செய்தல் வேண்டும்?

சலம் வாயிற்கொண்டு இடப்புறத்திலே கொப்புளித்து, முகத்தையுங் கை கால்களையுங் கழுவி, ஆசமனம் பண்ணி, வடக்கு முகமாகவேனும், கிழக்கு முகமாகவேனும் இருந்து விபூதி தரித்துக்கொண்டு, குரு உபதேசித்த பிரகாரம் சிவபெருமானைத் தியானித்துச் சிவமூல மந்திரத்தை இயன்றமட்டுஞ் செபித்து, அருட்பாக்களினாலே உச்ச விசையோடு தோத்திரம் செய்தல் வேண்டும்.

232. சிவத்தியான முதலியவை செய்தபின் செய்யத்தக்கவை யாவை?

அவசியகருமம், சௌசம், தந்த தாவனம், ஸ்நானம் சந்தியாவந்தனம், சிவபூசை, சிவாலய தரிசனம், சிவசாத்திர பாராயணம், தேவார, திருவாசக பாராயணம், மத்தியான சந்தியாவந்தனம், போசனம், சிவசாத்திர படனம், சாயங்கால சந்தியாவந்தனம், சிவாலய தரிசனம், சிவபுராண சிரவணம், சயனம் என்பவைகளாம்.

### அவசிய கருமம்

233. மலசலமோசனஞ் செய்யத் தக்க இடம் யாது?

திருக்கோயிலெல்லைக்கு நானூறு முழ தூரத்தினதாய், ஈசான திக்கொழிந்த திக்கினிடத்தாய் உள்ள தனியிடமாம்.

234. மலசல மோசனஞ் செய்யத் தகாத இடங்கள் எவை?

வழி, குழி, நீர்நிலை, நீர்க்கரை, கோமயம் உள்ள இடம், சாம்பர் உள்ள இடம், சுடுகாடு, பூந்தோட்டம், மரநிழல், உழுத நிலம், அறுகம் புல்லுள்ள பூமி, பசுமந்தை நிற்கும் இடம், இடி விழிடம், காற்றுச் சுழலிடம், புற்று, அருவி பாயும் இடம், மலை என்பவைகளாம்.

235. மலசல மோசனம் எப்படிச் செய்தல் வேண்டும்?

மௌனம் பொருந்திப், பூணூலை வலக்காதிலே சேர்த்துத் தலையையும், காதுகளையும் வஸ்திரத்தினாலே சுற்றிப் பகலிலும் இரண்டு சந்தியா காலங்களிலும் வடக்கு முகமாகவும், இரவிலே தெற்கு முகமாகவும், நாசி நுனியைப் பார்த்துக் கொண்டிருந்து, மலசல மோசித்தல் வேண்டும். சந்தியாகாலம் இரண்டாவன: இராக்காலத்தில் இறுதி முகூர்த்தமும் பகற்காலத்தின் இறுதி முகூர்த்தமுமாம்.

(முகூர்த்தம்- இரண்டு நாழிகை) (தொடரும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்நிதியான் ஆச்சிரமத்தில் திருவாசக விழா
## -ஒரு கண்ணோட்டம்-

சந்நிதியான் ஆச்சிரமம் - சைவ கலை பண்பாட்டுப் பேரவையினரால் வருடாந்தம் நடாத்தப்பட்டு வருகின்ற "திருவாசக விழா" 14.12.2013 சனியன்று ஆச்சிரம மண்டபத்தில் வெகு சிறப்பாக நடந்தேறியது. திருவாசக விழாவினை முன்னிட்டு ஆச்சிரம வளாகம் வாழை - தோரணம் - பூரண கும்பம் என சிறப்பு அலங்காரம் பெற்றிருந்தது. காலையில் சந்நிதி வேலவனுக்கு நடைபெற்ற விசேட அபிஷேக - ஆராதனைகளைத் தொடர்ந்து, சந்நிதியிலிருந்து நால்வர் திருவுருவப் படமும், திருவாசக ஏடுகளும் அலங்கரித்த




கேடகத்தில் வைத்து தொண்டர்கள் தோளிற் சுமந்துவர, நல்லை ஆதீனம் அவர்களும், ஆறு. திருமுருகன் அவர்களும் கூடவே நடந்துவர, பின்னே திருவாசகம் ஓதியபடி மாணவர்கள்- ஆண்கள், பெண்கள் பின்தொடர்ந்துவர நால்வர் திருவுருவப்படம் ஆச்சிரம வாசலை வந்தடைந்தது. பூரண கும்பம் வைத்து, தீப ஆராதனை காட்டி வரவேற்கப்பட்ட நால்வர் திருவுருவப்படம் ஆச்சிரம அலங்கார மேடையில் வைக்கப்பட்டது. பாடசாலை

அரைகுறை படிப்பு என்றுமே ஆபத்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவ மாணவியர், பெற்றோர் விழாவிற்கு வருகை தந்த பார்வையாளர்கள் என நூற்றுக் கணக்கானோர் மண்டபத்தில் அமர்ந்து கொண்டதும் விழா ஆரம்பமானது.





சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் தலைவர் திரு கு. அருணகிரிநாதன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவிற்கு, நல்லை ஆதீன குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் ஆசியுரை வழங்கினார்கள். அதனைத் தொடர்ந்து, செஞ்சொற் செல்வர் திரு ஆறு. திருமுருகன் அவர்களின் சிறப்புரை திருவாசக விழாவிற்கு முத்தாய்ப்பாக அமைந்தது. மணிவாசகரின் மணிமணியான பாடல் வரிகளை- திருவாசகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் எடுத்தாண்டு, விளக்கி, உரைசெய்த ஆறு. திருமுருகன் ஐயா அவர்களின் கருத்துக்கள் மிக ஆழமானவை. அசைவற்று அமர்ந்திருந்து ஐயா அவர்களின் உரையை சபையோர் செவிமடுத்தனர்.

நிலத்தை நம்பி வாழலாம். நிழலை நம்பி வாழக்கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசியுரை, சிறப்புரையினைத் தொடர்ந்து, ஆண்டு 6 மாணவி இரவீந்திரன் திலக்ஷனாவும், செல்வி குமாரசாமி தயாளினியும் "தேனினுமினிய திரு வாசகம்" பற்றி உரையாற்றினர். அதனைத் தொடர்ந்து முதுகலை மாணி செல்வி தனசொரூபி நவரெட் ணம் அவர்கள், பக்கவாத்திய சகி தம் நமச்சிவாயப் பதிகம், கீர்த்தித் திருவகவல் உட்பட திருவாசகப் பாடல்களை இனிமையாகப் பாடி சபையோரின் பாராட்டுதலைப் பெற் றார். ஹார்மோனியம் வாசித்த இசைக் கலைமணி நடேசு செல்வச்சந்திரன், மிருதங்கம் வாசித்த கலாவித்தகர் சதா வேல்மாறன், கடம் வாசித்த வித்துவான் பி. விதுரன் ஆகியோரின் பின்னிசை திருவாசகப் பாடல்களுக்கு இனிமை சேர்த்தது.





திருவாசக விழாவின் பிரதான அம்சமான பண்ணிசைப்போட்டி விழா நடைபெற்ற தேதிக்கு ஒருவாரம் முன்னரே நிறைவு பெற்றிருந்தது. ஆண்டு 5 முதல் ஆண்டு 10 வரையுள்ள மாணவர்களுக்காக பண்ணிசைப்போட்டி - எழுத்துப் பரீட்சை என இரு

**தொண்டு என்பது அடிமை வேலையன்று, அது தெய்வப்பணி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுதிகளாக நடாத்தப்பட்ட போட்டியில் குடாநாட்டின் பல்வேறு பாடசாலைகளிலிருந்தும் பல மாணவர்கள் கலந்து கொண்டனர். ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று இடங்களைப் பெற்ற வெற்றியாளர்களுக்கு பெறுமதிமிக்க பரிசில்கள், சமய நூல்கள், பணப் பரிசில் என்பன வழங்கப்பட்டன. இதைவிட கூடுதல் தரத்தினை எய்திய 26 மாணவ மாணவியருக்கு ஆறுதல் பரிசுகளும் வழங்கப்பட்டன. பரிசில் வழங்கும் நிகழ்வினை நல்லை ஆதீனம் அவர்கள் ஆரம்பித்து வைக்க, தொடர்ந்து, ஆச்சிரமத்துடன் நெருங்கிய ஈடுபாடு கொண்ட பலரும் பரிசில்களை வழங்கி மாணவர்களை கௌரவித்தனர்.



விழாவின் இறுதி நிகழ்வாக, ஆச்சிரம சுவாமிகளின் நன்றியுரையினைத் தொடர்ந்து திருவாசக விழா இனிதே நிறைவு பெற்றது.

## வெற்றியீட்டிய மாணவர்கள் விபரம்

**ஆண்டு- 5**

1. யோகதாசன் அபிஷா (கிழவன்காடு கலா மன்றம்)
2. அ. அகல்விழி (தமிழ்க் கந்தையா வித். கந்தரோடை)
3. கு. மதுஷனா (தொண்டைமானாறு வீ.மகா வித்.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டு- 6

1. தயாளநீதினி குமாரசாமி (வேம்படி மகளிர் கல்லூரி)
1. அருளானந்தன் கம்சிகா (கிழவன்காடு கலாமன்றம்)
2. சிவானந்தன் வனிதா (கிழவன்காடு கலாமன்றம்)
3. திலக்ஷனா இரவீந்திரன் (கனகரெத்தினம் மகா வித்.)

ஆண்டு- 7

1. கேனுகா கருணாகரன் (அராலி சரஸ்வதி மகா வித்.)
2. கு. லவண்யா (தொண்டைமானாறு வீ. மகா வித்.)
3. ஸ்ரீ. லக்ஷாஜி (தொண்டைமானாறு வீ. மகா வித்.)

ஆண்டு- 8


1. தி. சுபாஸ் (பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்.)
2. வி. சாமந்தியா (தொண்டைமானாறு வீ. மகா வித்.)
3. கு. கல்ப்பனா (தொண்டைமானாறு வீ. மகா வித்.)

ஆண்டு- 9

1. கு. சயிந்தன் (தொண்டைமானாறு வீ. மகா வித்.)
2. வி. தனுஷா (தொண்டைமானாறு வீ. மகா வித்.)
3. யோ. விநுஜா (தொண்டைமானாறு வீ. மகா வித்.)

ஆண்டு- 10

1. ஜே. விவேகா (பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்.)
2. புஸ்கரணி இரவீந்திரன் (கனகரெத்தினம் மகா வித்.)




இறைவன் தரிசனமின்றி உலக வாழ்க்கை வீண்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழகத் திருக்கோயில் வரிசை:

# சூரியனார் கோவில்

– வல்வையூர் அப்பாண்ணா –

தமிழ் நாட்டிலேயே சிவசூரியப் பெருமானுக்குரிய தனிக்கோயில் அமைந்துள்ள ஒரே இடம், கும்பகோணத்திற்குக் கிழக்கே கும்பகோணம் - பூம்புகார் சாலையில் உள்ள சூரியனார் கோவிலாகும். கிரக தோஷ நிவர்த்திக்காக நவக்கிரக கோவில்களைத் தினமும் தரிசிக்கச் செல்லும் பல நூற்றுக்கணக்கான பக்தர்களுக்கு மிக முக்கிய மையம் இந்தச் சூரியனார் கோவில். இலங்கையிலிருந்தும் தென்னிந்திய சுற்றுலாப் பயணங்களை மேற்கொள்வோர், சூரியனார் கோவில் உட்பட நவக்கிரக கோவில்களைத் தரிசிக்கத் தவறுவதேயில்லை.

பிரதான வீதியிலிருந்து பிரிந்து செல்லும் அகன்ற பாதை நேரே, மேற்குப் பார்த்த கோபுர வாசலுக்குச் செல்கிறது. பாதையின் இரு மருங்கும் பல வீடுகளும், வீடுகளின் முகப்பினில் தாழ்வாரக் கடைகளும் காணப்படுகின்றன. எல்லாக் கடைகளிலும் ஒரே மாதிரியான பூசைப் பொருட்கள் விற்கப்படுகின்றன. எங்கள் இடங்களில் உள்ள பெரிய தட்டுப்பெட்டி அளவுகொண்ட பிரம்பினாலான வட்டத் தட்டுவத்தில் 10 தேங்காய், 10 வெற்றிலை, 10 பழம், சொரியலாகக் கொஞ்சம் பாக்குச் சீவல், ஒரு செந்நிறப் பட்டுத்துண்டு ஆகியவற்றிற்காக ரூபா 200 வரை கொடுத்து தட்டுவத்தை வாங்கிக் கொள்கிறார்கள். தரிசனம் முடிந்து திரும்பி வரும்போது, அதே கடையில் தட்டுவத்தை மீண்டும் ஒப்படைத்து ரூபா 10 திருப்பி வாங்கிக் கொள்கிறார்கள்.

மூன்று நிலைகள் கொண்ட அழகான கோபுர வாசலின் முன்பாக ஒரு தகரக் கொட்டகை காணப்படுகிறது. கோபுர வாசலினுள்ளே ஏழு படிகள் கீழிறங்கி மற்றவர்களுடன் நாமும் உள்ளே போகிறோம். நேராக, திறந்தபடியான அந்தப் பிரகாரத்தில் தம்பம்- பலிபீடம்- நந்தி ஆகியவை காணப்படுகின்றன. மண்டப முகப்பின்மேல் விளிம்பில் ஏழு குதிரைகள் பூட்டிய ரதத்தில் சிவசூரிய பகவான் பயணித்தபடியும், சூரியனின் தலைக்குப் பின்புறமாக சூரிய ஒளி வட்டமும், அந்த ஒளி வட்டத்தில் ஏனைய கிரகங்கள் வட்ட அமைப்பிலும் காணப்படும் பெரிய சுதைச் சிற்பம் அழகிய வா்ணத்தில் எழிலுறக் காணப்படுகிறது. சூரியனுக்கு உரிய நிறம் சிவப்பு. சூரியனார் கோவிலின் தலவிருட்சமான வெள்ளெருக்கு உட்பிரகாரத்தில் உள்ளது. கோவிலை அடுத்துள்ள சூரிய புஷ்கரணி தீர்த்தம் சிறப்பானது.

தென்மேற்கு மூலையில் (கோவில் மேற்குப் பார்த்தபடி உள்ளது) கிழக்கு நோக்கிய படியான பெரிய தனிச் சந்நிதியில் "கோள் தீர்த்த விநாயகர்" அமர்ந்துள்ளார். ஒன்பது கிரகங்களுக்கு ஒன்பதும், விநாயகருக்கு ஒன்றுமாக பத்துத் தேங்காய்கள் உட்பட ஏனைய பொருட்களுடனான தட்டுவத்தை, கைகளிலோ- அல்லது தோள்மீதோ- அல்லது தலைமீதோ சுமந்தபடி வரும் பக்தர்கள் நேராக விநாயகர் வாசலுக்கு வந்து சேருகிறார்கள். ஒவ்வொரு ஐந்து அல்லது ஆறு பேர் (தட்டுவம்) சேர்ந்ததும், கோயிற் குருக்கள் ஒரு

**கண்ணீர் என்பது துயரத்தின் மௌனமொழி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேங்காயை உடைத்து அர்ச்சனையை ஆரம்பிக்கிறார். அடுத்துவரும் ஐந்தாறு பேரைக் கவனிப்பதற்காக அடுத்த குருக்கள் தயாராகக் காத்திருக்கிறார். குருக்கள்மாரிடத்தில் இந்த விடயத்தில் ஒரு ஒழுங்குமுறை இருப்பது தெரிகிறது.

முன் மண்டபம், இடை மண்டபம், உள் மண்டபம் என மூன்று மண்டபங்கள் உண்டு. விநாயகருக்கான அர்ச்சனையை முடித்துக்கொண்டு தட்டுவத்தைச் சுமந்தபடி வரும் தோச நிவர்த்தி தேடி வருவோர் முன்மண்டபத்தின் பக்கவாட்டுப் படிகளினூடாக உள்ளே வருகிறார்கள். முன் மண்டபத்தினுள்ளே வடமேற்கு மூலையில் தெற்குப் பார்த்தபடியாக உள்ள காசி விஸ்வநாதர், விசாலாட்சியை வணங்குகிறோம். நடு மண்டபத்தில், கோவிலின் மூலவரான சூரியனை நோக்கியபடியுள்ள குரு (வியாழன்) பகவானைத் தாண்டி நேராக உள் மண்டபத்தில் உள்ள மூலவர் சந்நிதானத்தை அடைகிறோம். கருவறை வாசலில் இடது புறமாக சிறிய உருவமாக ஆறுமுகர் வீற்றிருக்கிறார். உள்ளே, கருவறையில் ஸ்ரீ சிவசூரியப் பெருமான் (விக்கிரகம் 4′ உயரமிருக்கும்) இடதுபுறம் உஷாதேவி, வலதுபுறம் பிரத்யுஷாதேவி எனும் சாயாதேவியுடன் நின்ற திருக்கோலத்தில் அருள் பாலிக்கிறார். அழகிய அலங்காரமும், சாந்தமான முகபாவமும், "வரவேண்டிய இடத்திற்கு வந்துவிட்டோம்.... இனி... எல்லாம் ஜெயமே..." என நிம்மதி கொள்ள வைக்கிறது. சூரிய பகவானுக்கு தட்டுவத்திலிருந்த சிவப்பு பட்டு சாத்தப்பட்டு ஒரு தேங்காய் உடைத்து அர்ச்சனை நடைபெறுகிறது.

நடு மண்டபத்தில் (இதனைக் குரு மண்டபம் என்றும் சொல்கிறார்கள்) சூரியனின் நேர் பார்வையில் சூரியனை நோக்கியபடி வீற்றிருக்கும் குரு (வியாழன்) பகவானுக்கும் தேங்காய் உடைத்து அர்ச்சனை நிறைவேறுகிறது. உள் மண்டபத்தின் இடது பக்கவாட்டுப் படிவழியாக உட்பிரகாரத்தின் தென்பக்க வீதியில் கால் பதித்துக் கீழே இறங்குகிறார்கள் தோஷ நிவர்த்தி வேண்டி வருவோர். (இந்த இடத்திலிருந்து இனிமேல் அப்பிரதட்ஷணமாக வீதியை வலம்வர வேண்டும்) சூரியனின் கர்ப்பக்கிரகத்தை ஒட்டியபடி, நவ நாயகர்களில் (சூரியன், வியாழன் போக) மீதமான எழுவரும் சனி, புதன், செவ்வாய், சந்திரன், கேது, சுக்கிரன், ராகு ஒரே அளவான தனித் தனிச் சந்நிதானங்களில் அமர்ந்து அருள் பாலிக்கின்றனர். கருவறையை ஒட்டியபடி நெருக்கமாக உள்ள இந்த சந்நிதானங்கள் இருக்கும் திசைகளும் (கருவறையிலிருந்து), சந்நிதானங்கள் நோக்கும் திசைகளும் கீழே பட்டியலிடப்பட்டுள்ளது.

| அமைவிடம் (கருவறையிலிருந்து) | | | பார்க்கும் திசை |
|---|---|---|---|
| தென் | மேற்கு - | சனி | மேற்கு |
| | தெற்கு - | புதன் | வடக்கு |
| தென் | கிழக்கு - | செவ்வாய் | கிழக்கு |
| | கிழக்கு - | சந்திரன் | கிழக்கு |
| வட | கிழக்கு - | கேது | கிழக்கு |
| | வடக்கு - | சுக்கிரன் | தெற்கு |
| வட | மேற்கு - | ராகு | மேற்கு |

தோச நிவர்த்தி வேண்டி வந்திருக்கும் குறித்த ஐந்தாறு பேருடன், குருக்கள்

**அதிகம் பேசுபவர்கள் செயல்புரிவதில்லை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு சந்நிதான வாசலிலும் தேங்காய் உடைத்து அர்ச்சனையை நிறைவு செய்து அப்பிரதட்சணமாகக் கோவிலை வலம் வருகிறார். இறுதியாக ராகு சந்நிதான அர்ச்சனையுடன் நவக்கிரக தரிசனம் நிறைவு பெறுகிறது. **இங்கே அமர்ந்துள்ள நவக்கிரக நாயகர்களின் கைகளில் ஆயுதங்கள் எதுவுமில்லை. அவர்கள் தத்தமது வாகனங்களில் ஆரோகணிக்கவில்லை. அனைவருமே அனுக்கிரக மூர்த்திகளாக வரமருளும் சாந்தமான முக பாவத்துடன் அமர்ந்திருப்பது சூரியனார் கோவிலின் தனிச்சிறப்பாகும்.**

இறுதியாக, ராகு சந்நிதானத்திற்கு மேற்குப் பக்கமாகவுள்ள சிறிய சந்நிதானத்தில் அமர்ந்துள்ள சண்டிகேஸ்வரரை வணங்குகிறோம். **இங்கே சூரியன் மூல மூர்த்தமாக இருப்பதால் இங்கு அமர்ந்திருக்கும் சண்டிகேஸ்வரருக்கும் "தேஜஸ் (ஒளி) சண்டிகேஸ்வரர்"** என்ற சிறப்புப் பெயருமுண்டு. **சண்டிகேஸ்வரர் தரிசனம் நிறைவெய்தியதும் (கவனிக்கவும்)** பிரதட்சணமாக நாம் பிரகாரத்தை வலம்வர, **தென்பிரகார சுவர் ஓரமாக, அதற்கென ஒதுக்கப்பட்ட நீண்ட மேடையில் பலநூறு நெய்தீபங்கள் எரிந்து கொண்டிருப்பதைப்** பார்க்கிறோம்.

நவக்கிரக நாயகர்களை வணங்கும் ஒழுங்கு முறை மீண்டும் சுருக்கமாகக் கீழே தரப்படுகிறது.

**விநாயகர்→ விஸ்வநாதர்- விசாலாட்சி→ சூரியன்(1)→குரு(2) (அப்பிரதட்சணமாக)→ சனி(3) → புதன்(4) → செவ்வாய்(5) → சந்திரன்(6) → கேது(7) → சுக்கிரன்(8) → ராகு(9) சண்டிகேஸ்வரர் (பிரதட்சணமாக) விநாயகர்.**

தோச நிவர்த்திக்காக அர்ச்சனைப் பொருட்களுடன் வந்தவர்களில் அநேகர் தட்டுவத்திலுள்ள நிவேதிக்கப்பட்ட பொருட்களை வசதியான இடங்களில் வைத்துவிட்டு, தட்டுவத்தினை மட்டும் கையில் எடுத்துக் கொள்கிறார்கள். **ஒரு சிலர் மட்டுமே இந்த அர்ச்சனைப் பொருட்களை வீட்டுக்கு எடுத்துச் செல்வதையும் காணமுடிந்தது.**

பிரதட்சணமான பிரகாரவலம் மீண்டும் விநாயகர் சந்நிதியில் நிறைவு பெற, விநாயகரை வணங்கி விடைபெற்று கோபுர வாசலினூடாக வெளியே வருகிறோம். அர்ச்சனைப் பொருட்கள் வாங்கிய பெட்டிக்கடையில் தனித் தட்டுவத்தைத் தவறாது கொடுத்து கடைக்காரர் தருவதை வாங்கிக்கொண்டு கோவில் வளாகத்தினைவிட்டு வெளியே நடக்கிறார்கள் பக்தர்கள். நாமும் அவர்களைத் தொடருகிறோம்.

மீண்டும் ஒரு திருக்கோவிலில் சந்திப்போமா...

## நவக்கிரக திருத்தலங்கள்

| | |
|---|---|
| சூரியன் | -சூரியனார் கோவில் |
| சந்திரன் | -திங்களூர் |
| செவ்வாய் (அங்காரகன்) | -வைத்தீஸ்வரன் கோவில், பழனி |
| புதன் | -திருவெண்காடு |
| வியாழன் (குரு) | -ஆலங்குடி |
| சுக்கிரன் | -கஞ்சனூர் |
| சனி | -திருநள்ளாறு |
| இராகு | -திருநாகேஸ்வரம் |
| கேது | -கீழப்பெரும்பள்ளம், காளகஸ்தி, கேதாரம். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானச்சுடர் 2013 மார்கழிமலர்

# தைமாத வாராந்த நிகழ்வுகள்

03.01.2014 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்
விடயம் :- "மங்கள இசை"
வழங்குபவர் :- மறவனூர் T.M. வாசகர் குழுவினர்

---

10.01.2014 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்
சொற்பொழிவு :- "கருதா மறவா நெறி"
வழங்குபவர் :- சுவாமி சித்ரூபானந்தா அவர்கள்
[ஸ்ரீ சாரதா சேவாச்சிரமம், பருத்தித்துறை]

---

17.01.2014 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்
விடயம் :- "இன்னிசை"
வழங்குபவர் :- திரு வே. ஞானசம்பந்தன் அவர்கள்
(பக்கவாத்திய சகிதம்)

---

24.01.2014 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்
சொற்பொழிவு :- "தேவி பாகவதம்" (தொடர்)
வழங்குபவர் :- திரு அ. குமாரவேல் அவர்கள்
[சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ்/ கல்லூரி வட்டுக்கோட்டை]

---

31.01.2014 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில்

# ஞானச்சுடர் தைமாத வெளியீடு


வெளியீட்டுரை :- திரு ஆறு. திருமுருகன் அவர்கள்
[தலைவர், துர்க்காதேவி தேவஸ்தானம்]
மதிப்பீட்டுரை :- ஆ. சிவநாதன் அவர்கள்
[அதிபர்]

193ஆவது மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிவு இல. QD/25/NEWS/2013

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முகப்புத் தோற்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org